மன்றம்

ஆசிரியர்:
இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

— 10 — 56

★

ஒலி 4

★





"முன்பே விளக்கினார் – நீ புரிந்துகொள்ளவில்லை!"

திராவிட முன்னேற்றக்கழக முன்னணிச் சொற்பொழிவாளர்களிலே ஒருவரான தோழர் ப. உ. சண்முகம் அவர்கள் மிக்க இளைஞராக இருக்கும்போதே திருவண்ணாமலை நகராட்சி மன்றத் தலைவராக ஆயினார். அவர் பொறுப்பேற்ற சில திங்களுக்குள்ளாகவே தம் அறிவாற்றல் திறமையின் விளைவால் பெரும் பெயரும் புகழும் பெற்றார்.

அவருடைய அருமை பெருமைகளைத் திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் பாராட்டவில்லை; மாற்றுக்கட்சியைச் சேர்ந்தவர்களும் மிகவாகப் பாராட்டினர். அவர் திராவிட இயக்கத்தில் நன்கு திளைத்த ஒரு இளைஞராக இருந்தபோதிலும், எல்லா அரசியல் கட்சிகளையும் பொது நோக்குடனேயே நோக்கி நடு நிலை நின்று செயலாற்றி வந்தார். எந்த அரசியல் கட்சியைச் சார்ந்த தலைவர்களாயிருந்தாலும் சரி, பிற பொதுப்பணித் தலைவர்களாய் இருந்தாலும்சரி நகராட்சிமன்றத்தின் சார்பாக அவர்களுக்கு வரவேற்பு அளிக்க ஓரிரு உறுப்பினர்கள் விரும்பினாலும் அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றிவைக்க தோழர் ப. உ. சண்முகம் அவர்கள் ஒருபோதும் பின்வாங்கியதில்லை. அந்த அளவுக்கு அரசியல் நாகரிகத்தையும், அரசியல் கண்ணியத்தையும் மிகப்பெருந்தன்மையோடு அவர் வளர்த்து வந்தார்.

தோழர் ப. உ. சண்முகம் அவர்கள் நகராட்சிமன்றத்தலைவரான துவக்கக் காலத்தில் அவரைப் பலப்பாராட்டிப் பேசிய மாற்றுக்கட்சிக்காரர்களில், காங்கிரசுக் கட்சியைச்சேர்ந்த தோழர் என் அண்ணாமலைப்பிள்ளை அவர்கள் முக்கியமான ஒருவ ராவார்.

அவர் ஒருமுறை தோழர் சண்முகம் அவர்களைப் பாராட்டிப் பேசும்போது, "எனக்கு அடுத்தபடி, திருவண்ணாமலையில், சண்முகந்தான் எனது வாரிசு!" என்னும் கருத்துப் படப் பேசினார்.

சிறிது காலத்துக்குப்பிறகு தோழர் ப. உ. சண்முகம் அவர்களுக்கும் காங்கிரசுக் கட்சிகாரர்களுக்கும் இடையே சச்சரவு எழும்ப, காங்கிரசுக்காரர்கள் தோழர் சண்முகம் அவர்களை இழித்தும், பழித்தும், கூறி வசைபாடத் தொடங்கினர். அதற்குத் தலைமை தாங்கியவர் தோழர் என் அண்ணாமலைப்பிள்ளை அவர்கள் தாம். அவர் தோழர் சண்முகம் அவர்களை வசைபாடிப் பேசும்போது, "சண்முகம் ஒரு மடையன்! முட்டாள்! முரடன்!" என்னும் கருத்துப்படப் பேசினார்.

தோழர் ப. உ. சண்முகம் அவர்கள், அறிஞர் அண்ணா அவர்களிடம், ஒருமுறை தோழர் என். அண்ணாமலைப்பிள்ளையைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது "அண்ணாமலைப்பிள்ளை முன்பெல்லாம் என்னை அவரது வாரிசு என்று கூறிக்கொண்டிருந்தார்; இப்பொழுது அவரே என்னை மடையன், முட்டாள், முரடன் என்றெல்லாம் பேசுகிறார்! என்று குறிப்பிட்டார். அப்பொழுது அண்ணாவைச் சுற்றிப் பலர் வீற்றிருந்தனர். அதனைக் கேட்டுக்கொண்டிருந்த அறிஞர் அண்ணா அவர்கள் தோழர் சண்முகம் அவர்களைப் பார்த்துப் புன்சிரிப்புடன் "அவர் முதலிலேயே உன்னிடம் அதைத்தான் விளக்கினார்; நீ அப்பொழுது புரிந்துகொள்ளவில்லை; நீ தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும் என்பதற்குத்தான் மீண்டும் ஒருமுறை வெளிப்படையாக விளக்கியுள்ளார்!" என்று கூறினார்கள்.

தோழர் சண்முகம் அவர்களும், ஏனையோரும் அண்ணாவின் கூற்றிலிருந்து ஏதும் புரிந்துகொள்ள முடியாமல் சற்று திகைத்திருந்தனர்.

அறிஞர் அண்ணா அவர்கள் அவர், "நமது வாரிசு நீதான்" என்று சொல்லிய போதே, உன்னை மடையன்-முட்டாள்-முரடன் என்று முடிவுகட்டியிருக்கிறார்போலும் என்று நீ புரிந்துகொண்டிருக்கவேண்டும்! அப்பொழுது நீ புரிந்துகொள்ளவில்லை! எனவேதான் உனக்கு விளங்கும்படி வெளிப்படையாக இரண்டாவதுமுறையும் கூறியிருக்கிறார்!" என்று சொல்லியவுடனே தோழர் சண்முகம் உள்பட கூடியிருந்தோர் அனைவரும் விழுந்துவிழுந்து கொல்லென்று சிரித்தார்கள்.

அறிஞர் அண்ணா அவர்களின் நயப்பாடு கொண்ட நகைச்சுவைக் கூற்றுக்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

மலர் 5 ★ (1—10—56) ★ இதழ் 11

ஒளி விளக்கு அணைந்தது!

நெல்லை மாவட்டத்தில், திராவிடமுன்னேற்றக்கழகத்தின் ஒளி பரப்பிப், புகழ்ச்சுடரைக் கொழுந்துவிட்டு எரியவிட்டுக்கொண்டிருந்த தூண்டா மணிவிளக்கு திடீரென்று அணைந்து விட்டது! இல்லை, இல்லை, அணைக்கப்பட்டு விட்டது! நாம் இருளிலே கிடந்து தவிக்கிறோம், திகைக்கிறோம்! கண்ணீர் மல்குகிறோம்! கசிந்து உருகுகிறோம்! என்ன செய்வது, ஏதுசெய்வது என்று புரியாமல் திண்டாடுகிறோம்! இழந்த ஒளியை மீண்டும் எப்படிப் பெறுவது என்று எண்ணி எண்ணி ஏங்குகிறோம்!

திராவிட முன்னேற்றக்கழகத்தின் அரும்பெரும் செயல்வீரர்களிலே ஒருவரும், நெல்லை மாவட்ட தி. மு. க. கிளைச் செயலாளரும், பொதுக்குழு உறுப்பினரும், பல்வேறு தொழிற் சங்கங்களின் தலைவரும், வி. வி. டி. பள்ளிக்கூட நிருவாகியும், தூத்துக்குடி நகராட்சி மன்ற உறுப்பினரும், நமது கெழுதகை நண்பரும் ஆன தோழர் கே. வி. கே. சாமி அவர்கள் 20-9-56 வியாழனன்று இரவு 9-45 மணிக்கு கயவர்கள் சிலரால் படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டார் என்ற செய்தி நம்மையெல்லாம் திடுக்கிடவைத்துத் திகைப்புறச்செய்ததோடு, ஆற்றொணாத்துக்கத்திலும் துயரத்திலும் ஆழ்த்திவிட்டது. துன்பக் கடலிலிருந்து எப்படி மீளுவோம், இழந்த இழப்பை எப்படி ஈடுசெய்வோம் என்ற கவலை நம்மையெல்லாம் வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக்கழகத்தைத் தாங்கி நின்ற சிறந்த தூண்களிலே ஒன்று சாய்ந்து விட்டது-வேண்டுமென்றே சாய்க்கப்பட்டு விட்டது என்ற செய்தியை நாடெங்கணும் உள்ள கழகத்தோழர்களும், கழக ஆதரவாளர்களும் கேட்டு அழுத கண்ணீரோடு, ஆற்றொணாத் துயருற்றுக் கிடக்கின்றனர். தோழர் கே. வி. கே. சாமி அவர்களைப் பிரிந்து வாடும் அவரது வயதுமுதிர்ந்த தந்தையாருக்கும், உடன்பிறந்தார்க்கும், உற்றார் உறவினர்களுக்கும், ஆருயிர்த் தோழர்களுக்கும் என்ன ஆறுதலை எப்படிச் சொல்லித் தேற்றுவது என்று புரியாமல் நாம் கண்கலங்கி நிற்கிறோம்.

தோழர் சாமி அவர்கள் சுமார் ஐந்தரை அடி உயரம், மெலிந்த தோற்றம், கறுத்த நிறம், குறுகுறுத்த பார்வை, வீர நடை, எடுப்பான உடை, எப்பொழுதும் சுறுசுறுப்பான அசைவு ஆகியவற்றைக் கொண்டவர். அறிவு, ஆற்றல், ஆண்மை, ஊக்கம், உணர்ச்சி, எழுச்சி, விடாமுயற்சி, செயலாற்றும் திறன், எடுத்த பணியை முடிக்கும் தன்மை, கட்டுப்படுதல், கடமையாற்றல், கண்ணியம் மேற்கொள்ளல், மாற்றாராயினும் யாவரோடும் அன்போடு பழகுதல், தொண்டர்களிடம் இன்மொழி பகர்தல், அவர்களை அன்போடு அணைத்துச் செல்லுதல், செய்வினை திருந்தச் செய்தல், சோம்பியிராமல் அல்லும்பகலும் பணியாற்றுதல், ஊர்ப் பொதுப்பணிகளுக்கு ஒத்துழைப்புத் தருதல், தன்னலங் கருதாது பொதுநலங் கருதுதல் போன்ற பண்புகள் அனைத்திற்கும் அவர் உறைவிடமாக விளங்கினார். அவர், தமது மதிப்பிற்குரிய யாரையும், அவர்கள் ஆண்டில் முதியவராக இருந்தாலும் இளையவராக இருந்தாலும், அவர்களை "அண்ணாச்சி! வாருங்கள்!" என்று அன்பு ஒழுகவே வரவேற்பார்; புன்முறுவலுடன் இன்மொழி பேசி இருப்பார்.

தோழர் சாமி அவர்கள் மிக்க இளஞ்சிறுவனாக இருக்கும்போதே இயக்கத்திடத்துத் தணியா ஆர்வமும், நீங்காப பற்றும் கொண்டு விளங்கினார். 1937-38-39 ஆண்டுகளில் இந்தி எதிர்ப்பு இயக்கம் மிகத் தீவிரமாகப் போராட்டம் நடத்தி வந்தபோதெல்லாம் தோழர் சாமி அவர்கள் தொண்டர்படையில் இணைந்து நின்று மிகத்தீவிரமாகச் செயலாற்றிவந்தார். அவ்விளம் வயதிலேயே அவர்காட்டிய ஆற்றலும், வீரமும், திறனும் இயக்கத்தவரைப் பெரிதும் கவர்ந்தன. ஒரு படையை அல்லது ஒரு தொண்டர் குழாமை அல்லது ஒரு இயக்கத்தைத் தலைமைதாங்கி நடத்திச் செல்லும் ஒரு தலைவருக்கு இருக்கவேண்டிய அரும் பண்புகளெல்லாம் தோழர் சாமி அவர்களிடம் அப்பொழுதே இருக்கக்கண்டு பலரும் வியந்து போயினர். எங்கும் எப்பொழுதும் அவரது தலைமையின் கீழ் அவரைச்சூழ்ந்து பலர் இருக்கவும், அவர் இடும் பணியை ஏற்றுச் சுறுசுறுப்பாக அவர்கள் செய்யவும் ஆன நிலைமை

பல் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அவரைப் பொறுத்து ஏற்பட்டிருந்தது. அது போலவே இயக்கத் தலைவர்கள் இடும் கட்டளையை, அப்படியே தலைமேற்கொண்டு செய்து முடித்திடும் பண்பும் அவரிடம் நிரம்பிக்கிடந்தது. அவர் தலைவருக்குத் தலைவராய்த் தொண்டருக்குத் தொண்டராய் எப்பொழுதும் காட்சி தந்து வந்தார்.

1944 ஆம் ஆண்டிலிருந்து, அதாவது நான் பொதுவாழ்வில் ஈடுபட்டுத் திராவிட இயக்கப் பிரச்சாரம் செய்யத் தொடங்கிய காலத்திலிருந்து தோழர் கே. வி. கே. சாமி அவர்களை நான் நன்கு அறிவேன். 1944 ஆம் ஆண்டில் தூத்துக்குடியில் நடைபெற்ற பன்னீர்ச்செல்வம் படிப்பகத்தின் ஆண்டுவிழாவில் கலந்து கொள்ள நான் முதன் முதலாகத் தூத்துக்குடி சென்றேன். அப்பொழுது தோழர் கே. வி. கே. சாமி அவர்கள் தான் முன்னின்று, ஆண்டுவிழா, ஊர்வலம், பொதுக்கூட்டம் ஆகியவற்றை மிகச் சிறப்பாக நடத்தினர். அப்பொழுதுதான் தோழர் சாமியின் அறிமுகம் முதன் முதல் ஏற்பட்டது. பிறகு அதே ஆண்டில் தூத்துக்குடியில் ஒரு மாநாடு நடைபெற்றது அதில் அவர் ஆற்றிய தொண்டு மிகப்பெரியது. பிறகு அதே ஆண்டில் சேலத்தில் நடைபெற்ற மாநிலமாநாட்டில் பெரியாருக்கு எதிராக அப்பொழுதிருந்த நீதிக் கட்சித்தலைவர்கள் குழப்பம் விளைவிக்கக் கருதிக் கொண்டிருந்தபோது, பெரியாருக்குப் பாதுகாப்பாகவும், மாநாட்டில் குழப்பம் ஏதும் ஏற்பட்டுவிடாதபடியும் கச்சை வரிந்து கட்டிக் கொண்டு காவல் காத்து நின்ற தொண்டர்களிலே தோழர் சாமி அவர்கள் முன்னணியில் நின்றார். 1945இல் திருச்சியில் நடைபெற்ற திராவிடக்கழக மாநில மாநாட்டில் பெரும்பங்கு ஏற்று உழைத்தார். 1946இல் மதுரையிலும், அதனை அடுத்து குடந்தையிலும், அதனை அடுத்து ஏரலிலும் நடைபெற்ற கறுப்புச் சட்டைப்படை மாநாடுகளில் தோழர் சாமி அவர்கள் முன்னணித் தொண்டராக நின்று பணியாற்றிய காட்சி இன்னமும் என் மனக் கண்ணை விட்டு அகலாமலிருக்கின்றது.

இயக்கத் தலைவர்களில் யார், நெல்லை மாவட்டத்தின் எந்தப் பகுதியில் சுற்றுப்பயணம் செய்யத் தொடங்கினலும் தோழர் சாமியை அங்குக் கண்டுகொள்ளலாம். நெல்லை மாவட்டச் சுற்றுப்பயணம் முடியும் வரையில் அவர் உடன் இருந்து, தலைவர்களுக்கும், சொற்பொழிவாளர்களுக்கும் வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பார். ஆங்காங்கு நடைபெறும் பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள், வேறு நிகழ்ச்சிகள் ஆகியவற்றை முன்னின்று ஒழுங்குபடுத்தி, நிகழ்ச்சிகள் அழகாகவும், ஒழுங்காகவும், சிறப்பாகவும் நடைபெறுவதற்கு வழிவகை செய்வார். அந்தக் காலங்களிலெல்லாம், தோழர் சாமி உடன் இருக்கிறார் என்றால் சுற்றுப்பயணம் செய்யும் தலைவர்களுக்கு நெல்லை மாவட்டத்தில் யாதொரு தொல்லையும், துயரமும் ஏற்படா.

1948ஆம் ஆண்டில் தூத்துக்குடியில் நடைபெற்ற திராவிடக் கழக மாநில மாநாடு தோழர் சாமியின் பெயரையும், புகழையும் பெருமளவுக்கு உயர்த்தி விட்டது என்னலாம். தூத்துக்குடி மாநாடு மிகச் சீரோடும், சிறப்போடும் நடைபெறுவதற்குத் தோழர் சாமியின் முழு முயற்சியும்உழைப்புமேகாரணமாகும். தூத்துக்குடி மாநாட்டின் வெற்றி, தோழர் கே. வி. கே. சாமியின் வெற்றி என்று சொல்லப்பட்டது. அந்த அளவுக்குத் தோழர் சாமியின் இன்றியமையாமை அந்த மாநாட்டினின்றும் வெளிப்பட்டது. தோழர் சாமி அவர்களின ஆற்றலைக் கண்டு வியந்த பெரியார் இராமசாமி அவர்கள் அந்த மாநாட்டில் பேசும் போது, "சுதந்திர திராவிட நாட்டில் தோழர் சாமிக்குக் கவர்னர் பதவியைக் கொடுக்கலாம். அதற்கான திறமை அவரிடத்தில் உண்டு" என்னும் கருத்துப்பட பேசியுள்ளார்கள். பெரியார் இராமசாமி அவர்களிடத்தில் யாரும் அவ்வளவு எளிதாகப் பாராட்டுதலைப் பெற்றுவிட முடியாது. எவ்வளவுதான் பாடுபட்டாலும், உண்மையாக உழைத்தாலும், நேர்மையாக நடந்தாலும் ஒரு சிறு குறை ஒருவரிடத்தில் காணப்பட்டு விடுமேயானல், அந்தக் குறையைப் பெரிதாக மதித்து, மற்றவற்றையெல்லாம்மறந்து அவரைக்கண்டபடி கடிந்துகொள்வதிலே பெரியார் அவர்கள் எப்பொழுதும் முனைப்பாக இருப்பார்கள். அப்படிப்பட்ட பெரியாரே தோழர் சாமி அவர்களை மிகமிகப் புகழ்ந்தார் என்றால், தோழர் சாமியின் ஆற்றலும், திறமையும் எந்த அளவுக்குச் சிறப்புடையனவாகத் திகழ்ந்தன என்பதை நாம் ஒருவாறு உணர்ந்து கொள்ளலாம்.

1948ஆம் ஆண்டு இறுதியில் ஈரோட்டில் நடைபெற்ற தனி மாநிலமாநாட்டிற்கான ஏற்பாடுகளைச் செய்ய தோழர் சாமி அவர்கள் ஒரு திங்களுக்கு முன்பே பெரியார் அவர்களால் வரவழைக்கப்பட்டார். அவருடைய செயலாற்றும் திறமை அந்த அளவுக்குப் பெரியாரால் போற்றி வரவேற்கப்பட்டது.

1955ஆம் ஆண்டில் நான் தூத்துக்குடிக்கு வரவேற்பு நிகழ்ச்சிக்குச் சென்றிருந்த போதும்

அறிஞர் அண்ணா அவர்கள் நெல்லை மாவட்டச் சுற்றுபயணத்திற்குச் சென்றிருந்தபோதும் வேறு எங்கும் காணமுடியாத அளவுக்கு வரவேற்புநிகழ்ச்சிகள் தூத்துக்குடியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன' அவ்வளவும் தோழர் சாமியின் திறமையின் விளவுதான்.

இவ்வாண்டு மேதிங்களில் திருச்சியில் நடைபெற்ற தி. மு. கழக இரண்டாவது மாநில மாநாட்டின்போது தோழர் சாமிஅவர்கள் ஆற்றிய அருந் தொண்டினை யாரும் மறத்தற்கியலாது. தோழர் சாமி அவர்களை, நுழைவு வாயிலில் நின்று டிக்கட்டுகளைச் சரிபார்த்துப் பார்வையாளர்களை அனுமதிக்குமாறு பணித்தபோது, அவர் மகிழ்ச்சியுடன் அந்தப் பணியை ஏற்றுக்கொண்டு திறம்பட நிறைவேற்றினர். அப்படிப்பட்ட செயலாற்றும் வீரரைத்தான் நாம் இப்பொழுது இழந்துவிட்டோம்! துக்கம் தொண்டையை அடைக்கிறது! கண்களிலே நீர் பெருகுகின்றது!

தோழர் கே. வி. கே. சாமி அவர்கள் 9-9-56-ஆம் நாள் சென்னைக்கு வந்திருந்தபோது. நெல்லை மாவட்டதில் தேர்தல ஒட்டி ஆற்ற வேண்டிய அரும்பணிகள்பற்றி என்னுடன் கலந்தாலோசித்துவிட்டுச் சென்றார். நானும் விரைவில் நெல்லைமாவட்டச் சுற்றுப்பயணத்தில் ஈடுபடுவதாக அவரிடம் வாக்களித்தேன்.

நான் மதுரை மாவட்டச் சுற்றுப்பயணத்தில் ஈடுபட்டிருந்தபோதுதான் தோழர் சாமியின் படுகொலைபற்றிய துக்கச்செய்தி இடியென வந்து விழுந்தது. 20—9—56ஆம் நாள் சமயநல்லூரில் நடைபெற்ற தி. மு.க. பொதுக் கூட்டத்தில் நானும் தோழர் எஸ். முத்து அவர்களும் கலந்து கொண்டுவிட்டு, இரவு 1மணி அளவிற்கு நான் ஓய்வுபெறச் சோழவந்தான் சென்றேன், தோழர் எஸ். முத்து அவர்கள் மதுரைக்குச் சென்றார்கள். நான் இரவு சுமார் 2மணிக்குப் படுக்கைக்குச் சென்றேன். சுமார் இரவு 3மணி இருக்கும் தோழர் எஸ். முத்து அவர்கள் அவசர அவசரமாக என்னை எழுப்பினர். நான் வாரிச் சுருட்டி எழுந்து உட்கார்ந்தேன். எதிர்பாராதவிதமாகத் தோழர் முத்து அவர்கள் என் எதிரில் உட்கார்ந்திருப்பதைக் கண்டு நான் திகைத்துப் போயினேன். நான் "என்ன ?" என்று கேட்டேன். அதற்கு அவர் " தூத்துக்குடியில் சாமியை வெட்டி விட்டார்களாம்! அந்த இடத்திலேயே உயிர் போய்விட்டதாம்!" என்று கூறினர். நான் திடுக்கிட்டு அதிர்ச்சியில் மூழ்கினேன். இருவரும் சிறிதுநேரம் கண்கலக்கத்துடன் உரையாடிக் கொண்டிருந்தோம். பிறகு காரிலேயே இருவரும் தூத்துக்குடி செல்வதென்று முடிவு செய்தோம்.

நானும் தோழர் முத்து அவர்களும் இரவு 3-45 மணிக்கு மதுரை வந்து, வேறு இரு நண்பர்களையும் உடன் அழைத்துக்கொண்டு காலை 6 மணிக்குத் (21-9-56) தூத்துக்குடிக்குப் புறப்பட்டோம். காலை 9-15 மணிக்குத் தூத்துக்குடியில் நுழைந்தோம். வழியிலேயே சாமியின் படுகொலைச் செய்தி பற்றிய துண்டு அறிக்கைகளைக் கண்டோம். செல்லும்போதே தூத்துக்குடி நகரின் சாலைகளெல்லாம் துக்கக் கோலம் பூண்டிருந்ததைக் கண்டோம். ஆலைகள், கடைகள். தொழிலகங்கள், பள்ளிகள் எல்லாம் மூடிக் கிடந்தன. நகர பஸ் போக்குவரத்து நின்றிருந்தது. மக்கள் துக்கத்தோடு சாரைசாரையாய்ப் போய்க்கொண்டிருந்தார்கள். தோழர் சாமியின் சடலம் பெரிய மருத்துவச் சாலைக்குப் பிணப் பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது என்பதைக் கேள்வியுற்று, நாங்கள் நேரே பெரிய மருத்துவச்சாலைக்குச் சென்றோம்.

மருத்துவச்சாலையில் பிணப்பரிசோதனைச் செய்யப்படும் கட்டிடத்திற்கு முன்னால், இருபதினாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் குழுமியிருந்து கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தனர், ஆயுதந்தாங்கிய போலீசார் பெரும் அளவில் நின்று காவல் காத்துவந்தனர். நானும் தோழர் எஸ். முத்து அவர்களும் பிணப்பரிசோதனைக் கட்டிடத்திற்கு, அதிகாரிகளின் அனுமதி பெற்றுச் சென்றோம். இரண்டு பெரிய டாக்டர்களும், ஒரு லேடி டாக்டரும் இருந்து பிணப் பரிசோதனை நடத்திக்கொண்டிருந்தனர். காலை 8-15 மணிக்குத் துவக்கப்பட்ட பிணப் பரிசோதனை, காலை 11-15 மணி வரையில் நடைபெற்றது. வெளியே தோழர் சாமியின் உற்றார் உறவினரும், நண்பர்களும், தொழிலாளத் தோழர்களும் பெருந்திரளாகக் கூடியிருந்து சாமியின் சடலத்தைக் காணக் காத்துக்கிடந்தனர். கூடியிருந்த பெண்கள் கோவெனக் கதறிக்கொண்டே யிருந்தனர். தோழர் சிவசாமி அவர்களும், பிற நண்பர்களும் ஓடியாடி பணிபுரிந்து கொண்டிருந்தனர்.

பிணப் பரிசோதனை நடந்தேறியபிறகு நானும், தோழர் எஸ். முத்து அவர்களும் அறைக்குள் சென்று தோழர் சாமி வெட்டப்பட்டுக் கிடந்த கோரக் காட்சியைக் கண்டோம். கண்கலங்கிப் போனேம். நம்மோடு அன்புடன் அளவளாவிப் பேசிக்கொண்டிருந்த மாவீரன், பேச்சு மூச்சற்று, சிதைக்கப்பட்டுச் சீரழிக்கப்பட்டுக் கிடக்கிறானே என்பதை எண்ணி எண்ணி ஏங்கினேன். எங்கள் கண்ணீர் சடலத்தைக் கழுவிக்கொண்டிருந்தது. நாங்களே எங்களைத் தேற்றிக்கொண்டு, சடலத்தை

எடுத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தோம்.

சுற்றிலும் கண்ணாடியால் அடைக்கப்பட்டு, ஒற்றைக்குதிரை பூட்டப்பட்ட கோச்சு வண்டி ஒன்று கொண்டுவந்து நிறுத்தப்பட்டது. கோச்சுவண்டியின்மீதும், குதிரையின் மீதும் கழகக்கொடித் தோரணம் கட்டிவிடப் பட்டிருந்தது. தோழர் சாமியின் சடலம் அவரது வழக்கமான சலவை உடுப்புகளால் உடுத்தப்பட்டு, ரோசா மாலைகள் அணியப் பெற்று பார்ப்போர்க்கு முகம் தெரியும் வகையில், சவப்பெட்டியில் வைக்கப்பட்டு வெளியே எடுத்துவரப்பட்டது. கூடியிருந்தோர் அனைவரும் குய்யோ முறையோ எனக் கதறி அழுது நின்றனர். சவப் பெட்டி மெல்ல கோச்சுவண்டியில் ஏற்றப்பட்டு, நாகம்மையார் வாசகசாலைக் கட்டிடத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டது. மக்கள் கண்ணீரும் கம்பலையுமாகப் பின் தொடர்ந்தனர்.

நாகம்மையார் வாசகசாலைக் கட்டிடத்திற்கு முன்னர் தனிமேடை ஒன்று அமைக்கப்பட்டு, எல்லோருடைய பார்வைக்கும் படும் வண்ணம் சவப்பெட்டி அதன் மீது வைக்கப்பட்டது. மக்கள் இரண்டு மூன்று பர்லாங் நீட்ட வரிசையில் நின்று, நகர்ந்து பார்த்துக் கொண்டே தோழர் கே. வி. கே. சாமி அவர்களை இறுதியாகக் கண்டுகொண்டும் தம் இறுதி வணக்கத்தைச் செலுத்திக்கொண்டும் சென்றனர். பகல் 12 மணி அளவில் ஆரம்பித்த மக்கள் வரிசை மாலையில் பிண ஊர்வலம் தொடங்கும் காலம் வரையில் நகர்ந்து கொண்டேயிருந்தது.

மாலை 4-45 மணிக்குப் பிண ஊர்வலம் தொடங்கிற்று. சுமார் முப்பதினாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் பிண ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். ஊர்ப்பெரியவர்களும், வியாபாரிகளும், நகரசுட்சித் தலைவரும், நகராட்சி உறுப்பினர்களும், அரசியல் கட்சிகளின் தலைவர்களும், தொழிலாளர் சங்கங்களைச் சார்ந்தோரும், மாவட்டம் எங்கணும் இருந்து வந்திருந்த தி. மு. கழகத்தோழர்களும், தொழிலாளர்களும், பாட்டாளிகளும் ஊர்வலத்தில் கலந்து கொண்டு இறுதிவரையில் வந்தனர். மெல்ல சோகக் கீதத்தை எழுப்பும் பேண்டு வாத்தியம் முன்னால் செல்ல, மக்கள் அணி அணியாகத் திரண்டு வெள்ளம்போல் மௌனமாகச் சென்றனர் நடுவில் சவம் வைக்கப்பட்ட கோச்சுவண்டி மெல்ல நகர்ந்து கொண்டிருந்தது. அதனை ஒட்டி நானும், தோழர் எஸ். முத்து அவர்களும், பிற கழகத்தோழர்களும் மெல்ல நடந்து சென்றோம். பின்னால் வெள்ளம்போல் மக்கள் அணி அணியாக வந்துகொண்டிருந்தனர். நகரெங்கணும் பறந்து கொண்டிருந்த கழகக் கொடிகள் துக்கத்தின் அறிகுறியாகப் பாதிக் கம்பத்தில் பறக்க விடப்பட்டிருந்தன.

பிண ஊர்வலம் சுமார் மாலை 7-30 மணிக்குக் கல்லறையின் அருகே சென்று முடிந்தது. தோழர் சாமி அவர்களின் முயற்சியினால் கட்டிமுடிக்கப்பெற்ற வி. வி. டி. பள்ளியின் தோட்டத்திலேயே சாமியின் கல்லறையை அமைப்பது என்று எல்லோரும் முடிவு செய்திருந்தனர். தோழர் சாமியின் சடலத்தைக் கல்லறைக்குள் அனுப்புவதற்கு முன்பு இறுதிவணக்கம் செலுத்தும் இரங்கற் கூட்டம் ஒன்று அந்த மைதானத்திலேயே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சுமார் இருபத்தைந்தாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் அங்கே குழுமினர். கூட்டத்தின் நடுவே மேடை ஒன்று அமைக்கப்பட்டு, அதன் மீது சவப் பெட்டி வைக்கப்பட்டது. தோழர் சிவசாமி அவர்கள் கண்ணீர் வடித்துக்கொண்டே சிறிதுநேரம் பேசி இரங்கற் கூட்டத்தைத் துவக்கும்படிக் கேட்டுக்கொண்டார். என் தலைமையில் இரங்கற் கூட்டம் துவங்கப் பெற்றது. பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்த தோழர்களும், பல்வேறு தொழிற்சங்கங்களைச் சார்ந்தவர்களும் தத்தம் இரங்கலுரையைக் கூறி இறுதி வணக்கத்தையும், மரியாதையையும் தெரிவித்துக்கொண்டனர். எல்லோராலும் இறுதிவணக்கத்தின் அறிகுறியாக மலர் மாலைகள் தோழர் சாமியின் சடலத்திற்குச் சூட்டப்பட்டன. இரவு 8-15 மணிக்குத் தோழர் கே. வி. கே. சாமி அவர்களின் சடலம் புதைகுழிக்குள் வைக்கப்பட்டது. மக்கள் துக்கத்துடனும், துயரத்துடனும் மெல்ல கலைந்து சென்றனர். நாங்களும் கண்ணீர்ச் சொட்டுகளைச் சிந்திவிட்டு அவ்விடம் விட்டு அகன்றோம்!

தோழர் கே. வி. கே. சாமி அவர்கள் வீரச் சாவை அணைத்துக் கொண்டுவிட்டார்; வீரர் பட்டியலிலேயே சேர்ந்துவிட்டார்! "கோழைகள் வாழ்க்கையிலே பலதடவைகள செத்துச் செத்துப் பிழைத்து இறுதியில் மறைவர், ஆனால் வீரன் ஒரே ஒரு தடவைதான் செத்துப்போவான், அதுதான் அவனது இறுதி மறைவு" என்று மேனாட்டு அறிஞன் ஒருவன் கூறியதற்கிணங்க, தோழர் சாமியைச் சாவு ஒரே ஒரு தடவைதான் கவர்ந்துள்ளது; அது தான் 20-9-56ஆம் நாள் இரவில்!

(இதன் தொடர்ச்சி 32ஆம் பக்கம் பார்க்க)

இல்லம் புகமுடியாத இழிநிலை

[இரா. நெடுஞ்செழியன்]

தலைவியோடு இணைந்திருந்து இன்பமாய் இல்லறவாழ்வு நடத்திவந்த தலைவனிடம், மயக்க மொழிகள் பல பகர்ந்து, அவனைப் பரத்தையர் சேரிக்குக் கூட்டிச்செல்வதற்கு முனைகிறான் பாணன். பாணனின் பாகுமொழிகளில் மயங்கி, தலைவன் நிலைதடுமாறுகிறான். தலைவியைப்பற்றி நினைக்க மறந்து, பரத்தையர் பற்றிய நினைவுகளில் கவனத்தைச் செலுத்துகிறான்.

விதவிதமான பரத்தையர்களோடு கூடி விதவிதமான இன்பத்தைப் பெறலாம் என்று பாணன் தலைவனுக்குத் தூண்டுகோல் போடுகிறான். பாணன் செலுத்திய வழி செல்லத் தலைவன் தலைப்படுகிறான். தலைவனின் நடை உடை நடிப்புக்களில் மாறுதல் ஏற்பட்டிருப்பதைக் கண்ட தலைவி, அந்த மாறுதலுக்குப் பாணனே காரணம் என்று அறிந்து, என்ன துன்பம் நேரிடுமோ எப்பொழுது நேரிடுமோ என்று எண்ணி ஏங்கிக் கொண்டிருக்கிறாள்.

தலைவி அறியாவண்ணம் பாணன் தலைவனைப் பரத்தையர் வாழும் இடத்திற்கு அழைத்துச் சென்றுவிடுகிறான். தலைவனைக் காணாது, பல இடங்களிலும் அவனைத் தேடிப்பார்த்து, இறுதியில் அவன் பரத்தையர் சேரியில் வாழுவது அறிந்து மனம் ஒடிந்து, வருந்தி, மிக்க துயரத்தில் ஆழ்கிறாள் தலைவி.

தலைவன் பல பரத்தையர்களையும் அடைந்து அவர்களோடு கூடியிருந்து காமவின்பம் துய்த்து வருகிறான். தலைவனின் கைப் பொருளையெல்லாம் பரத்தையரும், பாணனும் சிறிது சிறிதாகக் கரந்து வருகின்றனர். தலைவி தன்னந்தனியாக இல்லத்திலிருந்து தன்னை நினைந்து வருந்துவாளே என்பதைப் பற்றியோ, தன் கைப்பொருள் முழுவதும் செலவழிந்து வருகிறதே என்பதைப்பற்றியோ, தன் ஒழுக்கக்கேடு பற்றி ஊரார் பழிப்பார்களே என்பதைப் பற்றியோ சிறிதும் கவலைப்படாமல் பரத்தையர் சேரியை மலர்த்தோட்டத்தைச் சுற்றிவரும் வண்டுபோல் சுற்றி வருகிறான்.

தலைவன் எல்லாப் பரத்தையரையும் நுகர்ந்துபார்த்துவிட்டு, இறுதியில் பெண் தன்மையடையப் பெறாத அழகு வாய்ந்த பெதும்பைப் பருவத்தாள் ஒருத்தியிடம் மனமயக்கங்கொண்டு, அவளோடு ஓடிஆடி விளையாடுவதிலும், ஆடிப்பாடி மகிழ்வதிலும் ஈடுபட்டிருக்கிறான்.

ஊரில் திருவிழா வருகிறது. எல்லோரும் தத்தமக்கு விருப்பமான வழிகளில் ஆடியும் பாடியும், கூத்தடித்தும் கும்மியடித்தும், வேடிக்கைபார்த்தும் விளையாடியும் மகிழ்கின்றனர். ஊரே ஒரே ஆரவாரத்தன்மை கொண்டதாக மாறுகிறது. மக்கள் அழகும் விலையும் உயர்ந்த ஆடை அணிகலன்களால் தம்மை அழகுபடுத்திக்கொண்டு விழாவில் கலந்து கொள்கிறார்கள். ஆடவரும், பெண்டிரும்; பிள்ளைகளும் புத்தாடைகளையும், வெளுத்து மடித்த ஆடைகளையும் உடுத்திக்கொண்டு போவதும் வருவதுமாக நடமாடிக்கொண்டிருக்கிறார்கள், விழாத் தொடங்குவதற்குச் சில நாட்களுக்கு முன்பிருந்தே, பல்வேறு வகைத் தொழில் புரிவோரும், தொழில் வினைஞரும் தத்தம் தொழில்களில் அல்லும் பகலும் ஈடுபட்டு, ஓயாது உழைத்து விழாவினைச் சிறப்பிக்கவும், வாணிகத்தைப் பெருக்கவும் முனைந்து பாடுபட்டு வருகின்றனர். பொற்கொல்லர் மக்களுக்கு வேண்டிய பொன்னணி கலன்களைப் புதிது புதிதாகச் செய்து தந்து கொண்டேயிருக்கின்றனர். ஆடை வெளுப்போர் ஓய்வு ஒழிவில்லாமல் ஆடைகளை வெளுத்து, மடிபோட்டுத் தந்தவண்ணமிருக்கின்றனர். இவ்வாறாக மலர்மாலை தொடுப்போரும், நறுமணம் புகைப்போரும், உண்டி வகை செய்வோரும், வேடிக்கை காட்டுவோரும் ஆடிப்பாடி மகிழ்விப்போரும், பிறரும் தத்தம் வேலைகளில் அயராது ஈடுபடுகின்றனர்.

தலைவனால் விரும்பப்படும் பெதும்பை, வெளுத்துச்சோற்றின் கஞ்சியிட்டு உலர்த்திய, பூவேலைப்பாடு அமைந்த புடவையை உடுத்திக்கொண்டு, பொன்னாலான அணிகலன்

களைப் புனைந்துகொண்டு, தன் சுற்றத்தாரோடு விழாவில் கலந்துகொள்ளப் புறப்படுகிறாள். தலைவனும் அவளோடு புறப்படுகிறான். விழாக் களத்தில் பெரிய பெரிய மாக் கிளைகளில், பனை நாரினாலான கயிற்றில் ஊஞ்சல்கள் கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கின்றன. அப்பெதும்பைப் பருவத்தினள் ஆடைகள் காற்றில் அழகுறப் பறக்க, அணிகலன்கள் அசைந்தாட ஓடிச்சென்று ஊஞ்சல் ஒன்றில் ஏறிக்கொள்கிறாள்.

அவளோடு வந்த பெண்களெல்லாம் இருபுறமும் பிரிந்து நின்று அவளது ஊஞ்சலை ஆட்டி விடுகிறார்கள். தன்னுடைய ஊஞ்சலைத் தலைவன் ஆட்டிவிடவேண்டுமென்று அவள் எதிர்பார்த்திருக்கிறாள். தலைவனோ பொதுமக்கள் பலரும் பார்த்துத் தன்னைக் கேலி செய்வார்கள் என்று கருதிக்கொண்டு, ஒருபக்கத்தில் நின்றுகொண்டு, அவளை வேடிக்கை பார்த்து மகிழ்ந்துகொண்டிருக்கிறான். ஆயத்தார் ஆட்டுவது அவளுக்குப் பிடிக்கவில்லை. தன் ஊஞ்சலை ஆட்டிவிடும்படி அவள் தலைவனை அழைக்கிறாள். போயும் போயும் ஒரு பெதும்பைப் பெண்ணைத் தலைவன் காதலிக்கிறானே என்று எண்ணி ஊரார் கேலிசெய்வார்கள் எனறு கருதிக்கொண்டு அவன் வாளா நின்று விடுகிறான். தன் ஊஞ்சலை ஆட்டத் தலைவன் வர மறுப்பதுகண்டு அப்பெதும்பைப்பெண், ஊஞ்சலைவிட்டு இறங்கி அழுதுகொண்டு ஓடிவிடுகிறாள்.

தலைவன் பின்னால் ஓடிச்சென்று, அவளுக்கு ஆறுதல் அளிக்க முயலுகிறான். அந்தப்பெண் அவனுக்கு முகங்கொடுத்துப் பேசாமல், அவனை அப்புறந்தள்ளிவிட்டுத் தன் வீட்டிற்கு ஓடி ஒளிந்து கொள்கிறாள். தலைவனின் இந்தச் செயல்கண்டு பரத்தையர் பலரும் எக்கொலி கொட்டி நகைக்கிறார்கள். தலைவன் பரத்தையரின் ஏளனத்தைத் தாங்க முடியாமல் தன் நிலைமை மிகவும் இழிவாகப் போய்விட்டதை நினைத்து வருந்தி, மீண்டும் தலைவியிடம் போய்ச்சேர விரும்புகிறான். பாணனை உடன் துணைக்கு அழைத்துக்கொண்டு தன் வீடு நோக்கிச்செல்கிறான்.

தலைவன் பெதும்பைப்பெண்ணை விரும்பி அலைந்து திரிந்ததையும், தலைவனோடு ஊடி அவள் அழுதுகொண்டு சென்றதையும், அவளை ஆறறுவிக்கமுடியாமல் தலைவன் மனம் நொந்து திரும்பியதையும் ஊரார் சிலர் தோழியிடம் வந்து சொல்லிவிடுகிறார்கள். செய்தியைத் தலைவியிடம் சொல்லத் தோழி வருகிறாள்.

தலைவன் வீட்டிற்கு அருகில் வந்ததும் தானே தலைவியின் எதிரில் செல்ல அஞ்சி, நிலைமையைத் தெரிந்துவருமாறு பாணனை அனுப்பிவைத்துவிட்டுத், தான் சிறிது தொலைவில் மறைந்து நின்றுகொள்கிறான்; தலைவி வீட்டின் கூடத்தில் உட்கார்ந்து, ஒரு தூணில் சாய்ந்துகொண்டு, தோழியிடம் தன் வருத்தத்தைச் சொல்லிக்கொண்டிருக்கிறாள். அப்போது பாணன் மிக்க அச்சத்துடன் மெல்ல அடியெடுத்துவைத்து வீட்டின் தெருக்கதவண்டையில் வந்து நிற்கிறான். கதவின் மறைவில் ஒளிந்துகொண்டு தலைவியும் தோழியும் என்ன பேசிக்கொள்கிறார்கள் என்பதை உற்றுக் கேட்கிறான்.

பாணன் கதவுக்கருகில் நின்று ஒட்டுக்கேட்பதைத் தோழி அறிந்து கொள்கிறாள். தான் அறிந்துகொண்டதாக வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல், தலைவியுடன் உரையாடிக்கொண்டிருக்கிறாள்.

தோழி, பாணன் காதில் விழவேண்டும் என்பதற்காகத் தலைவியைப் பார்த்துச் சிலபல செய்திகளை அறிவிக்கிறாள்.

“நம் தலைவர் செய்தவேலை ஒன்று உனக்குத் தெரியுமா?” என்று தோழி தலைவியைக் கேட்கிறாள்.

அதற்குத் தலைவி, “என்னடி! எனக்கு ஒன்றும் தெரியவில்லையே! தலைவருக்கு ஏதாவது துன்பம் நேரிட்டதோ?” என்று கேட்கிறாள்.

“நீ வருந்துகிறமாதிரி அவருக்கு ஒன்றும் துன்பம் நேர்ந்துவிடவில்லை; அவரே வருந்துகிறமாதிரிதான் அவருக்குத் துன்பம் ஒன்று ஏற்பட்டிருக்கிறது!”

“அப்படி என்னடிதோழி, அவருக்குத் துன்பம?”

“அவர் ஒரு பரத்தையைக் காதலித்தாராம்; ஆனால் அவள் அவரோடு ஊடல் கொண்டுள்ளாளாம்!”

“அப்படி யாரடி ஒரு பரத்தை இருக்கிறாள்? அவருக்காகத்தான் எல்லோரும் நான் நீ என்று போட்டி போட்டுக்கொண்டு அவரிடம் ஓடிவருகிறார்களாமே! அப்படிப் போட்டா போட்டி போடும் நிகழ்ச்சிகளெல்லாம் நடந்தேறி முடிந்துவிட்டன. இப்பொழுது யாரும் போட்டி போட்டுக்கொண்டு வரமுடியாத ஒருத்தியை நம் தலைவர் நாடி நிற்கிறார்?”

“யாரும் போட்டிபோட முடியாதபடி அவ்வளவு அழகுடையவளா அவள்?”

“எல்லோரும் நல்ல அழகுடையவர்கள் தான். ஆனால் நான் குறிப்பிடுபவள் பெண் தன்மையில்லாத ஒரு பெதும்பைப் பெண்!”

“அப்படியா?”

“ஆமாம்! அந்த வெட்கக்கேட்டை ஏன் கேட்கிறாய்? போயும் போயும் ஒரு பெதும்பைப் பெண்ணைப் பிடித்தார் பார்!”

“அவள் நம் தலைவரோடு ஊடி நிற்பதற்கு என்ன காரணம்?”

“திருவிழாவின் போது கயிற்று ஊஞ்சலாட அவள் சென்றுளளாம். அவள் ஆயத்தார் அவளது ஊஞ்சலை ஆட்டிவிட்டார்களாம். அது அவளுக்குப் பிடிக்கவில்லையாம். நம் தலைவரே தன் ஊஞ்சலை ஆட்டிவிடவேண்டும் என்று விரும்பினளாம். தனிப்பட்ட முறையில் மறைவான இடத்தில் அவளோடு ஓடியாடி விளையாட விரும்பும் நம் தலைவர், பலர் சூழ்ந்திருக்கும் விழா நாளன்று பலரும் ஏளனம் செய்யும் வகையில் அவளை ஊஞ்சலில் வைத்து ஆட்டிவிடத் துணிவில்லாமல் தயங்கினராம். அதனால் அவள் அவரோடு ஊடிக்கொண்டு போய்விட்டாளாம். பிறகு அவர் அவளுக்கு எவ்வளவோ ஆறுதல் மொழிகள் எடுத்துக் கூறியும், அவள் கேட்க மறுத்துவிட்டு, அவரிடம் முகங்கொடுத்துப் பேசாமலேயே போய்விட்டாளாம்!”

தோழியின் இந்தக் கூற்றைக் கேட்டதும் தலைவி மனம் நொந்து, தலைவருக்கு இப்படிப் பட்ட இழிநிலை ஏற்பட்டதே என்று வருந்தி, அவரது போக்குக்குறித்து ஆருச் சினங் கொள்கிருள். தலைவியும் தொழியும் சிறிது நேரம் பேச்சு ஏதும் பேசாமல் அமைதியாக வருத்தத்துடன் உட்கார்ந்திருக்கிருர்கள்.

அப்பொழுது பாணன் உள்ளே நுழைந்து அவர்கள் எதிரில் நிற்கிருன். தோழி அவனைப் பார்த்து “என்ன செய்தி? எங்கே வந்தாய்!” என்று அதட்டிக் கேட்கிருள்.

“நான் தலைவரிடமிருந்து வருகிறேன்!...” என்கிருன்.

“அதுதான் புரிகிறதே! வந்த செய்தி என்ன?” என்று வினவுகிருள் தோழி.

“தலைவர் இன்னும் சிறிது நேரத்தில் வரப் போகிருர் என்ற செய்தியை அறிவித்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்!” என்கிருன்.

“எதற்காக வரப்போகிருராம்?” என்று வினவுகிருள் தோழி.

“தலைவியாரைப் பார்க்க!......”

“இவ்வளவு நாட்களாக இல்லாத அக்கறை இப்பொழுதுமட்டும் எங்கிருந்து வந்திருக்கிறது?”

“தாங்கள் சினங்கொள்ளக்கூடாது! தலைவியாரைப் பார்த்து நீண்ட நாட்களாயிற்றே என்று காண வருகிருர்!”

உன்னைப்பற்றியெல்லாம்தான் எங்களுக்கு நன்ருகத் தெரியுமே! நன்ருக இருந்த இல்லறத்தைப் பாழ்படுத்த நீ ஒரு நச்சுப்பாம்பாக அல்லவா தோற்றமெடுத்திருக்கிருய்? நீ ஒருவன் இல்லாதிருந்தால் இந்தக் குடும்பம் எவ்வளவோ நன்ருக இருந்திருக்குமே! இதுவரையிலும் கொடுத்த தொல்லைகள் போதா என்று இன்னமும் தொல்லைகள் கொடுக்க வந்துவிட்டாயா? போய்விடு! இங்கு அடி எடித்து வைக்காதே!”

“தலைவர் இனிப் பரத்தையர் சேரிப்பக்கம் போவதில்லை என்று முடிவு செய்துகொண்டு அல்லவா இங்கு வருகிருர்! அவரை ஏற்று நீங்கள் ஆதரிக்கவேண்டும்! அதுதான் நான் தாழ்மையாய்க் கேட்டுக்கொள்வதெல்லாம்!”

“எல்லாக்கதையும் எங்களுக்குத் தெரியுமே! அந்தப் பெதும்பைப் பெண்ணை ஆற்றுவிக்க உங்களுக்குத் திறமையில்லை; எனவே இங்கு வரப் பார்க்கிறீர்கள்! அவள் தலைவரோடு ஊடினமையால், வேறுவழியின்றி அவர் இங்கு வரப்பார்க்கிருர். அவர் அவளது ஊஞ்சலை ஆட்டிவிட்டிருந்தால் அவள் அழப் போவதுமில்லை; தலைவரோடு ஊடப் போவதுமில்லை; தலைவரும் அவளை விட்டு நீங்கியிருக்கமாட்டார். இனி அவர் இங்கு வரவேண்டாம் என்று போய்ச்சொல்!” என்று தோழி கடிந்து கூறுகிருள்.

தலைவி எல்லாவற்றையும் அமைதியாக இருந்து கேட்டுக்கொண்டிருக்கிருள். பாணன் தலைவிக்கும் தோழிக்கும் எல்லாச் செய்தியும் தெரிந்துவிட்டது என்று அறிந்து; இனி அங்கு நின்று பேசுவதில் பயனேற்படாது என்று கருதி மெல்ல வெளியேறுகிருன்.

பாணன் நடந்தவற்றையெல்லாம் தலைவனிடம் போய்ச் சொல்லுகிருன். தலைவன் தன் போக்குக்கு நாணி, இன்னும் சிறிது நாட்கள் கழித்துச் சென்ருல், தலைவி மனம் வருத்தம் நீங்கித் தன்னை ஏற்றுக்கொள்வாள் என்று கருதிக்கொண்டு சிறிதுநாட்கள் மறைந்து வாழத் தலைப்படுகிருன்!

* * *

இது நற்றிணை 90 ஆம் செய்யுளை அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்ட காதற்காட்சியாகும். இந்தச்செய்யுள் மருதத்திணையைச் சார்ந்த தோழி தலைமகளுக்கு உரைப்பாளராய்ப் பாணனை நெருங்கி வாயில் மறுத்தது என்னும் பிரிவின் பாற்பட்டது. இந்தச் செய்யுளை இயற்றியவர் அஞ்சிலஞ்சியார் என்னும் சங்ககாலப் புலவராவார். இவர் அஞ்சில் என்னும் ஊரைச் சேர்ந்தவர். அஞ்சி என்பது இவரது இயற்பெயர். இவரைப்பற்றிய வேறு குறிப்பு ஏதும் அகப்படவில்லை.

ஆடியல் விழவின் அழுங்கன் மூதூர்
உடையோர் பான்மையின் பெருங்கை தூவா
வறனில் புலத்தி எல்லித் தோய்த்த
புகாப்புகர் கொண்ட புன்பூங் கலிங்கமொடு
வாடா மாலை துயல்வர ஓடிப்
பெருங்கயிறு நாலும் இரும்பனம் பிணையல்
பூங்கண் ஆயம் ஊக்க ஊங்காள்
அழுதனள் பெயரும் அஞ்சில் ஓதி
நல்கூர் பெண்டின் சில்வளைக் குறுமகள்
ஊசல் உறுதொழில் பூசல் கூட்டா
நயனில் மாக்களொடு குழீஇப்
பயனின்று அம்மஇவ் வேந்துடை அவையே !

நற்றிணை-90

[பொழிப்புரை: கூத்து ஆடி மகிழ்கின்ற விழாவின் ஒலியையுடைய இப்பழமையான ஊரினிடத்து, ஆடைகளை ஆராய்ந்து கழுவுந்தன்மையில் பெரிதும் தன்கை ஒழியாத வறுமையில்லாத ஆடை வெளுக்கும் வண்ணாத்தி, இரவிலே தோய்த்த சோற்றின் கஞ்சியிட்டுப் புலர்த்திய சிறிய பூத்தொழிலையுடைய ஆடையுடனே பொன்னரிமாலை அசைந்தாட ஓடிச்சென்று, கரிய பனைநாரினாலே திரித்த கயிற்றைப் பிணித்துத் தொங்கவிட்ட ஊஞ்சலில் ஏறிப் பூப்போலும் கண்களையுடைய தன் ஆயத்தார் அதனை ஆட்டவும், தான் ஆடாதவளாய் அழுது மீளுகின்ற அழகிய சிலவாகிய கூந்தலையுடைய, பெண்தன்மையில் குறைவுபட்ட சிலவாய வளையல்களை அணிந்த பரத்தையாகிய பெதும்பைப் பருவத்தாளாகிய ஓர் இளமகளை மீண்டும் ஊஞ்சலாடுகிற மிக்க தொழிலின் ஆரவாரத்தில் செய்யாத. விருப்பமற்ற மக்களோடு சேர்ந்து இவ்வேந்தனது அவைக்களந்தான் பயனின்மையுடையதாக இருக்கின்றது, இது மிக்க வியப்பு; அவளை ஆடச்செய்திருந்தால் அவள் ஊடாள்; தலைமகனும் அவளை நீங்கான், அங்கே அவள் ஊடினமையால் இறைமகன் இங்கு வந்தான்போலும்; இனி இங்கு வாராது ஒழிந்து போவானாக!

அழுங்கன்மூதூர் - ஒலியையுடைய பழமையான ஊர்; கைதூவாமை - கையொழியாமை; புலத்தி - ஆடையொலிக்குந் தொழிலி; வண்ணாத்தி; புகா - உணவு; சோறு; புகா - கஞ்சி; கலிங்கம் - ஆடை; வாடாமாலை - பொன்னரிமாலை; நாலும் - தொங்கும்; இரும் - கரிய: பிணையல் - கட்டப்பட்ட ஊஞ்சல்; ஓதி - கூந்தல்; நல்கூர் பெண்டு - பெண் தன்மையில்லாள்; மாக்கள்-பாணன் முதலியோர்.]

சேரிப் பரத்தையரோடு காலங் கழித்துத் திரியும் ஆடவரைக் குடும்பப் பெண்கள் எப்படி வெறுத்து ஒதுக்குகிறார்கள் என்பது இச்செய்யுளின்மூலம் அழகுறச் சுட்டிக்காட்டப்படுகிறது.

தலைவன் பரத்தையின்பால் மயக்கங் கொண்டு தலைவியை விட்டுப்பிரிதலும், பரத்தை ஊடிடும்போது அவளை வெறுத்து வீடு திரும்புதலும் நிலையற்ற ஆடவரின் இயல்பு என்பதும் இச்செய்யுளால் தெளிவுறுத்தப்படுகிறது.

தலைவன், தன்னை ஊஞ்சலாட்டவில்லை என்பதே பெதும்பையான அந்தப் பரத்தைக்கு மிக்க சினத்தைத்தருகிறது. அது காரணமாக அவனிடம் அவள் ஊடல்கொள்கிறாள்.

திருவிழாக் காலத்தில் கூத்து ஆடுதல், வெளுத்தஆடையை சோற்றின் கஞ்சியிட்டு உலர்த்தி மடிபோட்டுவைத்தல், பூவேலைப் பாடுகள் அமைந்த ஆடையை உடுத்துதல், பனைநாரினாலான கயிற்றில் ஊஞ்சல் கட்டிவிடுதல் போன்ற பழக்கங்கள் குறிப்பிடப்படுகின்றன.

அண்டசராசரம்

(52)

நாபி அரசர் தமது மகனுக்கு ரிஷபர் என்று பெயர் வைத்தார். விட்டுணுவின் அம்சம் ரிஷபராகப் பிறந்தபடியால், நாபி நாடு எல்லா வகையிலும் உயர்ந்து விளங்கியதாம். இதைக் கண்டு பொறாமையடைந்த இந்திரன், தனது மேகங்களை அந்நாட்டுக்கு மேல் போகாமல் செய்தான். அதனால் மழையில்லாமற் போயிற்று. நாடு வளங் குன்றியது.

இளவரசனான ரிஷபர் இதைக் கவனித்தார். இந்திரன் செய்த சூழ்ச்சியென்பதையும் அவர் உணர்ந்தார். சிறுபிள்ளையைப்போல இந்திரன் செய்யும் தடையைக் கண்டு புன்முறுவல் பூத்து, ரிஷபர் யோகத்தில் அமர்ந்தார். அவரது யோகவலிமையால், திடீரென்று மழை பெய்ய ஆரம்பித்ததாம். நாடு முன்போல செழிப்புற்றது. இந்திரன் தலைகுனிந்து ஓடினான்.

ரிஷபருக்கு தக்கவயது வந்ததும், நாபி அரசர் அவருக்குப் பட்டஞ் சூட்டி, தாம் காட்டுக்குப்போய் தவஞ்செய்தார். ரிஷபர் வேதங்களும் சாத்திரங்களும் சொல்லுகிறபடி அரசாண்டார். தாம் ஆளும் நாடு, கர்மபூமி என்று அவருக்குப் பட்டதாம். ஆதலாம் கர்ம (தர்ம) விதிப்படி, தம் மனைவியிடத்தில் அவருக்கு நூறு பிள்ளைகள் அவர் பெற்றெடுத்தார். மூத்தபிள்ளையின் பெயர் பரதன்.

ரிஷபருடைய ஆட்சி மிகமேலோங்கி இருந்ததாம். அதற்குக் காரணம், "வேதமுறை எது வென்று அவருக்கு நன்றாகத் தெரிந்தால்கூட பிராமணர்கள் சொல்லிய முறைப்படி ஆண்டு, சாம பேத தான தண்டம் ஆகிய நான்கு விதிகளையும் சமயத்துக் கேற்றாற்போல் உபயோகித்தார்." பாகவதபுராணம் அவ்வாறு கூறுகிறது.

ஆட்சிசெய்யும் தர்மத்தை விளக்கிக்காட்டியதும், பக்திதுறவு இவைகளின் தர்மத்தை உலகுக்குக் காட்டவேண்டுமென்று இடபருக்குத் தோன்றியதாம், தமது மூத்த மகனான பரதனுக்குப் பட்டங்கட்டி, அவர் காட்டுக்குச் சென்றார்.

பரதன் ஆண்டதால், அந்தப் பகுதிக்குப் பரதகண்டம் என்ற பெயர் வந்தது.

இடபர் பைத்தியம் பிடித்தவனைப்போல, தன் தேசத்தைப்பற்றிக் கவலைப்படாமல் காட்டில் அலைந்துகொண்டிருந்தாராம். யார் பேசினாலும், அவர் பேசுவதில்லை. உடம்பில் புழுதி படிந்து, மயிர்கள் சடையாகத் திரண்டு, அவர் யோகத்தில் அமர்ந்திருந்தாராம். பின் யோக நிலையை விட்டு, ஆச்சார வாழ்க்கையில் ஈடுபட்டார். அதாவது, ஒரு இடத்தில் படுத்துக் கொள்வது, அந்தநிலையிலேயே உண்ணுவது, குடிப்பது, உறங்குவது, சிறுநீர் மலசலங் கழிப்பது, அந்தக் கழிவுப் பொருள்களின் மீது புரண்டுகிடப்பது. ஆடுமாடுகளைப்போல அசுத்தமென்று பாராமல் படுத்துப் புரண்டபடி இருந்தாராம். அவர்மீது பட்டுவந்த துர்நாற்றம், நூறுமைல்களுக்கு வீசியதாம். அதாவது வெகு தூரத்திற்கப்பால் வரும்பொழுதே இடபமுனிவர் அந்தக்காட்டில் படுத்திருக்கிறார் என்று கூறிவிடலாமாம். அவ்வளவு "தூய்மையான" நிலையில், விட்டு

ணுவின் அம்சமான இடபர் . பள்ளிகொண்டிருந்தார்.

உடம்பைத் துச்சமாக மதிக்கவேண்டும் என்பதற்காக இடபதேவர் அவ்வாறு உடலைப்பற்றிக் கவலைப்படாமல் இருந்தாராம். உடலை அலட்சியப்படுத்தும் முறையை யோகிகளுக்குச் செய்து காட்டியதும், இடபதேவர் நிர்வாணக்கோலத்தில், நாடுகளையெல்லாம் சுற்றி வந்தார். அவர் உடலெங்கும் புழுதியும் மலமும் பூசியிருக்கும், வாயில் ஒரு கல் இருக்கும். பேசாமல் ஊரின் மத்தியில் செல்வார். மகான் வருகிறார் என்று மக்கள் வேடிக்கை பார்ப்பார்கள். இப்படியாக இடபதேவர் சுற்றிவந்ததும், ஒருகாட்டில் போய் தங்கியிருக்கும்பொழுது அங்குகாட்டுத்தீ உண்டாகி, அவரது உடலை எரித்துவிட்டது. விட்டுணுவின் அம்சம மறுபடியும் விட்டுணுவிடம் போய்ச் சேர்ந்து விட்டது.

ரிஷபராக அவதாரம் செய்ததில், விட்டுணு மூர்த்தி சாதித்தது, இராஜகுணயோகத்தின் பெருமையை விளக்கியதாம்.

சைநமத புராணங்களிலும் இடப தீர்த்தங்கரரின் தந்தை நாபிமகாராசா என்றும் தாய் மேருதேவி என்பதும் கூறப்படுகின்றன. பெரும்பாலும் சைநமதத்தைச் சார்ந்த முதல் தீர்த்தங்கரான இடபதேவரை அடிப்படையாக வைத்து, விட்டுணுவின் அவதாரங்களில் ஒன்ருன இடபமுனிவர் கதை எழுதப்பட்டிருக்கலாம்.

பிருது அவதாரம்.

அங்கன் என்ற அரசனுக்குப் பிள்ளையில்லாக்குறை இருந்தது. அதற்காக அசுவமேத யாகம் ஒன்று நடத்தினன். அதில் புனிதமான பிராமண ரித்விக்குகள் கலந்துகொண்டார்கள். வேதவிதிகளின்படி யாகம் நடத்தப்பட்டப் போதிலும், யாகத்தீயில் சொரியப்படும் அவிர்ப்பாகத்தை ஏற்றுக்கொள்ள கடவுள்களும், தேவர்களும் வரவில்லையாம்.

"குற்றங்குறையில்லாமல் நான் நடத்திய யாகத்தில், கடவுள்கள் வந்து சோம பானத்தை ஏற்றுக்கொள்ள வில்லையே, ஏன்?" என்று சாத்திரம் படித்த முனிவர்களைக் கூப்பிட்டு அரசன் கேட்டான்.

"யாகத்தில் ஒருகுறையும் இல்லை. இந்த சென்மத்திலும் நீ ஒழுக்கந்தவராதவனுக இருந்திருக்கிருய். ஆனல் இதற்கு முந்தைய பிறப்பில் நீ செய்த பாவங்களால் இப்பொழுது பிள்ளையில்லாமல் வருந்துகிருய்! அக்னிதேவனையும் விட்டுணுமூர்த்தியையும் வேண்டிக் கேட்டுக்கொள். உனக்குப் பிள்ளைபிறக்கும்." என்று பிராமணோத்தமர்கள் சொன்னர்கள்

அதன்படி மறுதடவை அரசன் யாகம் நடத்த யாககுண்டத்திலிருந்து பொன்னுடை அணிந்த மனிதன் தோன்றி, ஒரு பொன்பாத்திரத்தில் பாயசத்தைத் தந்துவிட்டு மறைந்தான். அரசன் அந்தபாயசப் பாத்திரத்தை வாங்கி, தனது அரசியிடம் தந்தான். அவள் அந்தப்பாயசத்தைக் குடிக்க, பிறகு பிள்ளை பிறந்தது.

இதேவிதக் கதை இராமாயணத்திலு மிருப்பது கவனிக்கத்தக்கது. தசரதன் நடத்திய யாகத்தில் ஒரு பூதம் பாயசம் நிரம்பிய கிண்ணத்தைத்தந்துபோனதாகவும் அதை நான்கு பகுதிகளாக்கி தசரதனின் மூன்றுமனைவிகளும் அருந்தினர் என்றும், அதன்பின் நான்கு பிள்ளைகள் பிறந்தனர் என்றும் இராமாயணம் கதை கூறும். இராமாவதாரத்தில் வரும் கதை, பாகவதத்தில் பிருது அவதாரம் பற்றிய கதையுடன் ஒத்திருக்கிறது.

யாகத்தில் கிடைத்த பாயசத்தின் பயனுல் அங்கனுக்கு ஒரு மகன் பிறந்தான். அவன் வேநன் என்ற பெயருடன் வளர்ந்தான்.

தவம், யாகம் இவைகளின் பலனுய் பிறந்த வேநன, வேதவொழுக்கங்களுக்குப் புறம்பாக இருந்தானும். வீணுகத் துன்பங்களைச் செய்வது, வேட்டை யாடுவது, குழந்தைகளைக் கொல்வது, இப்படி வேநன் மக்களைப் பயத்தில் ஆழ்த்திவந்தான். மகன் செய்யும் அக்கிரமங்களைக் கண்டு மனம் நொந்த அரசன் ஒரு நாளிரவு யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் அரண்மனையைவிட்டு ஓடிவிட்டான்.

அரசன் இல்லாமற் போனதும், திருடர்களும் கொள்ளைக்காரர்களும் நாட்டை அலலற்படுத்தினர்கள். இதைப்பார்த்த பிராமணர்கள் ஒன்றுகூடி யோசித்து, அரசனில்லாத நாடு அவதிப்படும் என்று வேநனை அரசனுக இருக்கச் செய்தார்கள். வேநன் மிகக் கெட்டவனுக இருந்தபோதிலும், அரசன் வேண்டுமென்பதற்காகப் பிராமணர்களால் அரசனுக ஏற்றுக்கொள்ளப்பட்டான். வேநன் அரசனுகப் பட்டமேறியதும், கொள்ளைக்காரர்களைக் கடுமையாகத் தண்டித்தான். அநீதி புரிந்தவர்கள் அடங்கினர்கள். ஆனல் விரைவில், வேநன் அக்கிரமக்காரனுக மாறினன். அரசன் என்ற அதிகாரத்தில் பிராமணர்களை மதிக்காமல் நடந்தான், அவர்களுடைய யாகாதிகாரியங்களை ஆதரிக்கவில்லை. கொள்

ஊக்காரர்களை அடக்க ஒரு அரசனை ஏற் படுத்திவைக்க, அவன் தொல்லைதரும் கொடுங்கோலனாக ஆகிவிட்டானே என்று பிராமண முனிவர்கள் ஒன்றுகூடி ஆலோசித்து, பின் கூட்டமாக வேனனிடம் சென்று தர்மவழிகளையும், வேதமுறைகளையும் சொன்னார்கள். "ஓ! அரசனே! வேதமுறைப் படி நடப்பாயாக! உன்னுடைய நாட்டில் பிராமணர்கள் செய்கிற யாகங்களால், விட்டுணுவின் அம்சமான கடவுள்கள் பிரீதியடைந்து, வேண்டியதைத் தருகிறார்கள். அத்தகைய உயர்ந்தவர்களைப்பற்றி நீ அலட்சியமாக இருக்கக்கூடாது!"

வேனன் அவர்கள் சொல்வதைக் கேட்கவில்லை, "ஓ! முனிவர்களே! தேவர்களுக்குத் தரும் அவிர்ப்பாகங்களை எனக்குத் தாருங்கள். நான்தான் உயர்ந்தவன்" என்று அவன் அகந்தையுடன் பேசினான்.

பிராமண முனிவர்களுக்குக்கோபம் வந்துவிட்டது. "துன்மார்க்கனாகிய இவன் கொல்லப்படவேண்டியவன்! இவன் இருந்தால் உலகம் அழிந்துவிடும்!" என்று அவனைக் கொன்றுவிட்டார்கள்.

வேனனைக் கொன்றதும், முனிவர்கள் காட்டுக்குச் சென்றார்கள். வேனனின தாய் இறந்த மகனின் பிணத்தை மந்திரங்களைச் சொல்லிப் பாதுகாத்து வந்தாள்.

காட்டில் தவஞ்செய்த முனிவர்களைச் சூழ்ந்து இருள் மூடியது, சத்தம் அதிகமாக வந்தது, கொள்ளைக்காரர்கள் நாட்டுக்குள் நுழைந்து — மக்களைக் கொடுமைப்படுத்தினார்கள். கெட்ட காலம் வந்துவிட்டதைப் பார்த்த பிராமணர்கள் மீண்டும் கூட்டம் கூடி, இது அரசனில்லாத குறையால் வந்துள்ளது என்று முடிவுசெய்து மறுபடியும் ஒரு அரசனை வைக்கப் புறப்பட்டார்கள். வேனன் பிள்ளையில்லாமல் இறந்தான். ஆதலால் பட்டத்திற்கு உரிய வாரிசு யாருமில்லை. இறந்தவனுடைய உடல்மட்டும்தான் பாதுகாக்கப்பட்டு வந்தது. வேத மந்திரங்களில் கரைகண்ட முனிவர்கள், பிணத்திலிருந்து ஒரு பிள்ளையை உண்டாக்கலாம் என்று முடிவுசெய்து, பிணத்தின் காலை ஒடித்து, ஒரு உரலில் போட்டுக் கடைந்தார்கள். அவ்வாறு நெடுங்காலம் கடைந்ததன்பின், அதிலிருந்து குள்ளமான கருப்பு மனிதன் வெளிவந்தான். அவனை அரசனாக வைக்கப் பிராமணர்களுக்கு விருப்பமில்லை. அவனைக் காட்டுக்குப் போகும்படி அனுப்பினார்கள்.

பிணத்திலிருந்து பிள்ளையெடுக்கும் வேலையை முனிவர்கள் நிறுத்தவில்லை. வேனனின் இரண்டு கைகளை வெட்டியெடுத்து உரலில் போட்டுக்கடைய ஆரம்பித்தார்கள். இந்தத் தடவை அழகான ஆணும் பெண்ணும் ஆக இரண்டு குழந்தைகள் உரலிலிருந்து வெளிவந்தன. ஆண்குழந்தை விட்டுணுவின் அம்சமாம் — பிருது என்ற பெயர் பெற்றது. பெண் குழந்தை இலட்சுமியின் அம்சமாக வளர்ந்தது.

பிராமணர்கள் ஒன்றுகூடி, பிருதுவை அரசனாகப் பட்டஞ்சூட்டினார்கள். பிருதுவின் கூடப் பிறந்த பெண், அரசியானாள். அதாவது பிருதுவின் மனைவியானாள். விட்டுணுவின் அம்சமான பிருதுவை, தேவர்களும் பிரமருத்ரர்களும் வணங்கி வழிபட்டார்கள். அவன் பட்டமேறியபொழுது, மலர்மாறி பொழிந்து வாழ்த்தினார்களாம்.

விட்டுணு அவதாரமெடுத்து ஆண்டபோதிலும், நாடு வளமடையவில்லை. பூமி வரண்டு, உணவுப்பொருள்கள் வளராமல் இருந்தன. எலும்புந்தோலுமாக மக்கள் மன்னனிடம் வந்து முறையிட்டுக்கொண்டார்கள். பிருதுமன்னனுக்குக் கோபம் வந்து, வில்லையும் அம்பையும் எடுத்துக்கொண்டு பூமாதேவியைத் தண்டிப்பது என்று புறப்பட்டாராம். கோபத்துடன் வரும் பிருதுவைக் கண்டு அஞ்சி நடுங்கிய பூதேவி, ஒரு பசுவின் உருவத்தில் மாறி ஓடத்தலைப்பட்டாள். பிருது அந்தப் பசுவைப் பின்பற்றி வந்தார். களைப்படைந்த பசு ஓடமுடியாமல், திரும்பிவந்து, பிருதுவின் முன் விழுந்துவிட்டது.

"ஓ! பூதேவியே! நீ செய்த குற்றத்துக்காக உன்னை நான் தண்டிக்கப்போகிறேன்?" என்று பிருது கோபத்துடன் சொன்னார்.

பூமிதேவி நடுநடுங்கி, பிருதுவின் முன் விழுந்து வணங்கி, "அரசனே! என்னை மன்னிப்பீராக! ஒரு கன்றைப் பிடித்துவந்து, ஏற்றதொரு பாத்திரத்தை வைத்து, உங்களுக்கு வேண்டிய சாரத்தைப் பாலாகக் கறந்துகொள்ளுங்கள்!" என்று சொன்னாள்.

பிருது ஒத்துக்கொண்டு, மனுவைக் கன்றாக்கி, தன் கையைப் பாத்திரமாக்கி பசுவைக் கறந்தாராம். செடி கொடிகளெல்லாம் நிறைந்தனவாம். பிருது தமக்கும் உலகுக்கும் வேண்டிய சாரங்களையெல்லாம் கறந்துகொண்டார்.

பிருதுவுக்குப்பின் முனிவர்கள் வந்தார்கள். தேவ குருவான பிருகஸ்பதியைக் கன்றாக

வைத்துப் பூமாதேவியைக் கறந்தார்கள். வேதசாரம் கிடைத்தது.

தேவர்கள் தங்களரசனை இந்திரனைக் கன்றுக்கிக் கறந்தார்கள். சோமரசமும் அமிர்தமும் கிடைத்தன.

அசுரர்கள் பிரகலாதனைக் கன்றுக்கிக் கறந்தார்கள். சுரபானம் (மதுவகை) கிடைத்தது.

கந்தர்வர்களும் அப்சரசுகளும் விசுவாசு என்பவனைக் கன்றுக்கி பூமாதேவியிடம் வந்தார்கள். அவர்களுக்கு கந்தர்வத்தேனும், அழகும் கிடைத்தன.

பிதுர்கள் ஒரு மண்பாண்டத்துடன் வந்து, தங்களுக்கு உணவான கவ்யத்தைப் பெற்றுர்கள்.

சித்தர்கள் வந்து, அனிமா, மகிமா ஆகிய எண்வகைச் சித்திகளைக் கறந்தெடுத்தார்கள்.

இப்படியாகக் கிம்புருடர், வித்தியாதரர், நாகர், பூதர், முதலானேர், யாரையாவது கன்றுக்கிப் பூமாதேவியின் முன் நிறுத்தி, தங்களுக்கு வேண்டிய பலன்களைக் கறந்து சென்றுர்கள். பறவைகள், மிருகங்கள், செடி கொடிகள்கூட, பசுவை நோக்கிப் பால் வேண்டி வந்தன.

இவ்வளவு வளங்களையும் தந்த பூமாதேவியைப்பார்த்து, பிருது அரசருக்கு கருணை பிறந்தது. அவளைத் தன் மகள்போலப் பாவித்து ஆதரித்தார். பிருதுவின் மகளாகப் பூமி பாவிக்கப்பட்டதால், பூதேவி பிருதிவி என்று அழைக்கப்பட்டாள்.

பிருது தானெடுத்த அம்பால் மலை முடிகளைத் தட்டிவிட்டு, உலகில் சமமான இடங்களை உண்டாக்கினுராம்.

வீரதீரத்தில் சிறந்த பிருது பூமாதேவியை அடக்கியதும், சரசுவதி நதிக்கரையில் நூறு அசுவமேத யாகங்களைச் செய்யும் நோக்கத்துடன் வேலைகளை ஆரம்பித்தாராம். விட்டுணுவின் அவதாரமான பிருதுவுக்கு தேவர்களெல்லாம் யாகப்பொருள்கள் கொண்டு வந்து கொடுத்தார்கள். பூமியிலுள்ள ஆறுகளெல்லாம் யாகத்திற்காக வேண்டியன செய்தனவாம். பாலாறு, நெய்யாறு, தயிர் ஆறு, மோர் ஆறு, அரிசி ஆறு இப்படி ஒவ்வொரு ஆருக ஓடிவந்தனவாம். மலைகளிலிருந்து இரத்தினங்கள் வந்து விழுந்தனவாம். கடல்கள் முத்துக்களைக் கொண்டுவந்து குவித்தனவாம்.

பிருது செய்யும் யாகத்திற்கு எல்லோரும் உதவிசெய்துகொண்டிருக்க, இந்திரன்மட்டும் தடையாக இருந்தான். நூறு அசுவமேத யாகங்கள் நிறைவேறிவிட்டால் தனது இந்திர பதவிபோய் விடுமோ என்ற அச்சம் அவனுக்கு! ஆதலால் யாகத்திற்கு வைத்திருந்த குதிரையை இந்திரன் திருடிக்கொண்டு ஓடி விட்டான். பிருது அவனைத் துரத்திக் கொண்டு வந்தார். யாகப் புரோகிதரான அத்திரி முனிவரும் உடன் வந்தார். இந்திரன் தவசிக் கோலத்தில் இருந்ததால், பிருதுவுக்கு அவனைக் கொல்ல மனம் வரவில்லை. பிருதுவின் மகனை விசித்திர திரசுவனை அத்திரி முனிவர் கூப்பிட்டு, "யாகத்தைக்கெடுத்த இந்திரன் தேவர்களில் மிகத் தாழ்ந்தவன், அவனை உடனே கொன்றுவிடு" என்று கட்டளையிட்டார். விசித்திரசுவன் துரத்திச் செல்ல, இந்திரன் யாகக் குதிரையை விட்டு விட்டு ஓடி மறைந்தான்.

யாகக் குதிரையை மீட்டுவந்து, பிருது யாகஞ் செய்யத் தலைப்பட்டான். இந்திரன் இரண்டாவது தடவையாகக் குதிரையைக் கடத்திச் சென்று விசித்திரவசுவால் தோற்கடிக்கப்பட்டான், மூன்ருவது தடவையாகக் குதிரையை திருடிச் செல்ல வரும்பொழுது, பிருது கோபமடைந்து, அவனைத் தண்டிக்க வில்லையும் அம்பையும் எடுத்தார். யாகப் புரோகிதர்கள் பிருதுவைச் சமாதானப் படுத்தி, "இந்த யாகத்தில் நீங்கள் மிருகங்களைத் தவிர வேறெதையும் வதைபண்ணக் கூடாது. ஆதலால், நீங்கள் பேசாமலிருங்கள்! நாங்கள் இந்திரனை வரவழைத்து கொன்றுவிடுகிறோம்" என்றுர்கள். அதன்படி அந்தப் பிராமணர்கள் மந்திரங்களைச் சொல்லவும் ஆரம்பித்து விட்டார்களாம். இந்திரனுக்கு வரவிருக்கும் ஆபத்தை உணர்ந்த பிரமா அந்த யாகத்தில் தோன்றி, "ஓ! பிராமணர்களே! இந்திரனைக் கொலைசெய்து விடாதீர்கள். இந்திரனும் அரியின் அம்சத்தில் ஒன்று!" என்று சமாதானப்படுத்தி, நூறுக்கு ஒன்று குறைய தொண்ணூற்றென்பது அசுவமேத யாகங்கள் மட்டும் நடத்தும்படி செய்தாராம்.

பின் விட்டுணுவே பிருதுவின் முன்வந்து யோக முறைகளை உபதேசித்தாராம். பிருதுவும் விட்டுணுவின் அம்சமாக அவதரித்தவர். இருந்தாலும் "ஒரிஜினல்" விட்டுணு நேரில் வந்து, "அவதாரம்" விட்டுணுவுக்கு உபதேசம் செய்தார். பின் சனத்குமார முனிவர்களும் உபதேசம் செய்தார்கள். பிருது அரசர், காட்டுக்குத் தம் மனைவியுடன் சென்று, தவமேற்கொண்டு, கடைசியாக விமானமேறி மேலுலகம் போய்விட்டாராம்.

பிருதுவின் கதை பாகவத புராணம், நான்காவது காண்டத்தில், 13 அத்தியாயத்திலிருந்து 23வது அத்தியாயம்வரை சொல்லப்பட்டுள்ளது.

இசைக் கருவிகள்

திரு. நா. பாலுசாமி, எம். ஏ., தமிழ் விரிவுரையாளர் தியாகராயர் கல்லூரி, மதுரை.

தோற்றுவாய்

பண்டைத் தமிழகம் கலையகமாகக் காட்சியளித்தது. பல்வேறு கலைகளின் வளர்ச்சிக்கும் தாய்மொழியாகிய தமிழ் கருவியாக அமைந்திருந்தது. தமிழர் இயல், இசை, கூத்து ஆகிய முத்துறைகளிலும் தமிழை வளர்த்தனர். அதனால், தமிழ் முத்தமிழ் எனப்படுவதாயிற்று. "சங்கத் தமிழ்மூன்றுந் தா" என்ற ஔவையாரின் அருள்மொழி இதனை வலியுறுத்தும்.

ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியையும் வளத்தையும் காட்டுவன மேலே கூறப்பட்ட முத்துறைகளாகும். இயல் மக்களது திட்பத்தையும், இசை அவர் தம் நுட்பத்தையும், கூத்து ஒட்பத்தையும் காட்டவல்லன. இயல் இசை கூத்து என்ற மூன்றனுள்ளும் நடுவணதாகிய இசை தனிச்சிறப்பு வாய்ந்தது. இயலிலும், கூத்திலும் இசை கலந்திருப்பது வெளிப்படை. உரையாலும் பாட்டாலும் இயன்ற இயலில் சொற்கள் முறையே பொருளொடு புணர்ந்தும், அசை, சீர், தளை, தொடை, அடி, எதுகை, மோனை ஆகியவற்றால் இயன்றும் இசையின்பம் தருகின்றன. கூத்தின் சிறப்பை மிகுவிப்பதும், அதற்கு ஏற்ற பின்னணியும் இசையேயாகும். எனவே, இசையே ஏனைய இயல் கூத்துக்களினும் சிறப்புடைத்தாம்.

உலக வாழ்க்கையில் யாவராலும் விரும்பப்படும் தன்மை வாய்ந்தது புகழ். "ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால் பொன்றாது நிற்பதொன்றில்" என்றார் வள்ளுவனாரும். இத்தகைய புகழை இசை என்று வழங்கினர் தமிழர். "ஈதல் இசைபட வாழ்தல்" என்ற பொய்யாமொழித் தொடரே இதற்குப்போதிய சான்றாகும். இதிலிருந்து தமிழரது வாழ்க்கையில் இசைக்கலை எத்துணை இடம் பெற்றிருந்தது என்பது தெற்றென புலப்படும்.

தமிழ் மொழியில் எண்ணற்ற இயற்றமிழ்க் கலை நூல்கள் எழுந்தமைபோலவே, இசை நூல்களும், கூத்துக் கலை நூல்களும் பல தோன்றியிருந்தமை புலனாகின்றது. இசை நுணுக்கம், இசை மரபு முதலிய இசை நூல்களும், செயிற்றியம் முதலிய கூத்திலக்கண நூல்களும் பண்டு வழக்கில் இருந்தமை உரையாசிரியர்களின் குறிப்புக்களிலிருந்து தெரியவருகின்றது. இயற்கலை நூல்களுள் பல கடற்கோளுக்கு இரையாகி ஒழிந்தமை போலவே, இசை நூல்களும், கூத்து நூல்களும் எச்சமற்று இறந்தொழிந்தன. இது பெரிதும் வருந்துதற்குரியது.

பண்டைத் தமிழகத்தில், கவியரசரும் புவியரசரும் ஒருங்குகூடிக் கழகம் நிறுவி, முத்தமிழ்க் கலைகளையும் நன்கு போற்றினர். இதுவே தமிழ்ச்சங்கம் என அழைக்கப் பெற்றது. இச்சங்கத்தில் இயற்புலவரும், இசைப்புலவரும், கூத்துநூற் புலவரும் தனித்தனி அமர்ந்து தத்தம் துறைகளில் சிறந்து விளங்கினர். இச்சங்கத்தின் நிலைக்களமாக விளங்கிய பெருமை பாண்டியர் கோநகரமாகிய மதுரையைச்சாரும். சேர நாட்டுப் புலவரும் சோழநாட்டுப் புலவரும், பாண்டியர் தலைநகரத்தில் வீற்றிருந்தனர். இங்ஙனம், முத்தமிழுக்கும் தமிழ்ச்சங்கத்தில் தனித்தனித் துறைகள் அமைந்திருந்தமை,

"......................
சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்
பலத்து மென் சிந்தையுள்ளும்
உறைவா னுயர்மதிற் கூடலினுய்ந்த
வொண்டீந் தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ வன்றி
யேழிசைச் சூழல்புக்கோ ...."

என்ற மணிவாசகனாரது திருக்கோவைச்செய்யுளடிகளால் தெளியலாம். இப்பாட்டில் "ஒண்டீந் தமிழின் துறை" என்ற தொடர் அகப்புறத் துறைகளால் இயன்ற இயற்றமிழ்ப் பகுதியையும், "ஏழிசைச் சூழல்" என்ற தொடர் இசைத் தமிழ்ப் பகுதியையும் குறிப்பனவாகும். மூன்றாம் பகுதியாகிய கூத்து இப்பாட்டில் குறிக்கப்பட்டிலதேனும், அஃது இருந்தது எனக் கோடல் இழுக்கின்றாம்.

இங்ஙனம், சங்கத்திலே வளர்ந்த முத்தமிழ்ப் பாவைகளுள் இசைத் தமிழ்ப் பாவையின் ஏற்றத்திற்கு உறுதுணை புரிந்த இசைக்கருவிகளைப்பற்றி ஈண்டு ஆராய்வோம் :

இசைக் கருவிகள்

இசை பிறத்தற்குரிய நிலைக்களங்கள் இரண்டாம். ஒன்று கண்டம்; மற்றொன்று கருவி, இவ்விரண்டினின்றும் எழும் இசைப் பாடல்கள் முறையே கண்டப் பாடல் (வாய்ப்பாட்டு), கருவிப் பாடல் எனப்படும். கண்டத்தால் எழுப்பப்படும் இசைப் பாடலுக்கும் கருவிப் பாடல் உறுதுணை புரியவல்லது. இசைவாணர் ஒருவர் கண்டத்தால் பாடுகின்றுழி அப்பாடலின் போக்கிற்கும் நோக்கிற்கும் ஏற்பப் பல்வகைக் கருவிகளும் துணை நின்று இசை கூட்டுமேல் அது கேட்பாருக்கு எத்துணை இன்பம் பயக்கும்! இத்தகைய இசை நிகழ்ச்சி பல்லியம் (Orchestra) எனப்படும். இனி, இவ்விசைக் கருவிகளின் வகையும் தொகையும் காண்பாம்.

இசைக் கருவிகள் மூவகைப்படும்; அவை தோற்கருவி, துளைக்கருவி நரம்புக் கருவி என்பன. இவற்றோடு கஞ்சக் கருவி என்றொரு வகை உண்டு. தோலால் போர்ப்புண்டு கையாலும் கடிப்பாலும் தட்ட, இசை தருவது தோற்கருவி. துளையிட்டு அதன் வழியாக இசையெழுப்பப் பயன்படுவது துளைக் கருவி. நரம்புகளுக்கு முறுக்கிட்டு விரலால் தடவ இசை தருவது நரம்புக் கருவி. ஒன்றோடொன்று மோதுறுதலால் இசை பிறப்பிப்பது கஞ்சக் கருவி.

தோற் கருவிகள்

'பண்டைக் காலத்தில் வழங்கிய தோற் கருவிகள் முப்பத்து ஒன்று என்பது சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார் காட்டும் மேற்கோளிலிருந்து தெரிகின்றது. அவை; பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, குடமுழா, கணப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, முழவு, முரசு, தகுனிச்சம், துடி முதலியன. இவை, அகமுழவு, அகப்புற முழவு, புறமுழவு, புறப்புறமுழவு, பண்ணமைமுழவு, நாண்முழவு, காலைமுழவு என எழுவகைப்படும். மத்தளம், சல்லிகை, இடக்கை, கரடிகை முதலியன அகமுழாக்கள், தண்ணுமை, தகுனிச்சம் முதலியன அகப்புற முழாக்கள். கணப்பறை முதலியன புறமுழா. இங்குக் கூறப்படாத நெய்தற் பறை முதலியன புறப்புறமுழா. முரசு முதலியன பண்ணமை முழா. நாழிகைப் பறை நாண்முழா. துடி காலைமுழா. இவ்வாறு பகுத்துக் காட்டுவர் அடியார்க்கு நல்லார். இவற்றுள் காலத்தால் மிக்க தொன்மை வாய்ந்த தொல்காப்பியத்துள் பறை, துடி, முரசு ஆகிய மூன்று தோற்கருவிகளே குறிக்கப்பட்டுள்ளன. இதனால் இவற்றின் பழைமையும் சிறப்பும் நன்கு புலப்படுகின்றன. பறை என்பது கருப்பொருள்களுள் ஒன்று என்று குறிக்கப்பட்டிருத்தலும், அது ஏறு கோட்பறை, தொண்டகப்பறை, நெல்லரிகிணை, மீன் கோட்பறை, சூறைகோட்பறை என முறையே முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலங்களுக்குரியதாகக் காட்டப்பட்டிருத்தலும் இப்பறையினது சிறப்பையும், இது மக்கள் வாழ்க்கையில் பெற்றிருந்த இடத்தையும் நன்கு காட்டுவனவாகும். பறை, சிறுபறை, பெரும்பறை, கிணைப்பறை, கணப்பறை எனப் பலவகைப்படும். சிறுபறை என்பது பிற்காலத்துப் பிரபந்தங்களுள் ஒன்றான பிள்ளைத் தமிழில் ஆண்பாலுக்குரிய விளையாட்டுக் கருவியாகக் குறிக்கப்பட்டதாகும். பெரும்பறை என்பது ஆடல்மகளிர் ஆடும் போது அடிக்கப்படும் பறை. இது முழவுடன் சேர்ந்து ஒலிக்கப்படும். இதனை "உழவர் களி தூங்க, முழவு பணைமுரல் ஆடலறியா அரிவை போலவும்" எனவரும் பரிபாடல் விளக்கும். ஈண்டுப் "பணை" என்பது பெரும் பறையைக் குறிக்கும். கிணைப்பறை என்பது வீரர்கள் போர் புரியுங்கால் போர்க்களத்தே முழக்கப்படுவதொன்றாகும். இதனை "வெம்போர் மள்ளர் தெண்கிணை கறங்க" என்ற பதிற்றுப்பத்து அடி தெளிவுறுத்தும். அன்றியும், கூத்தரும், பொருநரும் ஆகிய பரிசில் வாழ்க்கையர் தமது இசைக்கருவியாகவும் இதனைப் பயன்படுத்தினர், இது "தெண்கண்மாக்கிணை தெளிர்ப்ப ஒற்றி, இருங்கலை ஓர்ப்ப இசைஇ" என்ற புறநானூற்று அடிகளால் விளங்கும். இப்பறை தடாரி எனவும் வழங்கப்பெறும். கணப்பறை என்பது புறமுழவு வகையைச் சார்ந்தது. இது அவ்வப்போது பொழுதினைப் புலப்படுத்த ஒலிக்கப்படும். இப்பறை அறைபவன் பறையன் எனப்படுவான்.

துடியென்பது வீரமறவர் தாம் உள்ளக் கிளர்ச்சி பெறவேண்டி முழக்கும் ஒரு பறையாகும். பகையரசரது நிரை கவர விரும்பும் வீரர், தமக்கு வெற்றி விளையுமாறு கொற்றவையைப் பரவுங்கால் துடிமுழக்கி ஆர்ப்பரிப்பர். இதனை,

"மறங்கடைக் கூட்டிய துடிநிலை சிறந்த
கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே"

என்ற தொல்காப்பிய நூற்பாவாலும்,

"நித்திலஞ்செய் பட்டமும் நெற்றித் திலதமும்
ஒத்திலங்க மெய்பூசி யோர்ந்துடிஇத்—தத்தந்

துடியரோ டுர்ப்புறஞ் சூழ்ந்தார் மறவர்
குடிநிரை பாராட்டக் கொண்டு.''

என்ற மேற்கோள் வெண்பாவாலும் அறிய லாம்.

முரசு என்பது தோற்கருவிகளின் அரசெனத்தகும். இஃது அரசர்க்கே உரியது. இவ்வுண்மையை,

'படையுங் கொடியுங் குடையு முரசு
நடைநவில் புரவியுங் களிறுந் தேருந்
தாரு முடியு நேர்வன பிறவுந்
தெரிவுகொள் செங்கோ லரசர்க் குரிய''

என்ற தொல்காப்பிய நூற்பா காட்டுகின்றது.

முரசு படைமுரசு, கொடைமுரசு, மணமுரசு எனப்படும். படைமுரசு படையெழுச்சியின் போது கொட்டப்படும். கொடைமுரசு அரசனது கொடைவளத்தை அறிவிக்க அறையப் படும். மணமுரசு அரசனது குடும்பத்தில் நிகழும் மணவினையின்போது அடிக்கப்படும். இவையன்றித் தெய்வ நிகழ்ச்சிகளுக்கும் முரசு அறையப்பட்டது. தமிழகத்தில் பல்வேறு தெய்வங்கட்கும் எழுப்பப்பட்ட கோயில்களில் முரசு இடம்பெற்றிருந்தது. தெய்வங்களுக்கு விழா நிகழ்த்துங்கால் அதனை மக்களுக்கு அறிவிக்க முதுகுடிப் பிறந்த வள்ளுவர் ஒருவர் யானைமீது இவர்ந்து முரசறைதல் வழக்கம். அன்றியும் மக்கள் தெய்வங் களுக்குப் பலியிடும்பொழுதும் முரசினை முழக் குதல் மரபு. இதனை வீரமுரசு என்பர். இது "மயிற்கண் முரசொடு வானபலி யூட்டி'' என்ற சிலப்பதிகார அடிகளால் அறியப்படும்.

முழவு என்பது இக்காலத்தில் மத்தளம் எனப்படும். இது இடைபருத்து, இருதலையும் சிறுத்து, உள்வாங்கி, வாரினால் இறுகக் கட்டப்பட்டிருக்கும். இதற்கு இரண்டு கண்கள் உண்டு; இனிய ஓசை தருவது. இஃது இக்காலத்தில் இசை, நாடக அரங்கு களில் பெரிதும் பயன்படுத்தப் பெறுகின்றது. பறை, துடி, முரசு முதலிய பேரொலிதரும் கருவிகளைச் சோதனை செய்த பின்னர், இன்னிசை தருகின்ற முழவு இறுதியில் கண்டுபிடித்திருக்கப்படவேண்டும். இது பலா அல்லது தேக்கில் குடையப்படுவது.

தண்ணுமை என்பது முழவைக்காட்டிலும் குளிர்ந்த இனிய ஓசையைத் தருவது. அது தோற்கருவிகள் எல்லாவற்றிலும் முதன்மை யானது; பண்ணமைதிகொண்ட கருவி. அதனால் இதனை இளங்கோவடிகள், அரங் கேற்றுகாதையில் தண்ணுமை ஆசிரியர் அமைதிகூறு முகத்தால் வியந்து கூறுகிறார்.

துளைக் கருவிகள்

துளைக்கருவிகளுள் தொன்மை வாய்ந்தது குழல். இது வங்கியம் எனவும் படும். இது மூங்கில், வெண்கலம், கருங்காலி முதலிய வற்றில் செய்யப்படும். ஆயின் மூங்கிற் குழலே சிறந்தது. இது பொதுவாக இருபது விரல் நீளமும் நான்கரை விரல் சுற்றளவும் உள்ளதாகச் செய்யப்படும். இதில் ஏழு துளைகள் இடப்படும்.

திருவள்ளுவர் இசை இனிமைக்கு எடுத் துக் காட்டாக குழலையே முதலில் அமைத்துள் ளார். "குழலினிது யாழினிது'' என்ற தொடர் இதனை விளக்கும். குழலின் சிறப்பைப் பரி பாடல் "ஏழ்புழை ஐம்புழை யாழிசை கேழ்த் தன்ன'' எனப் பாராட்டுகின்றது. இவ்வடியின் கண் ஏழு துளைகளையும் ஐந்து துளைகளையும் உடைய குழல் முதலிடம் பெற்றிருப்பது கவ னிக்கத்தக்கது. பண்டு போலவே இன்றும் இவ்விசைக் கருவி இசையரங்குகளில் பெருஞ் சிறப்புற்று வருவது மகிழ்ச்சிக்குரியதாகும். இக்காலத்தில் வழங்கும் நாதசுரம், மகிடி (பாம் பாட்டியின் இசைக்கருவி) முதலியனவும் துளைக் கருவிகளே.

நரம்புக் கருவிகள்

நரம்புக் கருவிகளுள் யாழ் தலைசிறந்தது. இது பேரியாழ், மகரயாழ், செங்கோட்டியாழ், சகோடயாழ் என நால்வகைப்படும். இனி யாழில் அமைந்துள்ள நரம்பு எண்ணிக்கை யின் சிறுமை பெருமை நோக்கிச் சீறியாழ் பேரியாழ் என இருவகையாகப் பகுப்பாரும் உளர். இவை தவிர, வில்யாழ் என்பதும் பண்டைக்காலத்தில் இருந்ததாகத் தெரிகின் றது. பெரும் பாணாற்றுப் படையுள் இவ்யாழ் குறிக்கப்படுதலே இதற்குச் சான்று. சங்க இலக்கியங்களிலும் இடைக்கால இலக்கியங் களிலும் யாழைப்பற்றிய குறிப்புக்கள் மிக அதிகமாகக் காணக்கிடக்கின்றன. பண்டைக் கால மக்களின் வாழ்க்கையில் யாழ் பேரிடம் பெற்றிருந்தது. இதன் பெருமையை விதந்து கூறும் விபுலானந்தர், "முன்னாளிலே பாணன் கையிலும் பாடினி கையிலுமிருந்த யாழ்கருவி யானது, இளங்கோவடிகள் காலத்திலே இசை யாசிரியன் கையிலும் நாடக மகள் கையிலும் போய்ச் சேர்ந்துவிட்டது. ஆளுடைய பிள்ளை யாருடைய காலத்திலே தெய்வமீந்த பொற் பலகைமீதேறி அன்பர் உள்ளத்தை உருக்கிய அருட்கருவியாயிற்று. கொங்குவேளும் திருத் தக்க தேவரும் நூல் எழுதிய காலத்திலே அர சிளங் குமரிகள் கையில் ஏறி அவர் மனம்

விரும்பிய காதலரை அவருக்கு அளிக்கும் கருவியாயிற்று'' என்றனர்.

இனி, இத்தகைய சிறப்புவாய்ந்த இவ் விசைக்கருவி இன்று இறந்து போயினமை பற்றி இரங்கியழுங்கும் அப்பெருமகனார், சரித்திர கால எல்லைக்கு எட்டாத காலத்திலே வில் யாழ் எனப் பெயரிய குழவியாய் உதித்து, மழலைச் சொற்பேசி, இடையர், இடைச்சியரை மகிழ்வித்துச் சீறியாழ் என்னும் பேதைப் பருவச் சிறுமியாகிப் பாணனொடும், பாடினியொடும் நாடெங்கும் திரிந்து, ஏழைகளும் இதயம் களிப்பெய்த இன்சொற்கூறி, பின்பு பேரியாழ் என்னும் பெயரோடு பெதும்பைப் பருவம் எய்திப்பெரும் பாணரோடு சென்று, குறுநில மன்னரும், குடிமன்னரும், தமிழ்ப் புலவரும், கொடைவள்ளல்களும் கேட்டு வியப்பெய்தும் வண்ணம் நயம்பட உரை பகர்ந்து, அதன்பின் மங்கைப்பருவம் எய்தி அப்பருவத்திற்கேற்பப் புதிய ஆடையும் அணிகலனும் பூண்டு நாடக அரங்கத்திலே திறமைகாட்டி, மடந்தைப்பருவம் வந்து எய்துதலும், திருநீலகண்டப் பெரும்பாணரோடும் மதங்க சூளாமணியாரோடும் அம்மையப்பர் உறைகின்ற திருக்கோயில்கள் பலவற்றை வலம்வந்து, தெய்வ இசையினாலே அன்பர் உள்ளத்தினை உருக்கி, முத்தமிழ் விரகரால் பாராட்டப்பட்டு, அரிவைப்பருவம் வந்து எய்துதலும், அரசிளங்குமரிகளுக்கு இன்னுயிர்ப் பாங்கியாகி அவர்க்கேற்ற தலைவரை அவர்பாற் சேர்த்திச் சீரும் சிறப்பும் எய்திநின்ற யாழ்என்னும் மென்மொழி நங்கை இருந்தஇடம் தெரியாது மறைந்து போயினாள்'' எனக் கூறியுள்ளார்

இனிச் சங்க நூல்களின் துணைகொண்டு யாழின் உறுப்புக்களைப்பற்றிச் சில கூறுவோம். பத்துப்பாட்டைச் சார்ந்த பொருநராற்றுப்படை ஆசிரியர் முடத்தாமக் கண்ணியார் யாழின பல்வேறு உறுப்புக்களைப் பற்றிப் பின்வரும் விளக்கம் தந்துள்ளார். "மான்குளம்பு அழுத்திய இடத்தையொத்த இரண்டருகும் தாழ்ந்துநடு உயர்ந்த பத்தலினையும், விளக்கினது எரிகின்ற நிறத்தை உடைய விசித்துப்போர்த்தலுற்ற தோல், இளஞ்சூலும் செந்நிறமும் உடையோளது அழகிய வயிற்றின் மயிர் ஒழுங்குபோல இரண்டு தலையும் கூடித்தைத்த மரத்தை மூடிய போர்வையினையும், நண்டின் கண்ணைக் கண்டால் ஒத்த முடுக்குதல் அமைந்த ஆணியினையும், எட்டாம் பிறைவடிவை உடைத்தாய், உள்நாக்கு இல்லாத வறிய வாயினையும், பாம்பு தலையெடுத்தால் ஒத்த ஓங்கிய கரிய தண்டினையும், கரிய நிறத்தை உடையோளுடைய முன்கைத்தொடியையொக்கும் வார்க்கட்டினையும், தினையரிசியில் குத்தலரிசியையொத்த விரலால் அசைக்கும் நரம்பின் தொடர்ச்சியினையும் மணமகளது கோலத்தையொத்த காட்சியினையும் உடைய யாழ்'' இவ்வாறு யாழின் உறுப்புக்கள் பலவற்றையும் இயற்கைப் பொருட்களோடு பொருத்திக்காட்டியிருப்பது இன்பம் தருவதாகும். இங்ஙனமே பெரும் பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, மலைபடுகடாம் ஆகிய பாட்டுக்களும் யாழின் உறுப்புக்களை விரித்துள்ளன.

யாழைப்பற்றித் தமிழ் நூல்களில் கூறப்படும் பல்வேறு செய்திகளையும் ஒருங்கு சேர்த்து ஆராய்ந்து, இறந்து போன யாழைச் சிறந்த முறையில் தமது மதிநுட்பத்தால் மீண்டும் செய்துகாட்டி யாழ்நூல்' எனப் பெயரிய ஆராய்ச்சி நூலினை எழுதியருளிய காலஞ்சென்ற விபுலானந்த அடிகளாரின் தமிழ்க்கலைத் தொண்டினை என்னென்பேன்! அப்பெரியாரை இதுகாலை நினைத்தலே அவர்க்குத் தமிழகம் காட்டும் கைம்மாறாகும்.

இறுதியாகக் கஞ்சக் கருவிகளைப்பற்றிச் சிறிது காண்பாம். கஞ்சக் கருவி என்பது ஒன்றோடொன்று மோதுறுதலால் இசையெழுப்பும் கருவியாகும் என்பது கண்டோம். இக்காலத்தில் வழங்கும் தாளம், சாலரா, சப்பளாக்கட்டை முதலியன இவ்வகையைச் சார்ந்தவை. இதுகாறும் இசையின் தன்மையையும், இசைக்கருவிகளின் சிறப்புக்களையும் ஒருவாறு கண்டோம். இங்குக் கூறப்படாத இசைக் கருவிகள் பல உள. விரிப்பிற் பெருகுமென்றஞ்சி அவை விடுக்கப்பட்டன.

வாழ்க தமிழிசை! வளர்க தமிழிசைக் கருவிகள்!!

(மதுரைத் தமிழ்ச்சங்கப் பொன்விழா மலர் 1956.)

★ புதுமணம் ★

(எஸ். ரத்தினம்)

காலைக் கதிரவன் தன் பொன்னொளி பரப்பி மண்ணையும் பொன்னாகக்காட்டி மிளிர்ந்து கொண்டிருந்தது. காலை வந்ததால் களிப்பு மலர்ந்ததெனக் கூறாமல் கூவிக் கூட்டங் கூட்டமாகப் பறந்து செல்லும் புள்ளினங்கள், யாவைக்கும் விருந்தாம் இயற்கை வண்ணங் கள் இவற்றுடன் புத்துணர்ச்சியின் வயப் பட்டு உயிரினங்களெல்லாம் இன்பப்பெருக்கில் நீந்திக்கொண்டிருந்தன. வைகறை எழுமுன் தானெழுந்து வந்தவன்போல ஒரு இளைஞன், கல்லூரிவிடுதி அறையின் கதவைத் தட்டிக் கொண்டிருந்தான். இரவிலே தூக்கத்தைக் கொள்ளமுடியாது, படுக்கையிலே படுத்திருந்த அலுப்பினால்மட்டுமே விடியற்கால நேரத்தில் சற்றே உறங்குவதைக்கொண்ட அவ்வறை யின் உரிமைக்காரி, "யாரது" என்று கேட்டுக் கொண்டேவந்து கதவைத்திறந்தாள். இளை ஞன் முறைப்படி வணக்கம் கூறி, அவளால் அறைக்குள் அழைத்துச் செல்லப்பட்டு அங்குள்ள நாற்காலியில் அமர்த்தப்பட்டான். நாற்காலியில் அவனை உட்காரச்சொல்லிவிட்டு உட்சென்ற நங்கையின் உள்ளத்தில் ஒருவித அதிர்ச்சி, ஆச்சரியம், மகிழ்ச்சி, அச்சம் ஆகியவைகள் ஒருங்கே ஆட்சிசெய்யத் தொடங்கின.

முகங்கழுவி, சிறிதே சுவைநீர்பருகி, வந் திருக்கும் இளைஞனுக்கும் ஒரு குவளையில் கையில் எடுத்துக்கொண்டுவந்து சேர்ந்தாள். "சாப்பிடுதம்பி" என்று அன்பும் அருமையும் தோன்றக்கூறினாள். அவனும் மறுப்பேது மின்றி எடுத்துக்குடித்தான். வைத்தகண் வாங்காமல் அவனையே உற்றுக் கவனித்துக் கொண்டிருந்த அவள், "உன் பேரென்ன" என மெதுவாக வினவினாள். தன்பெயர் அழகப்பன் என்றும், தான் வந்திருப்பது கல்லூரி விழாவின் நிகழ்ச்சியில் தாங்களும் ஒரு பேச்சாளராகக் கலந்துகொள்ளவேண்டு மென்று கேட்டுப்போகத்தானென்றும் கூறி னான். அவன் பெய்ரைக்கேட்டபின் ஏதோ ஒரு புதுவேகம் ஏற்பட்டவளாய் அவன் குடும்பவரலாறுகளைக் கேட்டுத்தெரிந்தாள். இருக்குமிடம் முகவரி ஆகியவற்றைத் தெளிந்தாள். அவளுடைய செயல்களெல் லாம் அவனுக்கு வியப்பாக இருந்தது. அவளுடைய ஆர்வமிகுந்த சொற்கள் அவன் எண்ணத்தை எளிதாகக் குறுக்குவழியில் மாற்றிவிட்டது. அவன் எதை யெதையோ எண்ணமிட்டான். அவள் எண்ணங்கள் எங் கெங்கோ திரிந்து சென்று சஞ்சரித்தன. மேலும் அங்கிருக்க விரும்பாதவனாய், தன் விருப்பத்திற்குரிய பதிலைப்பெற எண்ணி "நீங்கள் பேச ஒப்புக்கொள்கிறீர்களா...என்று இழுத்தாற்போல் பேசினான். ஒப்புக்கொள் வதல்ல, நீ கூறுவனவற்றிற்கு நான் கட்டுப்படு கின்றேன் என்றாள். "ஆனால் நான் சென்று வருகிறேன்" என்று கூறிப் புறப்பட்டுவிட் டான். "அடிக்கடி வந்துபோ! வராமலிருந்து விடாதே" எனக்கூறி வழியனுப்பினாள் அவன் சென்ற திக்கையே சிறிது நேரம்பார்த் துக் கொண்டிருந்தாள். அந்நேரம் பலவேறு நிகழ்ச்சிகள் அவள் கண்முன் நிழலாடின. கடந்த பல ஆண்டுகள் கருத்தின் கண் ணின்று உறுத்தின. அவன் நடையுடை பாவனைகளெல்லாம் அப்படியேயிருந்தது. பேச்சுக் குரலில்கூடமாற்றமில்லை. முன்னை நினைந்து அவள் சிலைபோலானாள்.

"எழில்மிகு பூங்கா. அங்கே தினம் மாலை வேளையில், பலவேறு சுமைகளை இதயந்தாங்க, இடைகுடந்தாங்க அன்னமென நடையுடை யாள் வருவாள். அவளை அகலாது கண் ணேக்க, உள்ளம் வெகு தொலைவிலேயே உரை யாட, ஊரார் அறியாவண்ணம் உறவுகொண் டான் ஒரு உத்தமன். நித்தமும் அவனைக் காணவிட்டால் அவள் உள்ளம் படாதபாடு படும். அவனும் அவ்வாறே. இருவரும் நாளாக மாதமாக ஆண்டுக்கணக்காக உள்ளத் தால் மருவி—உரையால் உறவாடி வாழாது வாழ்ந்து வந்தனர். இடையே மணப்பருவம் வந்தெய்தியது. அவள் ஏழைஎன்பதை அவன் நன்கறிவான். அதற்காக இதயத்தை எடுத் தெறியும் தன்மை அவனுக்கில்லை. அவளும் அவனைவிட்டுப் பிரிய விரும்பவில்லை. சாவ தாயினும் சேர்ந்தே சாவோமென்று முடிவு கட்டினர். அவர்களின் நாட்டமெல்லாம்

சீர்வதில்லவே! வாழ்வல்லவர் கருதுகின்றனர். சற்றே அல்லலும் தொல்லேயும் ஏற்பட்டது. சமுதாயத்தின் கண்களுக்குத் திரையிட எத்தனித்தான். பொய்யாலும் புனேந்துரையாலும் சப்பைக்கட்டுக்கட்டிவிட முடியுமா என்ன? எதற்கும் எதையும் கூறும் ஏதுமற்றவர்கள் வாழும் வையமாயிற்றே! ஒருவகையான முடிவுக்கு வந்தான். ஆனவழிகள்பலசெய்து தன்குடும்பத்தாரின் மனநிலேயைச் சரிசெய்து அவளே மணந்துகொண்டான். திருமணம் நிறைவேறிற்று. அவர்கள் மனமும் மகிழ்ச்சிக் கடலில் நீந்தித் திளேத்தது. ஆனுல் அந்த மகிழ்ச்சி நீடித்து நிற்கவில்லே. குடும்பம் தொடங்கிய சின்னட்களிலெல்லாம் பூசல் ஏற்பட்டது. கணவன் மனேவியருக்குள் அல்ல. சம்பந்தங் கொண்டவர்களினிடையே. சமுதாயக் கோட்பாட்டின்படிச் செலுத்தப்பட வேண்டிய சீர்சிறப்பு, இவைகளில் தகராறு ஏற்பட்டது அப்போது அவன் சிறிது கடுமையாகவே தன் குடும்பத்தாரிடை எதிர் வழக்காடினுன். என்ருலும் அவன் எப்படி அவளுடனேயே இருக்க முடியும். அலுவலே நாடிச் சென்றிருக்கும் அமையங்களில் அவளேத் தொல்லேக்குள்ளாக்கினர். கூறத்தகாதனவற்றைக் கூறி உள்ளத்தைக் குத்தாமற் குத்திப் புண்ணுக்கினர். வாய் வார்த்தை கூறி மனந்தேறவும் வகையற்றுத் திகைத்தாள். மணவாளன் வந்தபோது சொல்லி ஆற்றிக் கொள்வதையும் அவள் விரும்பவில்லே. ஒன்றியிருந்து உள்ளம் உடைந்தாள். அவள் உள்ளத்தைப்பற்றி அங்கு யாருக்குக் கவலே? அவனும் அறிந்துகொள்ள முடியாவண்ணம்-முகமாற்றம் கூட ஏற்படாமல் மறைத்து நடந்து வந்தாள். அவளது செயல்கள, உள்ளத்திலே மாற்றங்கொண்டவர்களே ஊக்கியது. எத்துணேத் துன்பங்கள் வந்தாலும், தான் துன்பப் படுவதாகக் கணவன் அறிந்தால் அவரது துன்பம் அதிகமாகும் என்பதிலேயே கருத்துக்கொண்டு, தன் நிலேயை அவர் அறியவிடாமல் முயன்று மறைத்துவந்தாள். வீட்டிலுள்ளோரும் 'அவர்கள் இருவரும் சந்தித்துவிட்டால், தங்கள் செயல் அம்பலமாகிவிடுமே' என்பதால் முடிந்த அளவு அவர்களேச் சந்திக்கச் செய்யாமல் இடைப்பட்டுக்கொண்டிருந்தனர். இச்செயல் வீட்டவருக்குத்தந்த வெற்றியைவிட அவளுக்கே அதிக வெற்றியைத் தந்தது. ஆனல் அவ்வெற்றி அவள் வாழ்நாளின் இன்பக்கரையை உடைத்தெரியும் ஆயுதமாக மாறிற்று.

ஒருநாள், அவள் கணவன் ஊரிலில்லாத சமயம்; வார்த்தைகளேப் பூசலாக்கிப் போராட்டமாக்கினர் வீட்டார். அவளோ அதிகநேரப் பொறுமைக்குப்பின் ஒருசில வார்த்தைகள் கூறினுள். அதையே தொடராகக்கொண்டு அவளே அவமானப்படுத்திப் பேசி வீட்டைவிட்டும் வெளியேற்றிவிட்டனர். அவளும் எவ்வளவோ மன்ருடினுள். கெஞ்சினுள். கண்ணீர் விட்டாள். ஏதும் பயனற்றுப்போயிற்று. காரணம் அவர்கள் உள்ளத்தில் ஆட்டமிடுவதெல்லாம் பணப்பேய், தரத்திமிர், வழக்கபழக்கமென்னும் வெறி. அவர்கள் கண்களுக்கு ஏழைகள் நிலே எப்படிப் புலனுகும். அவள் குரல் எவ்வாறு செவிபுகும். கண்ணீரும் கம்பலேயுமாக அவளே வெளியேற்றினர்.

"போடி, போய் உன் அப்பனேயும் ஆத்தாளேயுமே சென்று கேள். தரங்கெட்டதுகளெல்லாம் இடந்தேடிச் 'சம்பந்தம் கொள்கிறது. ஆள் அழகாகவும் சம்பாதிப்பவனுகவும் அல்லவா தேடிப்பிடித்திருக்கிருள். எப்படியோ என்ன பொடியோ போட்டு அவனே மயக்கிக் கைக்குள் போட்டுக்கொண்டாளே! 'அம்மாகிட்டேயா நடக்கும் கைவரிசை' போ போ அன்றைக்குப் பட்டயக்காணியும்—பகட்டான நகையும் செட்டாச் சீரா இருக்குண்ணு புளுகு பேசினவங்களெப்போய்க்கேட்டு வாங்கிக்கிட்டுவந்து வீட்டு வாசல்லே கால்வை. போ. தரித்திரம் புடிச்ச சனியன் எண்ணெக்கு வீட்டுவாசல்லெ கால்வச்சியோ—எந்த நேரத்திலெ வந்தியோ, அப்பவே வீடு குட்டிச்சுவராப்போச்சு. போ— ஏண்டி நிர்க்கிறே." என்ருர்கள்.

"மாமி! அவர் வந்ததும் போகிறேன். அவரில்லாத சமயத்தில் நான் எப்படிப்போவது? நாங்கள் ஏழைதான். அவருடன் வாழ்வதையே விரும்பினேன். உங்கள் பிடிவாதத்தை மாற்ற அவர்செய்த ஏற்பாடுதான் அது. உங்களுக்கு ஒரு பெண்ணிருந்தால் அவளுக்கு இரக்கம் காட்டமாட்டீர்களா? நான் உங்கள் மருமகள்தானே."

மாமி:—எங்களுக்கேண்டி இந்தக்கதி வருது. நீ இருந்தேண்ணு இது என்ன? இதைவிடக் கேவலமான நிலேகூடவரும். அவன் செய்தானுமே! அவனே அப்படி ஆக்கிட்டெ நீ! இல்லேண்ணு எங்கிட்டெ ஒரு பொய்சொல்லி அறிவானு அவன்.

அவள்:—மாமி! கடந்தது கடந்துவிட்டது. நீங்கள் போகச்சொன்னல் நான் எங்கேபோக முடியும். எவ்வளவுதான் தேடினுலும் ஏழை வீட்டில் பணம் எப்படிக் கிடைக்கும்.

மாமி:—அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. நேரே உங்க அப்பாகிட்டெப்போ! பணத்தோட வா! இங்கேயே எங்கேயாவது போயி இருந்துக்கிட்டிருந்தே, நான் ரொம்பப் பொல்லாதவளா இருப்பேன். ஆமா! போ.

என்று கழுத்தைப்பிடித்துத் தள்ளாத வண்ணம் வெளியேற்றிவிட்டார்கள். மகள் திரும்ப வந்துவிட்டாளென்றவுடன் மட்டும் பணமுமா உடன் வந்துவிடப்போகிறது? பணம் கிடைக்கவில்லை, வீட்டிலும் பெற்றோர்களிடமிருந்து ஆதரவு கிடைக்கவில்லை. அவர்களும் சமுதாயப் பேய்க்கு அஞ்சினார்கள். மகள் வாளாவெட்டியாய் வீட்டிலிருக்கிறாளென்று ஊரார் தூற்றுவரே என்று கலங்கினார்கள். "அப்போதே சொன்னேனே கேட்டாயா? பொய்யும் ஏமாற்றும் வேண்டாமென்றேனே என் வார்த்தைகளை மதித்தாயா? இப்போது ஏனிங்கு வந்தாய். இப்போதும் உன் விருப்பப்படி நடந்துகொள்வதுதானே" என்றார்கள். "அப்பா! நான் உங்கள் மகளல்லவா தங்களையல்லாது வேறெங்கு செல்வேன். அவர் எப்படியும் இரண்டொரு தினங்களில் வந்துவிடுவார். வந்ததும் நிச்சயம் இங்கு வருவார். அவரிடம் இதமாகச் சொல்லி விட்டிற்குப் போய்விடுகிறேன். நிச்சயம் அவரென்னை ஆதரிப்பார். நான் இங்கு வந்திருக்கும் உண்மை விவரம், நீங்கள் சொன்னால் தானே ஊராருக்குத் தெரியும். நான் சாதாரணமாக வந்திருப்பதாகவே சொல்லுங்கள்". என்று நோயும் நோய்க்கு மருந்தும் கூறினாள். மறுக்க வகையில்லை: "வார்த்தை காற்றுயிற்றே! எப்படியும் தெரியாமலா போய்விடும்" என்று சொல்லிக்காட்டிவிட்டு அவரும் தன் மருமகன் வரும் வழியையும் நாளையும் எதிர் பார்த்திருந்தார். நாட்கள் வாரமாயிற்று. அவள், தானேசென்று கணவனைக் காண முயன்றாள். தந்தையிடமும் தாயாரிடமும் விடைபெற்றுக்கொண்டு, 'ஏற்றுக் கொண்டால் வாழ்வு இல்லையேல் தாழ்வு' என்ற முடிந்த முடிபுடன் சென்றாள். அவள் எண்ணம் ஒருவகையில் ஈடேறிற்று. மிகமிக முயன்று கணவனைக் கண்டாள். அவன்நிலை யாதென்று அவனைக் கண்டவுடனேயே புரிந்துகொண்டாள். வழக்கம்போல் 'அத்தான்' என்றழைத்தாள். அவன் திருடன் போல் அக்கம்பக்கம் திரும்பிப்பார்த்து அவள் பக்கத்தில் வந்தான். வந்ததும் 'சந்திரா' அது அவளது பெயர். "உன்னை யாரும் பார்த்துவிடவில்லையே!" என்றான். "ஏன் யாரும் பார்க்கக்கூடாத அவ்வளவு கொடுமைக்காரியா நான்" என்று கேட்டாள். மெதுவாகப்பேசு என்று வாயமர்த்தி மற்றுமொரு மறைவான இடத்திற்கு அழைத்துச் சென்றான். அங்கு சென்று இருவரும் பேசினர். நீண்டநேரம் பேசிக்கொண்டிருந்தனர். இறுதியாக "சந்திரா! நீ எங்காவது சென்று உன் சிநேகிதிகள் வீட்டிலாவது தங்கியிரு. நான் எப்படியும் இவர்களைச் சமாதானம் செய்து விடுகிறேன். இப்போதுள்ள நிலையில் நீயும் நானும் தனியாகச் சென்று வாழ்வதைக்கூட நான் வெறுக்கவில்லை. ஆனால் அதற்கும் இடையூறாக அவர்கள் பிரசாரம் செய்திருக்கிறார்கள். ஆகவே அவர்கள் மனம் சரியாகும் வரையில் என் பொருட்டு, நீ உயிருடனிருக்க வேண்டும்" என்று வேண்டிக்கொண்டான். அந்த நிகழ்ச்சிஅப்படியே அவள் கண்முன் காட்சியளித்தது. கடந்தகாலம் அவள் கருத்திலே பலமுறை தோற்றமளித்ததுண்டு. அப்போதெல்லாம் அவள் சிறிதே ஏங்கியிருந்து பின்தேற்றிக் கொள்வாள். புறநிகழ்ச்சிகளெல்லாம் அவளை மீளா வேதனையுள் ஆழ்த்தும். பள்ளிச் சிறுவர்களை அள்ளியணைத்துச் செல்லும் தாய்மார்களைக் காணும் போதும்; கணவன் மனைவியராகச் செல்லும் கட்டிளங் காளையரைக் கண்ணுறுந்தோறும்; இயற்கையின் இணைவுடன் ஒவ்வொரு உயிரினங்களும் உறவாடும்போதும் அவள் உள்ளம் வேதனையால் மோதுறும். பள்ளிச்சிறுருள் எவரேனும் தான் ஏழையென்று கூறிவிட்டால் அவள் கண்களில் நீர்தேங்கிவிடும். தன் உடனுறை ஆசிரியைகளெல்லாம் உல்லாசப் பயணம் செல்லும்போதுங்கூட, தன்நிலையால் அவர்கள் மகிழ்ச்சிக்குக் கேடுவந்துவிடுமென எண்ணி அவர்களுடன் செல்வதில்லை. அவர்களும் அவள் உள்ளத்தை நன்கு உணர்ந்து கொண்டனராதலால் அவளை வற்புறுத்துவதுமில்லை. எனவே அவள் தனிமை நீடித்தே வந்தது. இத்தனை காலம் நெஞ்சைவிட்டு அகலாத பளு அன்று அகன்றதுபோல் 'தோன்றிற்று அவளுக்கு வந்த இளைஞன் அவளுக்கு வாழ்வளிக்க வந்தவனாகத் தென்பட்டான். கணவனைக் கருதி மறைந்துவிட்ட அவள் நினைவு மீண்டும் உருப்பெற்றது. நெடுநாட்களாக 'அவன் வருவான் அவனை நாம் பெறுவோம் என்று ஆசைப்பட்டுக்கொண்டிருந்த அவள் எண்ணம் அவன் மறுதிருமணச் செய்தியை அறிந்தது முதல் அழிந்து போயிற்று. இன்றுவந்த இளைஞன் அவரைப் போலவே இருந்தான். சந்தேகத்தைப் போக்கிக் கொள்ள தன் கைவசம் இருந்த கணவனின் புகைப்படத்தைப் பார்த்தாள். சற்றும் ஐயப்பாடில்லை அவனது முகவரியைக் கேட்டவுடன்

சிறிது இருந்த சந்தேகமும் நீங்கிவிட்டது. இப்போது அந்த முகவரியின்படி அவர் வீட்டுக்குச் செல்ல வேண்டுமென்ற ஆவல் மேலிட்டது. அதற்குத் தன்னையும் மனத்தையும் ஆயத்தம் செய்துகொண்டிருந்தாள்.

இது இவ்வாருக விழாவிற்கு அழைக்க வந்த அழகப்பன் அவளைப்பற்றிய பலவாருன எண்ணங்களுடன் நடந்துகொண்டிருந்தான். "இப்படியும் ஒரு பெண்ணிருப்பாளா? அப்பப்பா! ஆணைக்கண்டால் அப்படியே விழுங்கி விடுவார்கள்போலிருக்கிறதே! உம்... இவள் நடைமுறைகளைப் பார்த்தால் கருத்தில் கள்ளமுள்ளவளாகத் தெரியவில்லை. பின் ஏன் என்னிடம் அவள் அவ்வளவு பரிவு காட்ட வேண்டும். எப்படியோ ஒழிகிறது, கூட்டத்திற்கு ஒப்புக்கொண்டாளே" என்று தனக்குத்தானே பேசிக்கொண்டு வீட்டையடைந்தான். எதையும் தாய்க்கு ஒழித்தறியாத அவன், அந்த நிகழ்ச்சியையும் கூறினுன். அவன் தாயும் அதைக் கேட்டு முதலில் தப்பெண்ணம் கொண்டாலும், இறுதியில் 'எந்த உள்ளம் எதனுல் துடிக்கிறதோ' என்று தன் மூத்தாளான சந்திராவின் கதையைக் கூறிஞள். அதைக் கேட்டபின் ஆசிரியையின் மேல் அவனுக்குப் பரிவு ஏற்பட்டது. தன் தந்தையைப்போல யார் அவள் தவிப்புக்குக் காரணமோ என்று வருந்தினுன். படித்தவனுதலால் சமுதாயமென்னும் சொல்லில் விளையும் கொடுமைகளை எண்ணி வருந்தினுன். இந்தக் கேடுகெட்ட சமுதாயக் கட்டுப்பாடுகள் ஒழிந்தால்தான்-பழமை அடி வருடிகள் அழிந்தால்தான் - மடமை வீழ்ந்தால்தான் மக்கள் மகிழ்வாகவும் மக்களாகவும் வாழ முடியும். அவள் சற்றே இளமை உணர்ச்சிக்குக் கட்டுப்பட்டு இதயத்தை மற்ரெருவனுக்கு ஆக்கி விட்டால்? உடனே சமுதாயமும்—சமுதாயச் சிறப்பிகளும் சீறுவர். விரைவாக எடுத்து வருவர் விபசாரி என்ற பட்டத்தை விமரிசையாகச் சூட்ட. என்று அவன் வாய் அவனையறியாமலே முணுமுணுத்தது. விழாவில் தன் பேச்சிலே இந்தப் பொருளையும் கலந்து கொள்ள வேண்டுமென்ற முடிவுக்கு வந்தான். அப்போது வெளியிலிருந்து யாரோ "தம்பி" என்று அழைக்கும் குரல் கேட்டது. சென்றுபார்த்து "அம்மா" என ஆவல் ததும்பத் தன் தாயை அழைத்தான். அவன் அழைத்த முறையையும் தன்மையையும் கண்டபோது, சந்திராவின்உள்ளம் குளிர்ந்தது. 'தன்னைப்பற்றிய நல்லெண்ணம் இந்தக் குடியில் நிலவுகிறது' என ஊகித்துக்கொண்டாள். உள்ளிருந்துவந்த அழகப்பனின் தாயார் "வாருங்க அக்கா" என்று வாயாற வரவேற்ருள். அவர்கள் இருவரிடையேயும் மௌனம் நிலவியது. அந்த மௌனத்தையே துணையாகக்கொண்டு அழகப்பன் கல்லூரியை நாடிச் சென்றுவிட்டான். 'பாராதே அன்பு பூண்டு, பார்த்தபின் அதனைப்பரிமாறிக் கொள்ளும்' அவர்கள் மௌனத்தில், பல வேறு பொருள்கள் நிறைந்திருந்தன. அதைச் சந்திராவே கலைத்தாள். 'அவர் சௌக்யமாயிருக்கிருரா?' என்று கேள்வியைத் தொடங்கினுள். அதற்கு அவள் தந்த பதிலும் தொடர்ந்த செய்திகளும் அவளுக்குத் தேனினும் மிகவாக இனித்தன.

"அக்கா! நீங்கள்தான் இல்லை. ஆனுல் உங்களைப்பற்றி அவர் பேசாதநாளில்லை. நினைக்காத வேளையில்லை. காணுகின்ற ஒவ்வொரு பொருளுக்கும் அவர் உவமை கூறுவது உங்களைத்தான். 'என்மீது அவருக்கு அன்பிருக்கிறது' என்பதுகூட நான் தங்களைப்பற்றிய செய்திகளை மனங்கோணுமல் கேட்பதால்தான் என்பது எனக்கு நன்ருகத் தெரியும்." என்று அவள் கூறியபோது, சந்திரா தன் கவலையெல்லாம் மறந்து மகிழ்ந்தாள். சிறிதுநேரத்தில் முத்தையா வந்து சேர்ந்தார். முத்தையா என்பதுதான் அவர் பெயர். வந்ததும் கண்கள்கண்டகாட்சி அவர் கருத்து நிறைந்த காட்சியாக இருந்தது. முத்தையாவைக்கண்டதும், நாணத்தாலும், தன் இடத்தில் மற்ரெருத்தி இருக்கின்ருளென்ற காரணத்தாலும் சென்றுவருவதாகக் கூறிக்கொண்டு புறப்பட்டாள்.

"எங்கு போகப்போகிருய் சந்திரா! இங்கு நீ வருவாய் என்று நான் கருதவே இல்லை. நீ இங்குதானிருக்கிருயென்பதை நானறிவேன். உன்னை நிதம் காண்கிறேன். இவ்வூரில் நான் இருப்பதற்குக் காரணமே உன்னைப் பார்க்க முடிகிறது என்பதுதான். நீ பள்ளி மாணவர்களின் நடுவே சென்று கொண்டிருக்கும்போது எட்ட நின்று கண்டு மகிழ்ந்து திரும்புவேன். உன்னை அணுகி உன் விருப்பத்தைத் தெரிந்து கொள்ளலாமென்று ஆசை கொள்வேன். ஆனுல் அந்த ஆசைகளெல்லாம் என் செயலை எண்ணும்போது மறைந்து விடுகின்றது. என்னை நீ ஏற்றுக்கொள்வாயென்று என்னுல் நம்பவே முடியவில்லை. அப்படியிருக்க, நீயே வந்து என்னை ஆட்கொண்டுவிட்டாய். அதன் பிறகும் போகிறேன் என்கிருயே! ஆழப் பேராற்றில் நெடுந்தொலைவு நீந்தித் தொல்லைகள் பல ஏற்று முடிவில் கரையைக் கண்டு ஏறி நிற்கும் சமயம் காலைத் தட்டி விடுவதுபோல் கூறுகிருயே! உன்னை நான் இங்கே கண்ட

தும் முதலில் நானே வெளியில் போய்விட நினைத்தேன். ஏனென்றால் நானில்லாதிருந்தால் உன்னை எப்படியும் கல்யாணி (மனைவி) இங்கிருந்து போகவிட மாட்டாள். இரண்டு நாட்கள் நீ பிடிவாதமாகப் போக வேண்டுமென்றாலும் உன் மனதைச் சமாதானப் படுத்தி இங்கிருக்க வைத்து விடுவாள். அதன்பிறகு நான் வரலாமென்றுதான் எண்ணினேன். ஆனால் உன்னை இங்கே கண்டு விட்ட பிறகு இங்கிருந்து செல்ல மனமில்லை. நீயே முரண் செய்தாலும் உன்னை மன்றாடிக் கேட்டு இருக்கச் செய்வது என்று முடிவு செய்துகொண்டுதான் வந்தேன். நீ போகிறேனென்கிறாயே! சந்திரா, நீயில்லாத வீடு, உன் துணையில்லாத வாழ்க்கை, உன்னுடன் உறவாடாத இதயம் இவையெல்லாம் இருண்ட வீடாய், பாலைவனமாய், உடைந்த இதயமாயிருந்து வந்தேன். உன் மாறாத உள்ளம் மறுபடியும் இசைந்தது, குறையாத அன்பு உன்னை இங்கே கொண்டுவந்தது. உன் மேலான குணம் என்மீது இரக்கங் காட்ட வேண்டும். இனி நீ என்னுடனேயே இருக்க வேண்டும். பழைய நம் நட்பு நீடிக்கவேண்டும்'' என்று வேண்டிக்கொண்டான். அந்தச் சொற்கள் அவள் செவி வழிப்புகுந்து, கருத்தினில் உறைந்து, இனித்தது. அவளென்ன மாட்டேனென்று கூறப் போகிறாள். இந்நாள் என்று வரும் என்றுதானே ஏங்கிக்கொண்டிருந்தாள். வந்த நாளை ஏற்காமல் எடுத்தெறியவா விரும்புவாள். எனினும் அவள் உள்ளம் மட்டும் பலவற்றை எண்ணியது.

நான் இங்கேயே இருந்துவிட எண்ணலாம், கூட இருக்கும் கல்யாணி ஒப்புக்கொள்ள வேண்டுமே! ஆயிரந்தானிருந்தாலும் இன்பத்தைக் கூறாக்கி அனுபவிக்க எந்தப் பெண்தான் ஒத்துக்கொள்வாள், அதிலும் எந்நிலையோ பல ஆண்டுகள் பிரிந்திருந்து கூடுகின்ற நிலை. அகலாதிருக்கவே தவித்த என் உள்ளம் விரும்பும். அவளும் மனமிசைந்தால் கேடில்லை, சற்றேமனமாற்றமேற்பட்டுவிட்டால் அவர் வாழ்வின் அமைதியே கெட்டுவிடும். அவள் செயல்களின் தன்மைகள் கூட வேறுபடும். அதிலும் பெண்கள் மனமாற்றத்தில் செய்யும் செயல்கள் அவர்களுக்குமட்டுமல்ல அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் துன்பம் தரத் தொடங்கிவிடும். என்வகையும் அப்படியானால், இதுவரை ஒருவிதத்தில் அமைதியாக இருந்த அவரை இனி எந்த விதத்திலும் அமைதியற்றுப் போகச்செய்ய நானே கருவியானதாக நேரும். இப்போதுள்ள என்நிலையும் சீர்கெடலாகும். அதைவிட நான் என்பழைய நிலையிலேயே இருப்பதுமேல். அவன் உள்ளமோ அவள் அவ்வளவு நேரம் பேசாமலிருப்பதைக் கண்டதும் தன்னை ஏற்றுக்கொள்வதா வேண்டாமா வெனச் சிந்திக்கிறாளோ என்னவோ என்று எண்ணமிடத் தொடங்கிற்று. "ஆம்! அவள் என்னை ஏற்க மறுத்தாலுந்தான் வற்புறுத்த எனக்கென்ன உரிமையிருக்கிறது நானென்ன நல்லதனமான முறையில் நடந்து கொண்டிருக்கின்றேன். பெற்றோரின் பேச்சைத் தட்டமுடியாதவனாக, மனிதனாக இருந்தும் மிருகமும் செய்ய நாணும் வகையில் நடந்திருக்கின்றேன். நீ சென்று எங்காவது தங்கிஇரு என்று சொன்னேனேயல்லாமல் அவள் என்ன ஆனாள் என்பதை எண்ணவே இல்லை. இங்கு வந்தபிறகு அவளைக் கண்டபின் காண நினைத்தேனேயல்லாமல் அவள் கண்ணீரைத்துடைக்க முயற்சிக்கவில்லை. அவளோ என்செயலை இடித்துக் காட்டுவதுபோல இருப்பிடம் அறிந்ததும் இங்கே ஓடோடி வந்திருக்கிறாள். அவள் வந்து நிற்பது என் அறியாமைச் செயலை அணுவணுவாக எடுத்துக்காட்டுகிறது. அவள்என்னைப் பார்க்கிறாள், என்னால் அவளைப்பார்க்கக்கூடவில்லை; அவள் செல்கிறாள், நில்லென்றுகூற நெஞ்சமில்லை - உரைக்க நாவெழவில்லை. அவள் பின்னே செல்கிறேன். அவள் அத்தானென்றால்- அன்பே என்று அருகழைக்கத் துணிவில்லை, என்ன செய்வேன்? என்று தனக்குள் எண்ணி ஏக்கமுற்றான்.

அவளை மாறிமாறிப்பார்த்தான். ஏதோ கூற எண்ணியவன்போல் எத்தனிப்பான். கூற இயலாமல் தத்தளிப்பான். இவ்வாறு அவன் கலங்குவதைக்காண அவள் கண்கள் கலங்கின. மெள்ளநடந்து வேறுபக்கம் சென்றாள். மெதுவாகப் பேசினாள். "அத்தான் நான் இனி இங்கிருப்பதும் ஒன்றுதான் இல்லாதிருப்பதும் ஒன்றுதான். தங்களைக் காண நினைவு வரும்போது இங்குவந்து கண்டு செல்கிறேன். இப்போது சென்றுவருகிறேன்'' என்று போக முயன்றாள்.

'' சந்திரா! உன்னைத் தடுத்து நிறுத்தும் உரிமையும் எனக்கில்லை. ஆனால் உன்னை ஒன்றே ஒன்று வேண்டிக்கொள்கிறேன். நான் செய்த பிழைக்குரிய தண்டனை இவ்வளவு போதும். இனியும் வேண்டாம்.'' என்று கூறித் தடுத்தான்.

இவற்றையெல்லாம் கண்டுநின்ற கல்யாணி இருவரும் நன்மைப்பற்றித்தான் கவலைப்படுகிறார்களோ எனக்கருதியவளாய், அங்கே வந்து ''அக்கா, என்னைப்பற்றிச் சிந்தித்திருக்க

வேண்டாம். நான் முழுமனதுடன் அவருடன் வாழ்வதை வரவேற்கிறேன்'' என்றுகூறி இருவர் கையையும் பொருத்தி வைத்தாள். அந்த இணைப்பை இருவராலும் பிரித்துக்கொள்ள முடியவில்லை.

இதனிடையில் அழகப்பன் வந்து சேர்ந்தான். அவனைக் கண்டதும் "ரூமுக்குப் போய் வருகிருயா தம்பி'' என்றதும், "இல்லையம்மா'' என்று அன்பொழுக மறுமொழி கூறினுன். அவனுக்கு நன்றி செலுத்துவதுபோல் "நானிங்கு வருவதற்குக் காரணம் கண்மணி தான்'' என்று கூறி மகிழ்ந்தாள்.

விழாவிற்குப்போகவேண்டாமாஎன்று கேட்டுக்கொண்டே எல்லாஏற்பாடுகளையும் கவனித்தான். குடும்பத்தினர் அனைவரும் விழாவிற்குச்சென்றனர். விழாப் பேச்சில் "புதுமணம்'' என்ற தலைப்பில் சந்திராவும், "மணம்'' என்ற தலைப்பில் அழகப்பனும் பேசினுர்கள். மற்றவர்கள் பேச்சைவிட அவர்கள் இருவரின் பேச்சும் சிறப்பாயிருந்தது. காரணம் "புதுமணத்தில்'' தன்வாழ்க்கையின் உண்மைதத்துவங்களும், மாந்தர் வாழவேண்டிய முறைகளைத் தான் அனுபவவாயிலாகவிளக்கினுள். 'மணம்' என்பதைக்கொண்டு சமுதாய ஊழல்களையும், செயல்களையும் எடுத்துக்காட்டி சமுதாயக் கேட்டு முறையைத் தன்தாய் வரலாற்றை அடிப்படையாகக்கொண்டு விளக்கினுன் எனவே உண்மைக்குழைக்கப்பெற்ற அப் பேச்சு எல்லாவகையிலும் சிறந்திருந்தது. விழாவில் பேச்சுக்கு முதற்பரிசு என்பதைக் கூட இருவருக்கும் பகிர்ந்துதான் வழங்கப் பெற்றது.

அழியாத இன்பப் பெரும் பரிசுபெற்றிருக்கும் அக்குடும்பத்திற்கு, வழங்கப்பட்ட பரிசும்இன்பத்தையேதந்தது. அந்தப்பேச்சின் நுணுக்கவிளக்கங்களை ஊரார் பேசிமகிழ்ந்து சென்றனர். புதுமணத்தின் இனிமைக்கு முழு உரிமைக்காரியான சந்திரா அன்றுமுதல் புதுமணச்சந்திராவாகவே விளங்கினுள். அவ்வூரில் எவருக்கேனும் கவலை மேலிட்டால்கூட முத்தையன் வீட்டுப்பக்கமாகப்போ கவலையெல்லாம் பறந்துபோகும் என்பார்கள். அவ்வாறு வருவோர்க்கும் வழங்கும் வகையிலே அந்த நல்ல குடும்பத்தில் எந்நாளும் இல்லையென்னுது நிலவியது புதுமணம்.

தூங்குவதற்குப் படுத்துக்கொள்ளவேண்டுமா?

உறங்குவதற்குப் பெரும்பாலான மிருகங்கள் தரையுடன் ஒட்டிப் படுத்துக் கொள்வதைப் பார்க்கிறேம். உடலுக்கு அசைவு குறைந்திருக்கிற காரணத்தால், ஆழ்ந்த உறக்கம் ஏற்படுகிறது. ஆனுல் யானைகள் நின்றுகொண்டே தூங்கும் பழக்கமுள்ளன.

அடர்ந்த காடுகளில் யானைகள் பகல் நேரத்தில் அசைவற்று நின்று கொண்டிருக்குமாம். அப்பொழுது அவை தூங்கிக்கொண்டிருக்கின்றன என்று வேட்டைக்காரர்கள் நிச்சயித்துக்கொள்வார்கள். அவை கூட்டங்கூட்டமாக இருப்பதால் யாராலும் ஏதும் செய்ய முடியாது. காட்டு யானைகள் பகலில் மரத்து நிழலில் நின்று தூங்கிக்கொண்டிருந்துவிட்டு, இரவில் இரைதேடி வருவதற்குக் கிளம்பிவிடும். இரவில் யானைகள் கூட்டமாகப் போகும்பொழுது, சிங்கம் புலி முதலியனகூட விலகிச் சென்றுவிடுமாம்.

காட்டு யானைகள் பகலில் தூங்கியபோதிலும், பழக்கப்பட்ட யானைகள் மனிதர்களைப்போலவே தமது தூங்கும் நேரத்தை மாற்றிக்கொள்ளுகின்றனவாம். பகலில் வேலை செய்துவிட்டு, இரவில் தூங்க ஆரம்பிக்குமாம், அப்பொழுதும் நின்றுகொண்டுதான் அவை தூங்கும். அசையாது நின்றுகொண்டிருந்தால், ஆழ்ந்த உறக்கத்திலிருக்கின்றன என்று தெரியும்.

இந்தியாவின் 'அழியாச் செல்வம்'

ஏ. பி. சம்பந்தம், B. A. (Hons)

அகிலம் அனைத்தும் கோடிக்கணக்கான மக்களின் நோய்க் கூக்குரல் ஓயாமல் எழுந்த வண்ணமிருக்கின்றது. 16½ கோடி மக்களைக் கொண்ட அமெரிக்க ஐக்கிய நாட்டில் நோயின் வேதனையைப்போக்க 2,06,250 மருத்துவர்கள் விரைகின்றனர். 36 கோடி மக்களைக்கொண்ட இந்தியாவிலோ ஒன்பது ஆண்டு சுதந்திரத் திற்குபின் 50,000 வைத்தியர்கள் மெதுவாகத் தலைதூக்கிப் பார்க்க முனைகிறார்கள். 400 ஆண்டுகள் பழமையுடைய அமெரிக்கா, 800 பேர்களுக்கு ஒரு மருத்துவனைக்கொண்டு இருக்கிறது. ஆனால் இப்பாரத புனித பூமியில் 7200 பேர்களுக்கு ஒரு மருத்துவரே உள்ளார்.

அமெரிக்க மருத்துவ நிலையங்களில் 104 மனிதர்களுக்கு ஒரு படுக்கை வீதம் காணப் படுகிறது. ஆனால் நாமோ 4931 மனிதர் களுக்கு ஒரு படுக்கைவீதம் கொடுக்கும் நிலையில் உள்ளோம். சுதந்திரம் பெற்ற ஆண்டாகிய 1947ல் நமது நாட்டில் மருத்துவ நிலையங்களில் 61,000 படுக்கைகள் இருந்தன. 1954ல் அதாவது ஏழாண்டு காலத்திற்குப் பிறகு மொத்தத்தில் 73,000 படுக்கைகளாக அவை வளர்ந்தன. எனவே ஏழாண்டு காலத்தில் அதிகரித்துள்ள படுக்கைகளின் எண்ணிக்கை 12,000 ஆகும். மருத்துவ நிபுணர்கள் நமது நாட்டில் 1000 மக்களுக்கு 7 படுக்கைகள் வீதம் வேண்டும் எனக் கூறு கிறார்கள். அவர்கள் திட்டப்படி, குறைந்த அளவு 25,20,000 படுக்கைகளாவது வேண்டும் இக்கணக்கின்படி தற்சமயம் இருப்பது போக 1,79,000 படுக்கைகள் தேவைப்படு கின்றன.

ஏழாண்டுகளில் 12,000 படுக்கைகளே அதி கரித்து இருப்பதால், நமக்குத் தேவைப்படும் 1,79,000 படுக்கைகளை நாம் பெற இந்தக் கணக்கின்படி 104 ஆண்டுகள் பிடிக்கும். இக் காலத்திற்குள் நாட்டின் மக்கள் தொகை வறுமை, வெள்ளம், பஞ்சம், அரசியற்குழப் பம், தொத்துநோய் முதலிய இன்னல்களுக்கு இடையிலும் சற்றேறக் குறைய 80 கோடி யாகப் பெருகிவிடும். இப்பெருக்கத்தின் காரணமாக மொத்தத்தில் 56,00,000 படுக்கை கள் தேவைப்படும். மீண்டும் இதில் 30,80,000 படுக்கைகள் பற்றுக்குறையாக இருக்கும்.

இந்தியாவின் 'அழியாச் செல்வமான' சில முக்கிய நோய்களின் நிலையை நோக்குவோம்.

க்ஷயரோகம்: இந்தியாவில் ஒவ்வொரு ஆண் டும் 25 லட்ச மக்கள் இந்நோயினால் அவதி யுறுகிறார்கள். இதில் 5 லட்ச மக்கள் மாளு கிறார்கள். அதாவது நிமிடத்திற்கு ஒருவ னைகச் சாகிறான். ராஜகுமாரி அமிர்தகௌரின் க்ஷயரோக சீல்கள் விற்பனைத் திட்டம், மேல் நாட்டின் உதவிகள் முதலியன இருந்தும் 192 க்ஷயரோக நோயாளிகளுக்கு ஒரு படுக்கை வீதம்தான் கொடுக்க முடிகிறது.

மலேரியா: ஆண்டுதோறும் இப்பிணியினால் 750 லட்சம் மக்கள் துன்புறுகிறார்கள். இவர் களில் 8 லட்சம் மக்கள் இயற்கை எய்துகிறார் கள். மற்றும் 8 லட்சம் இதன் மறைமுக விளை வினால் மாண்டு போகின்றனர்.

புற்றுநோய்: இந்நாட்டில் அறுவருக்கு ஒரு வர்வீதம் இந்நோயினால் அல்லலுற்று அவதிப் படுவதாக மருத்துவ நிபுணர்கள் கூறுகிறார் கள். அதாவது 6 கோடி மக்கள் இக்கொடிய நோயினால் பாதிக்கப்படுகிறார்கள். இவர்களில் இரண்டு லட்சம் பேர்கள் இக்கொடிய கூற்று வனுக்குப்பலியாகிறார்கள். அதாவது நாளுக்கு 548 சாவு. நாள்தோறும் மடியும் 2000 மக்களில் பாரதத்தின் தாராள நன்கொடை விகிதம் 27·2 (544 பேர்கள்) சதவீதமாக அமைகிறது.

குஷ்டம்: இந்நாட்டில் அவதிப்பட்டும், அல் லற்பட்டும் நடைப்பிணமாக உலவும் குஷ்டம் பிடித்த மக்கள் 50 லட்சமாக உள்ளனர். இந் நோய் நிவாரணத்திற்குச் செய்துள்ள ஏற் பாடுகள் குறிப்பிட்டுக் கூறும் அளவில் அமையவில்லை.

பைத்தியம்: 7,18,000க்கு மேற்பட்ட பைத்தியத்தினால் பீடிக்கப்பட்டவர்கள் இங்கு காணப்படுகின்றனர். இவர்களில் 12,304 பேர்கள் மருத்துவ விடுதியில் இருந்துவர வசதியுள்ளது. கவனிப்பாரற்று 7,05,698 நோயாளிகள் அநாதையாக அலைகிறார்கள்.

குருடு: இதில் உலகில் முதன்மை இடம் நமக்குத்தான். நம் திருநாட்டில் 20 லட்சம் குருடர்கள் இருக்கிறார்கள். அதாவது உலகக் குருடர்களில் 5-ல் ஒரு பங்கு. வனஸ்பதி நெய் உற்பத்தியாளர்களின் லாபம் பெருகப் பெருக இந்நோயாளிகளின் தொகையும் பெருகிக் கொண்டே வருகிறது என்று சொல்லப்படுகிறது. இந்தியாவில், 32 நிலையங்கள்தான் இந்நோயைத் தீர்ப்பதற்காகக் காணப்படுகின்றன.

பரம்பரை நோயாக ஏற்படும் நோய்களின் கதைகளுக்குக் கணக்கே இல்லை. நம்மைவிட மோசமான நிலை 7 ஆண்டுகளுக்கு முன்னால் சீனாவில்தான் காணப்பட்டது.

உத்தமர் காந்தியார் சுகாதார நிலையைச் சீர்படுத்த ஒருவரை முதன்முதலில் தேர்ந்தெடுத்தார். பெண்கள்தான் இயற்கை மருத்துவிச்சி (Nurse) என எண்ணி முதல் சுதந்திர சுகாதார அமைச்சர் பதவிக்கு ராஜகுமாரி அமிர்தகௌரின் பெயரைக் குறிப்பிட்டார். ஆனால் தாய்மை நிலை எய்தாத ஒருத்தி ஒரு பொழுதும் மருத்துவிச்சியாக அமைய முடியாது என்பதைக் காந்தியார் உணர்ந்தாரில்லை போலும். 67 வயதான குமாரி அமிர்தகௌரி 1947லிருந்து நாட்டின் சுகாதார சுகவாழ்விற்காக யாது செய்துள்ளார் என இங்கு நோக்குவோம்.

கடந்த ஒன்பது ஆண்டு காலமாக இவ்வம்மையார் நாட்டின் சுகாதாரப் பொறுப்பை ஏற்று வருகிறார். ஏதாவது ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்டோ நொண்டிச் சாக்கைச் சொல்லி 13 முறைகள் அயல் நாடுகள்சென்று இருக்கிறார்கள். அவர்களின் முக்கிய பிரயாணங்கள்:

1948—உலக சுகாதார ஸ்தாபனத்திற்கு இந்தியக்குழுத் தலைவராகச்சென்றது.

1949 ,,

1950 ,,

1951 ,,

1952 அக்டோபர்—ரெங்கூன் பிரயாணம் (பர்மா)

1953 மே—மாஸ்கோ பிரயாணம் (ரஷ்யா)

1554 ஜூன்—ஜீனிவா பிரயாணம் (சுவிஸ்ஸர்லாந்து)

1954 மே—ஆஸ்லோ பிரயாணம் (நார்வே)

1954 ஜூன்—லண்டன் பிரயாணம் (இங்கிலாந்து)

1954 அக்டோபர்—நியூயார்க், வாஷிங்டன், ஸான்பிரான்சிஸ்கோ பிரயாணம் (அமெரிக்கா)

1955 அக்டோபர்—பீக்கிங், ஷாங்கே (சீனா)

1956 மே. ஜூன், ஜூலை—நியூயார்க், வாஷிங்டன், பிரின்ஸ்டன், விஸ்கான்ஷின், லாஸ்ஏன்ஜல்ஸ்—(அமெரிக்கா) டோக்கியோ—(ஜப்பான்)

ஆகஸ்டு 1947 இருந்து ஜூலை 1955 வரை 108 மாதங்களாக அமிர்தகௌரி இப்பொறுப்பை வகித்து வருகிறார். இதில் 70 மாதங்கள் அயல் நாடுகளில் கழித்துள்ளார். இந்தப் பிரயாணங்களால் அவர்களது புகழ் அதிகப்பட்டதே ஒழிய மக்களுக்கு எந்தப் பயனும் அளிக்கவில்லை. எஞ்சியுள்ள 38 மாதத்தில் பெரும்பாலும் இவர் நேருவைப் பார்ப்பதிலும் பிரயாணத்திற்கு மூட்டை முடிச்சுகளைக் கட்டுவதிலும் காலத்தைக் கழித்திருக்கலாம்!

அமிர்தகௌர் சீனப் பிரயாணத்தின் பின், புது டெல்லியில் நிருபர்கள் கூட்டத்தில் 1955, அக்டோபர் 31ம்தேதி தனது சுகாதார திட்ட தோல்விகளுக்குக்காரணங்களை விளக்கியுள்ளார்கள். சுகாதாரத் திட்டத்தில் இந்தியா முழுவதற்கும் ஒரே கொள்கையைக் கடைப்பிடிக்க முடியவில்லையென்றும், சுகாதார திட்டங்களில் மாகாணங்கள் சுயேச்சையாக இயங்கி வருவதால் தன் திட்டப்படி முன்னேற முடியவில்லையென்றும் கூறுகிறார். இம்மூதாட்டி குற்றத்தையும் குறைகளையும் மாகாணங்களின் தலையில் போட்டுத் தப்பிக் கொண்டார்.

இப்படிப்பட்ட அமைச்சரைக் கொண்டிருக்கும் இந்தியத் துணைக்கண்டம் எப்படி அவ்வளவு விரைவில் உருப்பட்டு முன்னேற முடியும் என்று எண்ணும்போதெல்லாம் வேதனைதான் உள்ளத்தில் குடியேறுகிறது.

ஏவவும் செய்கலான் தான்றேறுன் அவ்வுயிர்
போஒம் அளவும்ஓர் நோய்

என்று வள்ளுவப் பெருந்தகையார் கூறியுள்ளார். இந்தியாவில் பல்வேறுவகை நோய்க்கிருமிகள் மக்களை வாட்டி வதைத்து வருகின்றன. வள்ளுவரின் கூற்றுப்படி இந்திய அமைச்சர்களும் ஒருவகை நோய்க்கிருமிகளாக இருந்து மக்களின் தொல்லைகளையும், துயரங்களையும் பெருக்கி வருகின்றனர்!

மலாயா வரலாற்றுக் குறிப்புகள்

(புகழேந்திக் கரிகாலனர்)

மலாயா நாட்டின் வரலாறு, ஒருகாலத்தில் கடல் பொங்கி எழுந்து கொள்ளை கொண்ட குமரிக்கண்டத்தின் வரலாற்றேடு துவங்கப் பெறும் பழம் பெருமை பொருந்திய வரலாருக விளங்குகிறது.

எண்பதினுயிரம் ஆண்டுகட்கு முன்னர், கன்னித் தென்கரைக்கு எதிரே ஒரு பூக் கண்டம் இருந்தது. (1) அது தெற்கே ஆஸ்திரேலியா வரையும், வடக்கே விந்திய மலை வரையும், மேற்கே தென்னுப்பிரிக்கா வரையும், கிழக்கே சாந்தா தீவுகள் வரையும் நீண்டகன்று கிடந்ததாம். (2) இப்பூக் கண்டத்தின் கிழக்கு எல்லைகளில் மலாய் நாடும் இணைந்திருந்தது என வரையறுத்துரைக்கப் பெற்றுள்ள கருத்தில் மலாய் நாடு குமரிக் கண்டத்தை தொட்டுக்கொண்டிருந்த ஒரு பழந் தீவாக விளங்குகின்றது. (3)

மக்கள்குலம் தோன்றி வளர்ந்து பன்னெடுங் காலத்திற்குப் பின்னர் பொங்கி எழுந்த கடலால் குமரிக் கண்டம் கொள்ளப்படலாயிற்று. (4) இப் பேரழிவை அறிந்த மக்கள் குலம், அக் கண்டத்தினின்றும் பெயர்ந்து வேறிடங்களை நோக்கி கூட்டம்கூட்டமாகச் செல்லலாயிற்று. (5) இவ்வாறு நிலவிய குடியேற்றத்தால், செங் கடல் வழியே ஆப்பிரிக்காவுக்குச் சென்ற மக்கள் ஆப்பிரிக்கராயினர் என்றும், நடு நிலக் கடலின் மேற்குக்கரை வழியே பாலஸ்தினத்தை அடைந்த மக்கள் பினிசியராயினர் என்றும், பாரசிகக்குடாக்கடல் வழியே சுமேரியாவிற்கு சென்ற மக்கள் சுமேரியராயினர் என்றும், கிழக்குக் கரை நாடுகளில் குடியேறிய மக்கள் பலவகை மக்களாயினர் என்றும் கூறுவர். (6)

சாவா, சுமத்ரா முதலான நாடுகளின் வழியே மக்கள் சீனப் பகுதிகளுக்கும் குடியேறினர். சுமத்ரா வழியே சீனப்பகுதிகளுக்குக் குடியேற்றம் நிலவிய பொழுது, மலாய் நாட்டிலும்மக்கள் குடியேறினரா? என இன்னும் வரலாற்றுர் ஆராய்ச்சி தெளிவுற்றதாகத் தெரியவில்லை. சுமத்ராவிற்கும் சீனப் பகுதிகளுக்கும் இடையில் உள்ள மலாய் நாட்டில் குடியேற்றமே நிலவியிருக்காது என்ற வரலாற்றுர் கருத்தைப் பழம் பொருளாய்வுக் கழகம் தவிர்க்கும் என எதிர்பார்க்கிறோம். சாவாவில் குடியேற்றம் நிலவியதை, அங்குக்கண்டு எடுக்கப்பட்ட பழைய மனித எலும்புக் கூடு நிரூபிக்கின்றது. கிழக்குக் கரைகளில் மக்கள் என்பு முதலான சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டதைக் காரணமாக அடிப்படையாக வைத்துதான் கிழக்குக் கரை நாடுகளில் குடியேற்றம் நிலவியதென கூறுவராயினர்.

---

1. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியின் தமிழ் மொழியின் வரலாறு—67.
2. தென்சீனம், பர்மா, சாவா, சுமத்ரா, மலாத் தீவு.
   டாக்டர் மு. வரதராசனுரின் மொழி வரலாறு—365.
3. எக்கல் என்ற மேற்புல அறிஞர் ஒருவரின் கருத்து.
   எச். எப். பிளாங்போர்ட என்ற ஆராய்ச்சியாளரின் கருத்து.
   B, C. Mazumdar, The Madras Review, July 1922.
   " கன்னித் தென் கரைக் கடற் பழந்தீவங்
   கொல்லங் கூவகம் சிங்களமென்னும் —அகத்தியனுர் பாடல்
4. ஸ்காட் எலியெட் என்பார்—ஐந்தாவது கடற்கோட் காலமே அவ்வெள்ளப் பெருக்கின் காலம் என்பர்.
   " வடிவேல் எறிந்த வான்பகை பொருது
   பஃறுளி யாற்றுடன் பன் மலைய டுக்கத்து
   குமரிக் கோடும் கொடுங் கடல் கொள்ள—சிலப்பதிகாரம், காடுகாண் காதை.
5. டாக்டர் மு. வரதராசனுரின் மொழி வரலாறு—363.
6. நாவலியூர் த. சி. கந்தையா பிள்ளையின் தமிழர் யார் ?—21

இவ்வாறு நிலவிய குடியேற்றத்தின் பொழுதும் தமிழ் நாடும் மலாய் நாடும் இணைந்திருந்தன என்பர். (7)

மலாயா என்ற சொல்யாரைக் குறிக்கும் சொல் என்று இஞ்ஞான்று வழக்கு மிகுகின்றது. மலாயா என்பது மலையம் எனப் பொருதும் என்று ஓர் தமிழ் அறிஞரும், (8) மலாயா என்ற சொல் யூனானிலிருந்து "ஓடிவந்தவர்களை"க் குறிக்கும் சொல் என்றும், இது ஐந்நூறு ஆண்டுகட்கு முன்னர் மூங்கில் பட்டை ஒன்றில் எழுதப்பட்டிருக்கிறது என்றும், ஒரு மலாய் கலைஞரும் கூறுவராயினர். இவ்விரு வகை வழக்குகளில், மலாயா என்ற சொல் ஓடிவந்தவர்களைக் குறிக்கும் என்று கொள்வதற்கு, மூங்கில் பட்டையைத் தவிர, வேறு சான்றுகள் இல்லையாதலால் அக்கொள்கையை விடுப்போம். மலையம் என்ற சொல் மருவி மலாயா என்று வழங்கியிருத்தல் கூடும் எனத் துணியலாம். ஒரு மொழிச் சொல்லைப்பிறமொழி மக்கள் மருவியோ, திரித்தோ வழங்குதல் இயல்பு (9) கலிங்கன் என்ற பேரரசனின் பெயர் திரிந்து, மருவி கிலிங் என வழங்குவது போன்று, மலையம் என்ற செஞ்சொல் மலையா என வழங்கியிருந்தல் துணிபு.

மலாயா என்ற சொல் மொழியியல் ஆய்வுப்படி நாட்டைக் குறிக்கும் சொல்லேயாகும், பழந் தமிழ்ச்சொல்லான மலையமும் இந்நாட்டின் நீண்டு கிடக்கும் மலைகளை உணர்த்தும் சொல்லாக விளங்குவதால், மலாயா என்ற சொல் எந்த மக்களையும் குறிக்கும் பெயர்ச்சொல் ஆகாது எனலாம். எந்த மொழியையும் குறிக்கும் பொருள் சொல் ஆகாது. எனவே, மலையம் என்ற தமிழ்ச்சொல் மருவி மலாயா என வழங்குவதால் அது, இடச்சொல் என்று கொள்ளும் கொள்கையே சாலச் சிறந்ததாகும்.

மலாய் நாடு காடடர்ந்து நீண்ட நிலமாயிருந்த பழங்காலத்தில் தமிழர் இங்கு குடியேறியதாக அறிகிறோம். (10) கி. மு. 1400-ல் தமிழ் வணிகர் கலங்களோடு மலாயா வந்தனர், மலை, காடு முதலான காட்டுப்பகுதி கண்களுக்குத் தென்படவே சீன நாடு நோக்கிப் போய் விட்டனர். அவ் வணிகமக்கள் மலையம் என்று இந்நாட்டைக்குறித்துச் சீன நாட்டில் பேசினர் என்றும், அச் சொல்லே வண்மையுற்று வழங்கியது என்றும் கொள்வார். மேலும் தமிழ் வணிகர் கி. மு. 3000-ல் பாபிலோனுக்கும், சுமேரியாவிற்கும் கலங்களில் பொருள் ஏற்றியது போலவே, கி. மு. 2600-ல் எகிப்துக்கும், கி. மு. 2400-ல் சீன நாட்டிற்கும் முத்து,மிளகு முதலான பொருள்களை எடுத்துச் சென்றனர். (11) இவ்வாறு நிகழ்ந்த வாணிகம் வளமுற்ற நாள்தொட்டு, முசிறியிலிருந்தும் கொற்கையிலிருந்தும் தொண்டியிலிருந்தும் கிளம்பும் கலங்கள் மலாயா தீபகற்பத்திற்கு வந்தன. (12) என்றும் அவை வந்து போன காலம் கி. மு. 1400-ல் என்றும் கூறுவர். மலையம் என்ற இடச்சொல் பிறந்தகாலமும் அதுவேயாகும்.

அதோடு தமிழ் வணிகர், சாவா, சுமத்ரா, மலாயா முதலான நாடுகளோடும் வியாபாரம் நடத்தி வாழ்ந்தனர் என்று மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் இயற்றிய பழந் தமிழ்க் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையும் கூறுகின்றது.

சோழ நாட்டு மக்கள் கரையோரங்களில் மட்டும் பிரயாணம் செய்தனர் அல்லர். அவர்கள் வங்காள குடாக் கடலைக் கடந்து கங்கா நதி, ஐராவதி முகத்துவாரங்கட்குச் சென்றனர். இந்துமகாக்கடலைக் கடந்து மலாயாதீவுக் கூட்டங்களையும் அடைந்தனர், என்பர். (13)

மலாயா நாட்டிற்கு வந்த முதற் குடியேற்றகாரர்கள் பூஜாங் நதிக் கரையில் ஒரு நகரத்தை அமைத்தனர். (14) கலையழகு பொருந்

7. Rev. H. Heras, Studies in Protoindo-Mediterranean Culture, P. 21.
8. தமிழ்துறைத் தலைவர், தேவ நேயப் பாவணர், எம். ஏ; பி. ஓ. எல்.
9. "ஆரியர் தமிழ் என்பதை தமிளோ, த்ரிமிளோ, திரமிளம், திரவிடம் என வழங்கினர் என்பது ஓர் எடுத்துக்காட்டு"
10. "மலாயா, கி. மு. பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமிழாட்சி நடைபெற்ற தமிழர் குடியேற்ற நாடாகவிருந்தது." —தமிழ்துறைத் தலைவர் தேவ நேயப் பாவணர்,
11. தமிழர் வாணிகச் சிறப்பை, அர்த்த சாஸ்திரம் எழுதிய வடநூலாசிரியர் கௌடில்யரும் இலங்கை நாட்டுப் பழைய நூல்களாகிய மகாவமிசம், ராசரத்நாகரி, ராசவழி முதலானவையும் கூறுவன.
12. ஆண்டு மலர் ஒன்றில் கிழக்காசியாவைப்பற்றி எழுதப்பெற்ற கட்டுரையின் கருத்து.
13. திராவிட இந்தியா—59.60. (கட்டுரையின் பக்கம்-2)
14. கிழக்காசியாவைப் பற்றி எழுதப் பெற்ற கட்டுரை ஒன்றின் கருத்து,

திய கோவில் ஒன்றைக் கட்டி, வழிப்படுவதற்குரிய முறையில் நீராழி மண்டபமும், படிக்கட்டுகளையுடையகேணிகளும் அமைத்தனர். கோவில் எழுப்பி வழி பட்ட மக்கள், எவ்வுருவை வைத்து வழிபட்டனர் என்பது தெரியவில்லை. கோவிலின் கலையழகு தமிழரின் கலையழகையும் கைத்திறனையும் காட்டுவதாய் உள்ளது. பூஜாங் நதிக்கரையில் அமைந்தஅம் மாநகரம், உயர்ந்த நகரஅமைப்பு முறையில் தழுவி அமைக்கப்பட்டதாகும். மக்கள் கூடி வாழ்ந்த ஊர்களும், வீடுகளும், ஊர்களைச் சுற்றி பல சிறிய வீதிகளும், நகரத்தோடு அமைந்த நெடிய வீதிகளும் இருந்தனவாம். இம் மக்களின் நாகரீகம் மூவாயிரத்து இருநூறு ஆண்டுகட்கு முற்பட்டதாகும் என்பர் பழம்பொருளாய்வுக்கழக உறுப்பினர்.

பூஜாங் நதிக் கரையில் அமைந்த மாநகரும் விரிவடைந்து பெரிதாகலாயிற்று. வேளாண்மை செய்வதற்குப்போதிய நிலப்பரப்பு வாய்ந்த ஆற்றுப் பகுதிகள் யாவற்றையும் இணைத்து இலங்கசோகம் எனப் பெயரிட்டழைத்தனர். (15) பூஜாங் நதிக் கரையோரத்தில் வாழ்ந்த மக்கள் வேளாண்மை தொழிலை வளமாக்கி மலாயாவில் இலங்க சோகம் என்ற பெயரமைந்த நகரில் நாகரீக மக்களாக வாழ்ந்தனர். பன்னெடுங் காலத்திற்குப் பிறகு வந்த சீனநாட்டு மக்கள் தமிழர் வாழ்வையும், அவர்கள் அமைத்திருந்த மாநகரின் அழகையும், அமைப்பையும் கண்டு வியந்து போயினர். இலங்க சோகம் என்ற சொல்லை "லிங்-யா-சென்-கியா" (Ling-ya-ssen-kia) என்று வழங்கினரும். (16)

இவ்வாறு நகரம் அமைத்து வாழ்ந்த தமிழர் பேர்லிஸ், கெடா முதலான இடங்களிலும் குடியேறி வாழலாயினர். மலாயா நோக்கி வந்த தமிழர், இம் மூன்று இடங்களிலும் பரவி நாகரீகத்தையும், கலாசாரத்தையும் மலாயாவிற்கே அள்ளி, அள்ளி வழங்கிய முதன் மக்கள் என்பதற்கு நிறையசான்றுகள் உண்டு.

கெடா என்று வழங்கும் இடம் பண்டைத் தமிழரால் காழகம் என்று செந்தமிழில் வழங்கப்பட்டது.(17) இவ்விடம் ஒரு சிறந்த துறைமுகப் பட்டினமாக விளங்கியது. மலாயாத் தமிழர் வரலாற்றில் தமிழர் கண்ட மூன்று இடங்களில் ஒன்றான கெடா தமிழர் துறைமுகப்பட்டினமாகும். 18 தமிழ் நாட்டுப்பேரரசின்உரிமையோடு மலாயா வந்து போகும் கலங்கள் கெடாவில் அணிவகுத்து நிற்கும் காட்சி வரலாற்றில், கவின் பயக்கும் காட்சியாம். அத்தோடு, தமிழ் நாட்டை நோக்கி நின்ற பதினேழு நாடுகளில் கெடாவும் ஒன்றும். இதை-

சிங்களஞ் சோனகஞ் சாவகஞ் சீனந் துளுக்குடகங்
கொங்கணங் கன்னடங் கொல்லந் தெலுங்கங் கலிங் [கம் வங்கம்
கங்க மகதங் கடாரங் கவுடங் கடுங்குசலந்
தங்கும் புகழ்த்தமிழ் சூழ்பதினேழ்புவி தாமிவையே(19)

என்று திவாகரம் கூறுகின்றது. தமிழர் வாழ்ந்த இடங்களைத்தமிழர் கூற மறந்தாலும், வரலாறு உரைக்க மறுத்தாலும், பழம் பொருளாய்வுக்கழகம் வெளியிடத் தயங்கினாலும் தமிழ் இலக்கியங்கள் கூறத் தயங்கா. தமிழர் வரலாறும், வாழ்ந்த குறிப்பும் எழுதி வைக்காத ஒருவகை இனமாகையால், எதிர்காலத்தில் தமிழர் வாழ்க்கைக்குத் தமிழ் இலக்கியங்களேபெருந்துணையாம்.

---

15. டி. வி. சதாசிவ பண்டாரத்தாரின் பிற்காலச் சோழர் சரித்திரம் பகுதி 1—170.
16. The Cholas; Vol. I. P. 260.
17. " வடமலைப் பிறந்த மணியும், பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமு மகிலும்
தென்கடன் முத்தும் குணக்கடற் றுகிரும்
கங்கை வாரியுங் காவிரிப் பயனும்
ஈழத்துணவுங் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெளிய வீண்டி "—பட்டினப்பாலை.
18. மலாக்கா, உயர்கோபுர நகர் (கோட்டாத்திங்கி), காழகம் (கெடா)
19. ஈழத்தீவு, கிரேக்க (யவன) நாடு, சாவகநாடு, சீனநாடு, கன்னடப்பகுதி, கூர்க்கு நிலம், கடலோரத்து கானகநாடு, கொடுங்கருநாடு, கடல் கொண்டது போக எஞ்சிய நிலம், ஆந்திரநாடு, ஒரியா நாடு, வங்க நாடு, கங்கபாடி, பாலிமொழி வழங்கிய பழைய நாடு, மலாய் நாட்டின் ஒரு பகுதி,.........................என்பதாகும்.

வினாவும் விளக்கமும்

வினா: சென்னை முதலமைச்சர் திரு. காமராசர் அவர்கள் தி. மு. கழகத்தாரை ரௌவுடிகள் என்று ஏசியுள்ளாரே! அதுபற்றிய கருத்து என்ன ?.

விளக்கம்: அடுத்துவரும் பொதுத்தேர்தலில் திராவிடமுன்னேற்றக் கழகம் போட்டியிடுவது என்று திருச்சியில் நடைபெற்ற இரண்டாவது மாநிலமாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றியதற்குப் பிறகு, தமிழக முதலமைச்சர் தோழர் காமராசர் அவர்கள் இவ்வாறெல்லாம் புலம்பிடத் தலைப்பட்டுள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகம் பொதுத் தேர்தலில் போட்டியிட முன் வந்திருப்பதை அரசியல் பெருந்தன்மையோடு ஏற்றுக் கொள்ள தோழர் காமராசர் அவர்களுக்கு மனம் இடங்கொடுக்கவில்லை. தி. மு. கழகம் போட்டிபோடுவது தம்கட்சிக்குப் பெரும் போட்டியாகவும், தொல்லையாகவும் தோல்வியாகவும் ஆகிவிடுமோ என்று எண்ணி அவர் அஞ்சுகிறார். எனவே தி. மு. கழகத்தின் செல்வாக்கைக் குறுக்கு வழியில், அது எவ்வளவு இழிந்த வழியாக இருந்தபோதிலும், அதில் சென்று குறைக்கவேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டுள்ளார். அத்தகைய முயற்சிகளிலே ஒன்றுதான் மேற்படி கூற்று.

திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய என்னையும், அறிஞர் அண்ணா, சொற்செல்வர் சம்பத், கலைஞர் கருணாநிதி, பேராசிரியர் அன்பழகன் ஆற்றல்வீரர் நடராசன், மாணவர்தலைவர் மதியழகன் போன்றவர்களையும் தோழர் காமராசர் அவர்கள் "ரௌடிகள்" என்று சொல்லி ஏசியுள்ளார். பொதுமக்கள் எங்களையும் பார்த்திருக்கிறார்கள். தோழர் காமராசர் அவர்களையும் பார்த்திருக்கிறார்கள். எங்களையும், தோழர் காமராசர் அவர்களையும் வரிசையாக நிறுத்திவைத்து, எல்லோரையும் பொதுமக்களிடம் காட்டி, "இவர்களில் யார் ரௌடியாக இருக்கக்கூடும்?" என்று வினவினால், பொதுமக்கள் பார்த்தவுடனேயே யாரைச் சுட்டிக் காட்டுவார்கள்? தோழர் காமராசரைத் தான் சுட்டிக்காட்டுவார்களேயல்லாமல், எங்களில் யாரையும் சுட்டிக்காட்ட யாரும முன்வர மாட்டார்களே! அந்த அளவுக்கு அல்லவா தோழர் காமராசரின் தோற்றமும் அவரது இறந்தகால வரலாறும் அமைந்திருக்கின்றன.

மாற்றுக்கட்சியின் கூட்டத்தைக் கலைப்பது-கொடியைக் கிழிப்பது-கொடிக்குத் தீவைப்பது - கொடி மரத்தைவெட்டுவது - மாநாட்டுப் பந்தலுக்கு நெருப்பிடுவது - மாற்றுக்கட்சியினரைக் கண்ட கண்ட இடங்களில், கண்ட கண்ட படைக்கருவிகளைக் கொண்டு தாக்குவது மாற்றுக்கட்சியினரின் மீது வீண்வழக்கு தொடுப்பது-மாற்றுக் கட்சியினரைக் கொலை செய்ய முற்படுவது போன்ற ரௌடிச் செயல்களைக் காங்கிரசுக் கட்சிக்காரர்கள்தாம், திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்துச் செய்து வந்திருக்கிறார்கள். தி. மு. கழகத்தார் அப்படிப்பட்ட இழிசெயல்களில் இறங்கினார்கள் என்றோ, அல்லது அத்தகைய செயல்களுக்கு ஆதரவு தந்தார்கள் என்றோ சொல்ல முடியாது.

உள்ளபடியே காங்கிரசுக்காரர்கள்தாம் ரௌடிகள் என்ற தீர்ப்பு தமிழக (சென்னை) உயர்நீதி மன்றத்தில் வழங்கப்பட்டிருக்கிறது. கரூரில், தம் நாடகத்தை நடத்திக்கொள்ள அனுமதி தரவேண்டும் என்று தோழர் எம். ஆர். இராதா அவர்கள் உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தார். அது நீதிபதி சோமசுந்தரம் அவர்களிடம் தீர்ப்புக்காக வந்தது. அவர் தீர்ப்பில் "எம். ஆர். இராத அவர்கள் கரூரில் நாடகம் நடத்திக்கொள்ள முழு உரிமையும் உண்டு. கரூரிலுள்ள காங்கிரசு ரௌடிகள்தாம் அதனை நடக்கவொட்டாமல் தடுத்து வந்திருக்கின்றனர்" என்று குறிப்பிட்டுள்ளார்கள். சட்டப்படியும் ரௌடிகள் என்று பெயர் பெற்றவர்கள் காங்கிரசுக்காரர்களேயாவார்கள் என்பதை இனியேனும் தோழர் காமராசர் அவர்கள் உணருவார்களாக.

கண்ணாடி வீட்டிலிருந்துகொண்டு, கல்வீட்டின்மீது கல்லெடுத்து எறிவது அறிவுடைமையாகாது ஆனால் அதனைத் தோழர் காமராசர் அவர்கள் செய்ய முனைந்திருப்பது இரங்குவதற்குரியதுதான்!

வினா: "நான் 2000 கோடி ரூபாய் வாங்கி அண்ணாத்துரையிடம் தருகிறேன். அவர் அந்தத் தொகைக்கான திட்டம் தீட்டட்டும். அதனை வெளிநாட்டாரிடம் காண்பிப்போம். அவர்கள் அதனை ஒப்புக்கொண்டால், நான் என் அமைச்சர் பதவியை விட்டுவிடுகிறேன்" என்று திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் கூறியுள்ளாரே, அதுபற்றிய கருத்து என்ன?

தமிழக (சென்னை) அமைச்சர் அவையிலே மிகமிக அருவருக்கத்தக்க அமைச்சர் தோழர் சி. சுப்பிரமணியம் ஆவார்கள் என்று கூறினால், அதனை எவரும் ஒப்புக்கொள்ளவே செய்வர்.

அதிகாரத்தோடும், ஆணவத்தோடும், செருக்கோடும், சினத்தோடும், செயலாற்றுவதும் மாற்றுக் கட்சியினரை இழிவாகக் கருதுவதும், பேசுவதும், நடத்துவதும் அவரை விட்டுப் பிரிக்கமுடியாப் பண்புகளாகி விட்டன, அப்படிப்பட்ட அதிகார மமதையினாலும். அறியாமையாலும் பேசப்பட்ட பேச்சுதான் மேற் சுட்டிக்காட்டப்பட்டிருக்கும் கூற்று.

தோழர் சி. சுப்பிரமணியம் அவர்கள் தம்மைப்பற்றியும், தமது தகுதி, திறமை, அறிவு, ஆற்றல் பற்றியும் மிகவாகக் கணக்குப்போட்டிருக்கிறார் என்பது அவரது கூற்றிலிருந்து தெள்ளத்தெளிவாகிறது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ரூ 6000 கோடி செலவழிக்க இந்தியப் பேரரசு முடிவுசெய்திருக்கிறது. அதில் தமிழகத்திற்கு (சென்னை மாநிலத்திற்கு) ரூ 400 கோடி ஒதுக்கவேண்டும் என்று நிதி அமைச்சர் தோழர் சி. சுப்பிரமணியம் இந்திய பேரரசைக் கேட்டுக்கொண்டார் அவ்வளவு சிறிய தொகையைத்தான் கேட்டார், - அவ்வளவைத்தான் அவரால் கேட்டுக்கொள்ள முடிந்தது. அந்தத் தொகையைக் கூட கொடுக்க இந்தியப் பேரரசுக்கு மனமில்லை. அது ரூ 200 கோடிதான், பாதிதான், கொடுப்பேன் என்று முதலில் வாக்குக்கொடுத்தது. இப்பொழுது ரூ $170\frac{1}{2}$ கோடிதான் தருவேன் என்று எழுதி அனுப்பியிருக்கிறது. வந்து சேரும் போது எவ்வளவு தொகை வருமோ? கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆனது போலவும், உலக்கை தேந்து உளிப்பிடி ஆனது போலவும் தோழர் சுப்பிரமணியம் அவர்கள் கேட்ட தொகை ஆகி இருக்கிறது. தாம் கேட்ட ரூ 400 கோடியையே வாங்கித்தரமுடியாமல், வாயில் விரலை வைத்துக்கொண்டு ஏமாளித்தோற்றத்தைக் காட்டிக்கொண்டிருக்கும் இவர், ரூ 2000 கோடியை வாங்கித் தருவதற்கான ஆற்றல் படைத்தவர், என்று இவரை எப்படி எண்ணமுடியும்? வீண் வீராப்பு! அவ்வளவுதான்!

தமிழகத்தில் புதிய திட்டம் போடுவதற்கு வழியே இல்லாது போலவும் ரூ 2000 கோடி தேவைக்கு மீறியதொன்று என்பது போலவும் எவ்வளவு திட்டம் போட்டாலும் ஏராளமான பணம் மிஞ்சி விடுவதைப் போலவும், தமிழகத்திற்கு அவ்வளவு பணம் தேவையில்லாது போலவும் கருதிக்கொண்டு போலும், தோழர் சுப்பிரமணியம் ரூ 2000 கோடிக்குத் திட்டம் தீட்ட முடியுமா? என்று கேட்கிறார். புதிய பெரியகனரகத்தொழிற்சாலைகள், பஞ்சாலைகள், நூலாலைகள், எஃகுத் தொழிற்சாலைகள், பிற உற்பத்தித் தொழிற்சாலைகள், மின்சாரத்திட்டங்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள். எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலைகள், வெட்டாத கனிவளங்களை வெட்டிஎடுத்தல், நிலத்திலும்-நீரிலும் .வானிலும் செல்லும் போக்குவரத்துச்சாதனங்களை உற்பத்திச் செய்தல், உணவைப் பெருக்குதல், உடையைப் பெருக்குதல், உறையுள்களைப் பெருக்குதல், உல்லாச வசதிகளையும் பெருக்குதல் போன்றவைகளுக்கான திட்டங்களைத் தீட்டுவது என்றால் ரூ 2000 கோடி போதாதே! இதைப்போல் பலமடங்கு தேவைப்படுமே! ரூ2000 கோடிக்குத் திட்டம் தீட்ட முடியுமா என்று ஒரு நிதிஅமைச்சர் கேட்பது சிறுவர் வாயினும் சிரிப்பை விளைவிக்கிறதே!

தமக்குத் திட்டம் தீட்டத் தெரிந்திருப்பதைப் போல், அறிஞர் அண்ணாவுக்குத் திட்டம் தீட்டும் திறமையுண்டா, என்னும் பொருளில் அமைச்சர் கேட்டுள்ளார் என்று வைத்துக்கொன்டாலும், அந்தக் கூற்று அறிவுடையோரால் எள்ளிநகையாடப்படும் தன்மையாகும். ஏனெனில் பொருளாதாரத் திட்டம் தீட்டும் திறமையிலே அமைச்சர் சுப்பிரமணியத்தைவிட அறிஞர்அண்ணா அவர்கள் பலமடங்கு மேம்பட்டவர்களாவார்கள் என்பதை நாட்டவர்கள் நன்கு உணருவார்கள். அறிஞர் அண்ணாஅவர்கள் பொருளாதாரம் படிப்பிலே எம். ஏ. பட்டம் பெற்றவர்கள்; ஆனால் தோழர் சி. சுப்பிரமணியம் அவர்களோ வரலாற்றுப் படிப்பிலே பி. ஏ. பட்டம் பெற்றவர்என்றுகருதப்படுபவர். வரலாற்றுப் பாடம் படித்துப் பி. ஏ. பட்டம் பெற்றவரைவிட, பொருளாதாரப் பாடம் படித்து எம். ஏ. பட்டம்பெற்றவர் ரூ 2000 கோடிக்குத் திட்டம் தீட்ட எல்லாவகையிலும் சிறந்தவராகத் தானே இருப்பார். எட்டுப்பிள்ளைகள் பெற்ற

வளிடம்' பிள்ளைப்பேற்றின் அருமை பெருமை பற்றிப் பாடஞ் சொல்லிக் கொடுக்க மலடி ஒருத்திபுறப்பட்டால், அவள் போக்கு கண்டு ஊராரும், பிள்ளைகள் பெற்றவளும் எப்படிச் சிரிப்பார்களோ, அப்படித்தான் சிரிக்கவேண்டியிருக்கிறது, அறிஞர் அண்ணாவுக்குத் திட்டம் தீட்டத் தெரியுமா என்று அமைச்சர் சுப்பிரமணியம் கேட்பதைக் காணும் போது.

ஏதோ சூழ்நிலைக் கோளாறின் காரணமாக அமைச்சராகிவிட்ட தோழர் சி. சுப்பிரமணியம் அவர்களின் அறியாமைகண்டு எள்ளிநகையாடிக் கழிவிரக்கம் கொள்வோமாக!

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

தோழர் சாமிஅவர்கள் நம்மிடமிருந்து பறிக்கப்பட்டுப் போய்விட்டார்! தோழர் சாமியின் பெயரும், புகழும், செல்வாக்கும் வளர்ந்தோங்குவதுகண்டு பொறாமையும், அழுக்காறும் கொண்ட அற்பர்கள், கருத்துவேற்றுமையைக் கலந்து உறவாடித் தீர்த்துக் கொள்ளத் தெரியாத கயவர்கள, நாகரிகப் பண்பு தெரியாத நயவஞ்சகர்கள், நாட்டைக் காடாக மாற்றிக்கொண்டிருக்கும் கொடியவர்கள், மனித உருவிலே நடமாடும் விலங்கினத்தவர் தோழர் சாமியைக் கொத்தி உயிரைக் குடித்துவிட்டனர்! 'அப்படிப்பட்ட விலங்குணர்ச்சி கொண்டோர்க்குத் தோழர் சாமியின் சாவு இறுதிக் காணிக்கையாக இருக்கட்டும்! இனி மக்கள் மக்களாகவே நடமாடி, மக்களாகவே வாழட்டும்!' என்பதுதான், தோழர் சாமியின் கல்லறை நாட்டினர்க்கு உணர்த்திக்கொண்டிருக்கும் படிப்பினையாகும்!

தோழர் சாமியிடம் பொதுவாகத் தமிழகம்-திராவிடம், குறிப்பாகத் திராவிட முன்னேற்றக்கழகம் எவ்வளவோ எதிர்பார்த்துக்கொண்டிருந்தன. தோழர் சாமி அடுத்த பொதுத் தேர்தலில் தூத்துக்குடித் தொகுதியில் வெற்றி பெற்றுச் சட்ட மன்றம் புகுவார் என்று நாம் எதிர்பார்த்தோம்—தூத்துக்குடி நகரமே எதிர்பார்த்தது. வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைந்தாற்போல தோழர் சாமி சிதைக்கப்பட்டுவிட்டார்! நமது நம்பிக்கையெல்லாம் தூள்தூளாகிவிட்டது!

தோழர் சாமி அவர்கள் யாரும் அவ்வளவு எளிதில் புகமுடியாத புகழுலகுக்குப் போய் விட்டார்! மாற்றாரால் நஞ்சூட்டப்பெற்ற சாக்ரடீஸூம், சிலுவையிலே சிதைந்த ஏசுவும், நெருப்புக் குண்டத்திலே தள்ளப்பட்ட ஜான் பாட்லியும், எரிமரத்தோடு சேர்த்து எரிக்கப்பட்ட புரூனோவும், சுட்டுக்கொல்லப்பட்ட காந்தியாரும் எந்தப் புகழுலகை எய்தினர்களோ, அதே புகழுலகுக்குத்தான் தோழர் சாமியும் சென்றுவிட்டார்! என்றென்றும் அழியாப் புகழைத் தேடிக்கொண்டுவிட்டார்!

தோழர் சாமி நம்மோடு இல்லை; இனி இருக்கவுமாட்டார்! ஆனால் அவர் காட்டிய தொண்டுள்ளமும், ஆற்றிய தொண்டுகளும், அவரது அறிவும் ஆற்றலும் பிறபண்புகளும் நமக்கு என்றென்றும் எடுத்துக்காட்டுகளாக இருப்பனவேயாகும். அவர் கண்ட இலட்சியக் கனவை நனவாக்க நாமெல்லோரும் முயல்வோமாக! அவர் ஒருவராகவே செய்து முடிக்க இருந்த பணியை நாம் பலராகக் கூடியேனும் செய்து முடிப்போமாக! அதுவே அவருக்கு நாம் செலுத்தும் இறுதி வணக்கமும், மரியாதையுமாக இருக்கட்டும். வாழ்க தோழர் சாமியின் உள்ளம்! வளர்க அவர்தம் புகழ்! வெல்க அவர்தம் தொண்டு!

வாழ்க தோழர் கே. வி. கே. சாமி!

—இரா. நெ.

அட்டைப்படம்

தூத்துக்குடியில் படுகொலைக்கு ஆளான

அருமைத் தோழர் கே. வி. கே. சாமி அவர்கள்

மருத்துவ மயக்க மருந்து

7

லண்டன் மாநகரில் ராபர்ட் லிஸ்டன் ஈதர் வாயுவைப் பயன்படுத்தி ரணமருத்துவத்தில் வெற்றிகண்டபோது, சிம்சன் மகப்பேற்றியல் பேராசிரியராக எடின்பரோ பல்கலைக் கழகத்தில் பணியாற்றிவந்தார். லிஸ்டனின் ரண மருத்துவத்தைக் கேள்வியுற்று சிம்சன் லண்டனுக்கு வந்து லிஸ்டனை நேரில் கண்டு ஈதர் மயக்கமருந்தின் உண்மையை அறிந்தார். பல வித எண்ணங்களுடனும் திட்டங்களுடனும் சிம்சன் எடின்பரோவிற்குத் திரும்பினார்.

மகப்பேறு வேதனையை நீக்க ஈதர் மயக்க மருந்து பயன்படுமா? சிம்சன் ஆராய்ச்சியில் இறங்கினார். மணிக்கணக்கில் நிறைவேறும் மகப்பேற்றில் ஈதர், மயக்கநிலையை நீண்ட நேரம் நிலைநிறுத்துமா? ஈதர் மயக்கமருந்தைக் கொடுப்பதில் மகவைப் பெறும் தாய்க்குக் கெடுதி உண்டாகுமா? பிறக்கும் குழந்தை எந்த வகையிலேனும் பாதிக்கப்பட்டுவிடுமா? இவை போன்ற பல ஐயங்களுக்கு சிம்சன் விடை காண வேண்டியவரானார்.

ஈதரின் தன்மையை ஆராய்ந்து, கடைசியில் அதைவிட நன்கு பயன்தரத்தக்க மருந்து கிடைக்குமாவெனத் தேடினார். பலபொருள்களை ஆராய்ந்தார்; கடைசியில் லிவர்பூல் நகரைச்சேர்ந்த ஒரு இயைபியல் வல்லுநர் குளோரபாரம் என்ற பொருளைக் குறிப்பிட்டு அதனை ஆராய்ந்து பார்க்கும்படி சிம்சனிடம் கூறினார்.

குளோரபாரம் சிம்சனுடைய ஆராய்ச்சியில் இடம் பெற்றது. கெய்த், டன்கன் என்ற இரு நபர்களுடன் சிம்சன் ஒரு நாளிரவு குளோரபாரத்தை ஆராயஉட்கார்ந்தார். மூவரும் குளோரபாரத்தை உட்கொண்டனர். விதவிதமான பேச்சுகளை வெளியிட்டு விரைவிலேயே மூவரும் உணர்வற்றநிலையில் விழுந்தனர். சிறிது நேரங் கழித்து முதலில் சிம்சன் எழுந்தார். ஈதரை விட குளோரபாரத்தின் வேகத்தையும், உணர்வற்றநிலையை நீடிக்கச்செய்யும் தன்மையையும் அறிந்தார். இந்த நிகழ்ச்சி 1847-ம் ஆண்டு நவம்பர் திங்களில் நடைபெற்றதாகும்.

இதற்குப்பின் சிம்சன் குளோரபாரத்தை மகப்பேற்றில் பயன்படுத்தத் தயங்கவில்லை. ஒரு பெண்ணிற்கு குளோரபாரத்தைக் கொடுத்து அவள் வேதனையை உணராவண்ணம் ஈன்றெடுக்கச் செய்து வெற்றி கண்டார். அடுத்தடுத்துப் புதிய மகப்பேற்றுமுறை வெற்றியைத் தந்தது. புதியமுறையின் வெற்றியை விளக்கிடும் வகையில் ஒருஅறிக்கை தயாரித்து வெளியிட்டார், யாவரும் மகிழ்வுடன் வரவேற்பர் என்ற எண்ணத்துடன்.

ஆனால் சிம்சனின் வேதனையை நீக்கும் 'நூதன' முறையைக் கண்டித்து பெரியதோர் எதிர்ப்பு தோன்றியது. எதிர்ப்பு முழுவதும் மடாலயங்களிலிருந்தே கிளம்பியது. மகப்பேறு வேதனையை நீக்க முயல்வதைக் கண்டித்து துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டன. மதக்குருமார்கள் பலவித வாதங்களைக் கிளப்பி மயக்க மருந்து முறையைஒழித்துக் கட்ட வெகுவாகப் பாடுபட்டனர்.

"குளோரபாரம், கடவுள் பக்தியைக் குறைத்து சமூகத்தைப் பாழாக்க வந்திருக்கும் ஒரு குட்டிச் சாத்தான்" என்று ஒரு குருமார் கூறினார்.

வேறொருவர் குளோரபாரம் கொடியதொரு போதைப்பொருளெனக் கூறி ஒரு கேலிச் சித்திரமும் வரைந்தார். அதில் ஒரு பகுதியில் மனிதன் தூய்மையாக வாழ்வதைப் போன்றும், மறுபகுதியில் குளோரபாரத்தின் நுழைவால் ஒழுங்கற்று வாழ்வதைப்போன்றும் சித்தரித்திருந்தார்.

"வேதனைக்கிடையேதான் நீ மகவைப் பெற்றெடுத்தல் வேண்டும்" என்ற பைபிளின் வார்த்தைகளை எடுத்துக்காட்டி மதக் குருமார்கள், குளோரபார மயக்க மருந்து முறையை மதத்திற்கு புறம்பான, வேதவாக்குகளை மீறிய ஒரு செயலாகும் என்று கூறினார்.

சிம்சன் இந்த எதிர்ப்புகளைக்கண்டு அஞ்சவில்லை; அவரது ஊக்கமும் முயற்சியும் தளர்வடையவில்லை. எந்த அளவிற்கு அவரிடம்

ஆராய்ச்சித்திறன் உறைந்து கிடந்ததோ அந்த அளவிற்கு அவரிடம் வாதிடும் திறனும் மிகுந்து காணப்பட்டது. மதவாதிகளின் கண்டனக் கருத்துக்களுக்கு சரியான மறுப்புக் கூறும் வகையில் சிம்சன் ஒரு அறிக்கை எழுதி வெளியிட்டார். அந்த அறிக்கைதான் சிம்சனின் எழுத்தாற்றலை வெளிப்படுத்தி நிற்கிறது.

"முன்பு கொடிய அம்மைநோயைத் தீர்க்க வல்ல அம்மை ஊசி குத்தும் முறையைக் கண்டபோது மதவாதிகள் எதிர்த்தனர் 'அம்மை நோய் ஆண்டவனின் விருப்பத்தினாலேயே மனிதனிடத்தில் பரவுகிறது; மாட்டு உடலிருந்து எடுக்கப்பட்ட அம்மைக் கிருமிகளை மனித உடலுக்குள் செலுத்துவது தூய மதக் கோட்பாட்டிற்கு புறம்பான தொரு செயலாகும் 'என்று கூறினர். அம்மை ஊசிக் குத்திக் கொண்டால் மனிதனிடத்தில் மாட்டுக் குணங்கள் நிரம்பிவிடும் என்று கூறி அம்முறையைக் கண்டித்தனர்."

எந்த பைபிளின் சில வாக்கியங்களை தங்கள் கருத்திற்கு ஆதரவாகக்கொண்டு சிம்சனை மதவாதிகள் எதிர்த்தனரோ அதே பைபிளிலிருந்து வேறு சில வாக்கியங்களை எடுத்துக் கூறி மதவாதிகளின் வாதத்தை வென்றார்.

உலகப் படைப்பின்போது ஆண்டவன் ஆதாம் என்ற ஆண் மகனைப் படைத்து, பின் அவனுக்குத் துணைவியாக ஒரு பெண்ணைப் படைக்க வழி தேடினார். கடைசியில் ஆதாமை உணர்வற்ற நிலையில் விழச்செய்து அவனது விலா எலும்பில் ஒன்றையெடுத்து அதனைக் கொண்டு ஏவாள் என்ற பெண்ணை உண்டாக்கி ஆதாமின் விலாவை மூடினார். இது கிருத்தவ மதக்கருத்தாகும்.

சிம்சன் இக்கருத்தை மேற்கோளாகக் கொண்டு, உணர்வற்ற மயக்க நிலையை உண்டாக்கி முதன் முதல் ரணமருத்துவத்தைச் செய்தவர் ஆண்டவனேயாகும் என்பதை எடுத்துக்காட்டி, மதக்கருத்தின்படியே மயக்க நிலை மகப்பேறு முறை வரவேற்கப்படவேண்டிய ஒன்றாகும் என்பதை விளக்கினார்.

இதற்குப்பின் 1853-ம் ஆண்டில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி சிம்சனின் புதிய முறைக்கு ஆதரவளித்ததோடு எதிர்ப்பை அறவே யொழித்தது. அப்போது பிரிட்டிஷ் பேரரசியான விக்டோரியா அம்மையார் தனது ஏழாவது குழந்தையைப் பெற்றெடுப்பதற்கு குளோரபார முறையை ஏற்றுக் கொண்டு எளிதான வகையில் மகவைப்பெற்றார். இதற்குப்பின் மருத்துவ மயக்க மருந்து மகப்பேற்றிலும் வெகுவாக இடம்பெற' ஆரம்பித்தது.

மதவாதிகளின் கொடுமைப் பிடிகளில் மக்கள் வீழாதிருந்திருந்தால் பல நூற்றுண்டுகளுக்கு முன்னரே ரண மருத்துவ மயக்க மருந்து கண்டுபிடிக்கப் பட்டிருக்கலாம். இயற்கையின் தன்மைகளைக் கண்டு எழுந்த அச்சம், அதற்கு ஆக்கந் தந்திடும் மதக் கருத்துகள், அவைகளால் ஏற்படுத்தப்பட்ட சிறைச்சாலை இவைகளிலிருந்து விடுபட்டு அறிவியலுலகில் உலவ மனிதனுக்கு நீண்ட நாள்பிடித்தது.

பல நூற்றுண்டு முயற்சிகளுக்குப் பின் சென்ற நூற்றுண்டின் மத்தியில்தான் மருத்துவ மயக்க மருந்து கண்டுபிடிக்கப் பட்டது. ஆனால் இந்த ஒரு நூற்றுண்டிற்குள் ரண மருத்துவ முறையில் ஏற்பட்டிருக்கிற வளர்ச்சி வியப்பிற்குரியதாகும். சென்ற நூற்றுண்டின் ஆரம்பத்தில் ரண மருத்துவம் எவரும் பார்க்கச் சகியாத ஒரு கோரக் காட்சியாக இருந்தது. இப்போது ரண மருத்துவத்திற்குட்படும் நோயாளியே அமைதியான முறையில் தன்னுடலில் செய்யப்படும் ரண மருத்துவத்தைத் தானே கண்டு கொள்ளக்கூடிய அளவிற்கு ரண மருத்துவம் வளர்ச்சி பெற்றிருக்கிறது.

ரணமருத்துவ மயக்க மருந்துக் கண்டுபிடிப்பில் பலர் பங்கு பெற்றிருக்கின்றனர். அம்பிரி டேவி மயக்கநிலை மருந்திற்கான எண்ணத்தை வெளியிட்டார். ஹென்றி ஹில் ஹிக்மன் மயக்க மருந்தைக்கொண்டு மிருகங்களிடத்தில் ஆராய்ச்சி செய்தார்; மனிதர்களிடத்தில் செய்வதற்கானவாய்ப்புகள் ஏற்படவில்லை. கிராபோர்டு லாங் ஈதரைப் பயன்படுத்தி முதன் முதலாக ரணமருத்துவம் செய்தார்; ஆனால் உலகறியச் செய்யவில்லை. ஹொரேஸ் வெல்ஸ், எண்ணத்தைக் கொண்டு, நைட்ரஸ் ஆக்சைட் வாயுவின் தன்மையைக்கண்டு, முயற்சியில் இறங்கி, வெற்றிபெற்று,' மயக்க மருந்து முறையில் வேதனையற்ற ரண மருத்துவம் என்பதைக் கண்டுபிடித்தார். ஆனால் சூழ்நிலை அவருக்கு ஆதரவளிக்கவில்லை. மார்டன் வெல்சின் வழியைக் கடைப்பிடித்து, ஈதரின் தன்மையை ஜாக்சன் என்பவரிடமிருந்து அறிந்து, ஈதர் மயக்கமருந்தைக் கண்டுபிடித்தார். ஈதர் மயக்க நிலை ரணமருத்துவத்தைக் கண்டு, குளோரபார மயக்கமருந்தைக் கண்டுபிடித்தார் ஜேம்ஸ் யங் சிம்சன்.

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக தோன்றி மறைந்த மதக்குருமார்கள்; மனித சமுதாயத்திற்கு மேற்குறிப்பிட்ட அறிவியல் அறிஞர்கள் செய்த பணியில் இம்மியளவுகூட செய்திருக்கமாட்டார்கள் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

முற்றும்

"சிவகுருவை உதையடா! கொல்லுடா!"

கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் பள்ளிச்சிறுவனாக இருக்கும்போதே தன்மதிப்பு இயக்கத்திடத்தும், தமிழர் இயக்கத்திடத்தும் நீங்காப்பற்றும், தணியா ஆர்வமும் கொண்டிருந்தவர். அவர் பள்ளிப்பருவக்காலத்திலேயே கதை, கட்டுரை, கவிதை, நாடகம் எழுதுவதிலும், நாடக அரங்கிலே நடிக்கவேண்டும் என்பதிலும், பொதுமேடை ஏறிப்பேசவேண்டும் என்பதிலும் மிக்க ஆர்வம் செலுத்தி வந்தார்.

அவர் சிறுவனாக இருக்கும்போதே உணர்ச்சி ஊட்டும் சொற்களை, எழுச்சி மிக்க குரலில், அடுக்கடுக்காய் எடுத்தியம்புவதில் ஆற்றல்மிக்கவராகத் திகழ்ந்தார். 1937-38 ஆம் ஆண்டுகளில் இந்தி எதிர்ப்பு இயக்கம் மிகத்தீவிரமாகப் பணியாற்றி வந்த காலத்தில், திருவாரூரில், இந்தி எதிர்ப்பு ஊர்வலங்கள் நடைபெறும்போது, ஊர்வலங்களின் இடையில் சின்னஞ் சிறுவனாக நின்று ஒலிமுழக்கங்களை, உரத்த குரலில் எழுப்புவார்; ஏனைய மக்கள் "வாழ்க!" அல்லது "ஒழிக!" என்று எதிர் முழக்கஞ்செய்வர். கலைஞர் கருணாநிதி அவர்களின் ஒலிமுழக்கமே மற்றெல்லோரின் ஒலிமுழக்கங்களைக் காட்டிலும் கவர்ச்சிகரமாக இருக்குமாகையால், ஊர்வலத்தில் செல் லும் வலிவுள்ள தொண்டர்கள், அவரைத் தம் தோளில் தூக்கி உட்கார வைத்துக் கொண்டு, யாவரும் காணும்படி ஒலிமுழக்கம் செய்யச்சொல்வர். அவர் பள்ளிச் சிறு வனாக இருக்கும்போதே இயக்கத் தோழர்களின் அன்பையும், ஆதரவையும் பெற்று விட்டார்.

கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் உணர்ச்சிமிக்க கட்டுரைகளை அறிக்கைக ளாகத் தாளில் அச்சியற்றி, முரசொலி வெளியீடுகளாக அவற்றைப் பரப்பிவந்தார். அவர் திருவாரூரில் மாணவர் தலைவராகத் திகழ்ந்து எல்லாவகையிலும் அரும்பணி ஆற்றிவந்தார்.

அவர் முதன்முதலில் எழுதிய நாடகம் 'பழனியப்பன்' என்பது. அதனை அவர் 1942-இல் பள்ளிமாணவனாக இருக்கும்போதே எழுதிமுடித்தார். அதில் அவர் நல்ல பல சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களைக் குழைத்திருந்தார். இயக்கத் தோழர்களாலேயே நடத்தப்பட்ட 'நாகை திராவிட நடிகர் கழகம்' அதனை அரங் கேற்றம் செய்து, நாட்டின் சிற்சில இடங்களில் நடித்துக் காண்பித்தது. குறிப்பாக நாகை, திருவாரூர், விழுப்புரம் பாண்டிச்சேரி ஆகிய இடங்களில் அது நடித்துக்காட் டப்பெற்றது. அந்த நாடகத்தில் கலைஞர் கருணாநிதி அவர்களே உறுப்பேற்றுத் திறம்பட நடித்துவந்தார்.

அந்த நடிகர் கழகம் பாண்டிச்சேரியில் சிலநாட்கள் தங்கி "சாந்தா அல்லது பழனியப்பன்" என்ற பெயரமைந்த அந்த நாடகத்தை நடித்துக் காண்பித்தது. நாடகம் சிறிது பெயரும், புகழும் பெற்றதோடு, பாண்டிச்சேரியில் இயக்கம் வளர் வதற்கு அது சிறிது தூண்டுகோலாகவும் இருந்தது. இது மாற்றுக் கட்சிக்காரர்க் குக் குறிப்பாகக் கம்யூனிசுட்டுக்களுக்குச் சிறிது அருவருப்பையும், பொறுமையையும் தந்தது. அப்பொழுது அதாவது 1945 இல் பாண்டிச்சேரியில் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், வழக்கறிஞர் பெருமாள் ஆகியோரின் முயற்சியில் திராவிடக்கழக மாநாடு ஒன்று நடைபெற்றது. அந்த மாநாட்டிற்கு இயக்கத்தலைவர்கள் அனைவரும் வந்திருந்தனர். ஏற்கனவே கழகவளர்ச்சியைக்கண்டு பொறுமைப்பட்டுக் கொண் டிருந்த கம்யூனிசுட்டுகள் மாநாட்டில் புகுந்து குழப்பம் விளைவித்ததோடு, வழியில் போய்க்கொண்டிருந்த தலைவர்களையும் மடக்கித்தாக்கினர். அப்படித் தாக்கப்பட்ட வர்களில் முக்கிய மானவர்கள் புரட்சிக்கவிஞரும், கலைஞர் கருணாநிதியும் ஆவார்கள். கருணாநிதி அவர்கள் தன்னினைவு அழிந்துபோகும்வகையில் அவரை அடித்துத் துவட்டிவிட்டார்கள் காலிகள். "அதோ போகிறான் சிவகுரு! சிவகுருவை உதை யடா! கொல்லுடா!" என்று சொல்லித்தான் காலிகள் கருணாநிதியை அடித்தார் கள். காரணம் நாடகத்தில் அவர் "சிவகுரு" என்ற உறுப்பை ஏற்று நடித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது அவர்கள் கருணாநிதியை அறிய மாட்டார்கள். சிவ குருவைத்தான் அறிவார்கள்! இயக்க ஆர்வம்தான் அப்படிப்பட்ட தியாகத் தழும்பு களை ஏற்கும்படி தூண்டிற்று!

—இரா. நெடுஞ்செழியன்.

(மலாயா) தமிழ்ப்பெருமக்களுக்கோர் முக்கிய அறிவிப்பு !

தமிழகம் தந்த தனிப்பெரும் பாட்டி அவ்வையின் பெயரால் அகில மலாயாவிலேயே
முதன்முதல் தோன்றிய எங்கள்,

அவ்வை புத்தக நிலையம்.

142, ஜாலன் இட்ரீஸ்; கம்பார், (மலாயா) ஒன்றே !

போலிகளைக்கண்டு ஏமாறுதீர்கள் !!

அன்புடையீர், வணக்கம்,

நீங்கள் நீண்ட நாட்களாக எதிர்பார்த்த தமிழக அறிஞர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், பாவலர்கள் எழுதிய நூல்கள் யாவும் வந்துவிட்டன். மற்றும், தினசரி - வார - மாத - பத்திரிக்கைகளும், ஆங்கில, காமிக்ஸ்-மேக்கிசன், நாவல்களும், மலாய் வார - மாத - பத்திரிக்கைகளும் நாவல்களும் சினிமா - கதை வசன பாட்டு புத்தகங்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

குறிப்பு :—விற்பனையாளர்களுக்குக் கழிவு உண்டு. வெளியூர் ஆர்டர்களை, தாமதமின்றி கவனிக்கப்படும்.

விவரங்கட்கு :

AVVAI BOOK STALL

142, JALAN IDRIS, KAMPAR. MALAYA.

உரிமையாளர் :—கோ. வரதராசன். டெலிபோன் : நெ. 22

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்—ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் :— **வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை**

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

"மன்றம்" அச்சகத்தில் (26, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை-1)
ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.